பயங்கர நகரம்

ங க ர … க ர

தமிழ்வாணன்

மணிமேகலைப் பிரசுரம்
தியாகராய நகரம், சென்னை—17.

முதற் பதிப்பு: டிஸம்பர் 1953

இரண்டாம் பதிப்பு: செப்டம்பர் 1954

மூன்றாம் பதிப்பு: ஏப்ரல் 1955

விலை ரூ. 1—0—0

விற்பனை உரிமை:

பாரதி பதிப்பகம், சென்னை-17.

மாருதி பிரஸ், இராயப்பேட்டை, சென்னை-14.

பயங்கர நகரம்

சங்கர்லால்

சங்கர்லால், ஒரு துப்பறியும் சிங்கம். அவருடைய மூளை, பல லட்ச ரூபாய்களுக்கு இன்ஷூர் செய்யப்பட்டிருக்கிறது. அவருடைய மூளை நுட்பமானது. அதிசயமானது. ஒருவன் மனத்தில் உள்ள எண்ணங்களை எவராலும் சொல்ல முடியாது. ஆனால், சங்கர்லால் கேட்கும் பத்துக் கேள்விகளுக்கு அந்த மனிதன் பதில் சொன்னால் போதும்; சங்கர்லால் அந்தப் பதில்களை மட்டும் வைத்து, அந்த மனிதனின் மனத்தில் உள்ள எண்ணங்களை அப்படியே சொல்லிவிடுவார்! அது மட்டுமல்ல, அவன் செய்திருக்கும் குற்றங்களையும் சொல்லி விடுவார். அவர் கேள்விகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு கொக்கிகள். அந்தக் கொக்கிகளை அவர் போட்டால், அத்தனை விவரங்களும் அதிலே மாட்டிக்கொண்டு வந்துவிடும்! அவ்வளவு அபார மூளை படைத்தவர்!

அரசாங்கத்தார், அவரைப் பெரிய சொத்தாக மதித்து, கோகினூர் வைரத்தைப் போலக் காத்து வருகிறார்கள்.

அவருக்கென்று அவர் விருப்பப்படி, அவர் போட்டுக் கொடுத்த திட்டப்படி, பெரிய பங்களா ஒன்று கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு 25,000 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். அவருடைய மலையாளச் சமையல்காரன், அவர் அந்தரங்கப் பணியாள் மாது, அவர் மெய்க்காவலன் சிங், மற்றும் சில பணியாளர்கள் ஆகியோருக்கு, அரசாங்கத்தாரே, வேண்டிய வசதிகளுடன் சம்பளம் கொடுக்கிறார்கள். சங்கர்லாலுக்கு, ஆளுவோரால் ஹட்ஸன் கார் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

அவர் பங்களா வாசலில், இரண்டு கான்ஸ்டபிள்கள் நீட்டிய துப்பாக்கிகளுடன் நின்று கொண்டிருப்பார்கள். இதைத் தவிர, அவருக்கு வேறு எந்தப் பாதுகாப்பும் கிடையாது. சங்கர்லாலைப்பற்றித் தெரிந்துகொண்டவர்கள், அவருக்கு அந்தப் பாதுகாப்புப் போதுமா என்று ஆச்சரியப்படுவார்கள். அரசாங்கத்தாரும் இந்தப் பாது காப்பு, அவருக்கு எந்த மூலைக்கு என்றுதான் நினைத் தார்கள். ஆனால், சங்கர்லால்தான், “போதும், போதும். இதுவே அதிகம். சங்கர்லாலைக் கொன்றுவிடுவதென்பது அவ்வளவு எளிதான செயலா? எந்தவிதமான பாது காப்பும் இல்லாவிட்டால்கூட, எவராலும் சங்கர்லாலைக் கொல்ல முடியாது. இறைவனைப் பார்த்து என்னை அழைத்துக் கொண்டால்தான். பிறரால் எனக்கு என்றைக்குமே மரணம் இல்லை” என்று சொல்லிவிட்டார்!

“இருந்தாலும், எந்த நிமிடத்திலும், தாங்கள் வேண் டும்போது, சகல பாதுகாப்புகளையும், வசதிகளையும் நாங்கள் செய்துதரத் தயாராய் இருக்கிறோம்” என்று அக்கறை யுடன் சொல்லிவைத்தார்கள் அரசாங்கத்தார்.

சங்கர்லால் எப்படி இருப்பார் என்று தெரிய வேண் டாமா? பாதங்களிலே, எந்த இடத்திலும், எப்பொழுதும் ஓசை செய்யாத, கிரேப் வைத்துப் பெட்ரோலினால் ஒட்டப் பட்ட ஷூ; உடம்பிலே. நீண்ட கால்சட்டை; அதற் குள்ளே விடப்பட்ட சட்டை; கழுத்திலே. பட்டை; கலைந்து கிடக்கும் தலை; வளர்ந்த சிவந்த மேனி; சிரித்த முகம்;

எப்போதும், எதற்கும் கவலைப்படாமல் மகிழ்ச்சியாக இருக்கும் குழந்தைத்தன்மை—இவர்தான் சங்கர்லால்!

இதுவரை சங்கர்லால் தலையிட்ட அத்தனை கொலை வழக்குகளும் அக்கு வேறு, ஆணி வேறாகக் கண்டுபிடிக்கப் பட்டுவிட்டன. கொலை என்றால்—இன்னான், இத்தனை மணிக்கு, இன்ன காரணத்திற்காக, இந்தக் கருவியால் கொலை செய்திருக்கிறான் என்று சொல்லி விடுவார். கொள்ளை என்றால்—இத்தனை மணிக்கு இந்தக் கொள்ளை நடந்திருக்கிறது, இதில் இன்னின்னார் தலையிட்டிருக்கிறார்கள் என்று கச்சிதமாகப் பிசிறு இல்லாமல் சொல்லி விடுவார்! இவ்வளவு தெளிவாக, அந்தக் கொலையையோ, கொள்ளையையோ நேரில் பார்த்தவர்கள்கூட, இந்தமாதிரிக் குழப்பம் இல்லாமல் சொல்ல முடியாது!

சங்கர்லால், இங்கே இருக்கும் கொலை, கொள்ளைகளைத் தாம் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார் என்று நினைத்து விடாதீர்கள். வையகத்திலுள்ள பல நாடுகளிலிருந்தும் அவரை அனுப்பிவைக்கும்படி அரசாங்கத்திற்குக் கடிதங்கள் வருகின்றன. பர்மா, மலேயா, இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், ஆஸ்திரேலியா, நார்வே, ஸ்வீடன், இத்தாலி—இப்படி முக்கிய நாடுகளிடமிருந்தெல்லாம், அவரை அன்புகூர்ந்து அனுப்பி வைக்கும்படி அரசாங்கத்திற்குக் கடிதம் வருகிறது!

சங்கர்லால், வெளிநாடுகளுக்குச் செல்லுவதை அதிகமாக விரும்புவதில்லை. மிகவும் பெரிய வழக்காக இருந்தால் மட்டும் தீராத வற்புறுத்தலுக்கு இணங்கி மறுக்க முடியாமல் போவார்.

சங்கர்லாலைப் பற்றித் தெரிந்து கொண்டுவிட்டீர்களல்லவா? இனிமேல் கதையைப் படிக்கலாம்:

அத்தியாயம் 1

நிழல் மனிதன்

நிழல் மனிதன் பெரிய திருடன். நிழலை எவராலாவது பிடிக்க முடியுமா? அது மாதிரி, இந்தப் பெரிய திருடனையும் எவராலும் பிடிக்க முடியாது. நிழலைப் பார்க்கலாம். ஆனால், பிடிக்கத்தான் முடியாது. பெரிய திருடனாகிய இந்த நிழல் மனிதனை யார் வேண்டுமானாலும் பார்க்கலாம், ஆனால், பிடிக்கத்தான் முடியாது! இந்த மகாப் பெரிய திருடனுக்கு நிழல் மனிதன் என்ற பெயர் எவ்வளவு பொருத்தமானது!

நிழல் மனிதன் வருவதும் தெரியாது, போவதும் தெரியாது; இருப்பதும் தெரியாது. அவன் எப்பொழுது வந்தான்? எதற்காக வந்தான்? எந்த உருவத்தில் வந்தான்? எப்படி வந்தான்? இப்பொழுது அவன் எங்கே? இருக்கிறானா, போய்விட்டானா? ஒன்றுமே எவருக்கும் தெரியாது! ஆனால், அவன் நுழைந்த கட்டிடத்திற்குள் உள்ள விலை உயர்ந்த சாமான்கள் மட்டும் காணாமற் போய்விடும்! எவ்வளவு பாதுகாப்பு இருந்தாலும், எத்தனை கான்ஸ்டபிள்கள் இருந்தாலும், எத்தனை பூட்டுகள் போட்டுப் பூட்டியிருந்தாலும் சரி, விலை உயர்ந்த சாமான்களோ, கரன்ஸிகளோ கண்டிப்பாய்க் காணாமல் போய்விடும். அதை மட்டும் எவராலும் தடுக்க முடியாது!

நிழல் மனிதன் வீடு எங்கே இருக்கிறது? அல்லது, அவன் அடிக்கடி தங்கும் இடந்தான் எது? அவனுடைய ரகசிய வீடு எங்கே இருக்கிறது? அவன் எங்கிருந்து வருகிறான்? எப்படி வருகிறான்? எதில் வருகிறான்? கொள்ளைகள் அத்தனையையும் அவன் மட்டுந்தான் செய்கிறானா? அல்லது, அவனுக்குக் கூட்டாளிகள் உண்டா? கூட்டாளிகள் உண்டு என்றால் அவர்கள் யார்? அவர்கள் வீடெல்லாம் எங்கே இருக்கிறது? அவன் கூட்டாளிகள் அவனோடு சேர்ந்து எல்லாரும் ஒன்றாகத்தான் வசிக்கிறார்களா? இல்லை, தனித் தனியாக மதிப்பான

மனிதர்கள்போல் நகரத்திற்குள் வசித்துக்கொண்டு ஒருவருக்கொருவர் தொடர்பு வைத்துக் கொள்ளுகிறார்களா?

நிழல் மனிதன் இதுவரை திருடியதை யெல்லாம், கொள்ளையடித்ததை யெல்லாம் எங்கே வைத்திருக்கிறான்? அந்த இடம் எங்கே இருக்கிறது? அவன் ஏன் இப்படிக் கொள்ளையடிக்கவேண்டும்? அப்படி கொள்ளையடிப்பதை யெல்லாம் வைத்திருக்கிறானா? அல்லது கூட்டாளிகளுக்குப் பகிர்ந்து கொடுத்து விட்டானா?

அவனுக்கு அப்பா, அம்மாக்கள் உண்டா? ச[illegible]ப் பிறந்தவர்கள் யாராவது உண்டா? அவனுக்கு வயது என்ன இருக்கும்? அவன் ஆள் எப்படி இருப்பான்? எவருக்குமே தெரியாது!

நிழல் மனிதனை இதுவரை எவருமே பார்த்ததில்லை. எங்கேயாவது கொள்ளையடிக்கப்பட்டிருந்தால், அது நிழல் மனிதனால் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டது என்று தான் சொல்வார்களே தவிர, அவன் எப்பொழுது வந்தான், எப்படி வந்தான் எத்தனை பேர்களோடு வந்தான், எப்படிக் கொள்ளையடித்தான், கொள்ளையடித்ததை எப்படிக் கொண்டுபோனான் என்பதெல்லாம் எவருக்குமே தெரியாது!

இப்படி, எவருமே பார்த்தறியாத நிழல் மனிதனின் கொடுமை, கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருந்தது.

போலீஸ் இலாகா நிழல் மனிதனைப் பிடிக்கத் தலைகீழாக நின்று பார்த்தது. முடியவில்லை. போலீஸ் கமிஷனரும், உதவிப் போலீஸ் கமிஷனரும், இரவு பகலாகத் தூங்காமல் என்னென்னமோ ஏற்பாடுகளெல்லாம் செய்து பார்த்தார்கள். முடியவில்லை.

இப்படித் தேடித் தேடி, நிழல் மனிதனைப் பிடிக்க முடியாமல் எத்தனையோ மாதங்கள் கழிந்துவிட்டன!

ஒரு நாள்.

அப்பொழுதுதான் இருட்டிக்கொண்டிருந்தது.

குளிர்காற்றுச் சற்று அதிகமாக இருந்ததால் வெளியே உலவச் செல்லும் சங்கர்லால், அன்று வெளியே செல்ல

விரும்பாமல், தன் அறையில் உட்கார்ந்து, கால்கள் இரண்டையும் மேசையின் மீது தூக்கிப் போட்டுக்கொண்டு ஒரு புத்தகத்தைச் சுவைத்துப் படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது—

கீழே காவல் காத்து நிற்கும் கான்ஸ்டபிள்களில் ஒருவனான பொன்னன், சங்கர்லாலுக்கு எதிரே வந்து ஸல்யூட் ஒன்று போட்டு நின்றான்.

"என்ன பொன்னு?" என்று கேட்டார் சங்கர்லால், தன் பார்வையை புத்தகத்திலிருந்து எடுத்து பொன்னனைப் பார்த்துக்கொண்டே.

"உதவிப் போலீஸ் கமிஷனர் வகாப் தங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார். வரச்சொல்ல அனுமதி உண்டா?" என்று கேட்டான் பொன்னன்.

"வரச்சொல்லு, அப்படியே மாதுவிடம் சொல்லி இரண்டு தேனீர் கொண்டுவரச் சொல்லிவிட்டுப் போ" என்றார் சங்கர்லால்.

"ஆகட்டும் ஐயா" என்று சொல்லிவிட்டு மறுபடியும் ஒரு ஸல்யூட் போட்டுவிட்டுக் கீழே போனான் பொன்னன்.

பொன்னன், கிழே போன கொஞ்ச நேரத்திற்குப் பிறகு உதவிப் போலீஸ் கமிஷனர் வகாப், "வணக்கம், சங்கர்லால்" என்று கைகூப்பி வணங்கிக்கொண்டே வந்தார். அவருக்குப் பின்னாலேயே மாது, தேனீருடன் வந்தான்.

சங்கர்லால், "வாருங்கள், வணக்கம்" என்று தேனீருடன் வகாபை வரவேற்றார்.

உதவிக் கமிஷனர் வகாப், நாற்காலியின் மீது உட்கார்ந்ததும் மாது, இரண்டு கோப்பை தேனீரையும் மேசையின் மீது வைத்தான்.

சங்கர்லால், தேனீரை மெல்லக் குடித்துக்கொண்டே, "என்ன வகாப், சில மாதங்களாக நன்றாக ஓய்வு எடுத்துக் கொண்டு நிம்மதியாக இருந்தேன். இப்படியே இன்னும் இரண்டொரு மாதங்கள் கழிந்து விட்டால் வசதியாய் இருக்கும் என்று நினைத்தேன். அதற்குள்ளே வந்து விட்டீர்களே" என்று சொல்லிவிட்டு மெல்லச் சிரித்தார்.

வகாப் அதற்கு விடை சொல்லுவதற்காகத் தன் வாயைத் திறந்தார்.

அதற்குள் மாது குறுக்கிட்டு, "ஆமாம்! தம்பிக்கு இன்னும் இரண்டொரு மாதங்களுக்கு ஓய்வு கொடுங்கள். அதற்குள் நான் தம்பியின் உடம்பை நன்றாகத் தேற்றிவிடுகிறேன். இப்பொழுதுதான் தம்பியின் உடம்பு கொஞ்சம் பார்க்கற்குச் சுமாராய் இருக்கிறது. நீங்கள் இப்பொழுது ஏதாவது வேலை கொடுத்துவிட்டால் இருக்கிற இந்த உடம்பும் கெட்டுவிடும்" என்றான்.

"அது சரியப்பா, நான் எவ்வளவுக்கெவ்வளவு தம்பிக்கு ஓய்வு கொடுக்க முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு ஓய்வு கொடுத்துக் கொண்டுதான் வருகிறேன். நானும், கமிஷனரும், போலிஸ் இலாகாவும் முடிந்தவரை முயற்சி செய்து பார்த்து முடியாவிட்டால் கடைசியில்தானே நானே தம்பியிடம் வருகிறேன்! இதற்கு மேல் நான் என்ன செய்வது?" என்றார் வகாப்.

"எங்கே ஐயா, ஒவ்வொரு வழக்கையும் தம்பி வந்து தான் கண்டுபிடித்துக் கொடுக்கவேண்டியிருக்கிறது! தம்பி வராமல் நீங்களாக எந்த வழக்கைக் கண்டு பிடித்தீர்கள் சொல்லுங்கள் பார்ப்போம்?" என்றான் மாது கொஞ்சம் ஆத்திரமாக.

"மாது என்னடா இது? போடா உன் அலுவலைப் பார்த்துக் கொண்டு" என்றார் சங்கர்லால் பொய்க் கோபத்துடன்.

"என்ன தம்பி இது, நான் சொன்னதிலே தவறு என்ன இருக்கிறது? ஒரே மனிதனைப்போட்டு எவ்வளவு காலத்திற்குத்தான் உயிரை வாங்குவது? உன் மாதிரி மூளை உள்ள வேறொரு மனிதன் இந்த உலகத்திலே கிடையாதா என்ன?" என்றான் மாது எரிச்சலோடு!

"கிடையாதே அப்பா நான் என்ன செய்வது? சங்கர்லால் மாதிரி மூளை உள்ளவர் இந்த உலகத்தில் இல்லை என்றாலும், சங்கர்லால் மூளையில் பாதி உள்ளவர் இருந்தாலும் போதுமே, நான் அவரைப் பிடித்துக்கொண்டு சங்கர்லாலுக்கு ஓய்வு கொடுத்துவிடுவேனே! அது எங்கே

தெரியவில்லை. சங்கர்லால் மூளையில் கால்வாசி மூளை உள்ளவர்கள் கூட இந்த உலகத்தில் இல்லையே, இதற்கு நான் செய்வது ?" என்றார் வகாப் ஏக்கத்தோடு!

" தம்பி. அப்படியானால் உன் மூளையை மழுங்கடித்துக் கொண்டு விடு. ஓய்வும் கிடைக்கும். உடம்பும் பெருக்கும் " என்றான் மாது.

" சரி சரி. போடா. உன் மாதிரி என்னையும் ஆக வேண்டும் என்கிறாயாக்கும் ?" என்றார் சங்கர்லால் சிரித்துக் கொண்டே. வகாபும் இதைக் கேட்டுச் சிரித்தார்.

" என் மாதிரி இருப்பவர்களுக்குத்தான் தம்பி ஆயுள் அதிகம் " என்றான் மாது !

" சரி சரி, நீண்ட நாட்கள் உயிருடன் இருப்பா, போ " என்று சொல்லிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தார் வகாப். சங்கர்லாலும் விழுந்து விழுந்து சிரித்தார்.

மாது இருவரையும் முறைத்துப்பார்த்துக்கொண்டே, காலிக் கோப்பைகளை எடுத்துக்கொண்டு கீழே போனான்.

சிரிப்பலைகள் சற்று ஓய்ந்ததும், " என்ன வகாப், என்ன செய்தி ?" என்று வகாபைப் பார்த்துக் கேட்டார் சங்கர்லால்.

" நிழல் மனிதன் விசயமாகத்தான் வந்திருக்கிறேன் சங்கர்லால் " என்றார் வகாப்.

" நிரம்பப் பெரிய விசயந்தான் " என்று சொல்லிவிட்டு மெல்லச் சிரித்தார் சங்கர்லால்.

" சின்ன விசயமாக இருந்தால்தான் நானே பார்த்துக் கொண்டு விடுவேனே " என்றார் வகாப்.

" சரி, சொல்லுங்கள் " என்றார் சங்கர்லால்.

" நிழல் மனிதனைக் கண்டுபிடித்துக் கைது செய்வதற்காக நாங்கள் என்னென்னவோ முயற்சிகள் செய்து பார்த்து விட்டோம் சங்கர்லால். நிழல் மனிதனைக் கண்ணால்கூட பார்க்க முடியவில்லை. பார்த்த பிறகு அல்லவா அவனைக் கைது செய்யவேண்டும்! முதலில் அவனைப் பார்க்கவே முடியவில்லை! அவன் எப்படி

இருப்பான் என்று தெரிந்தாலாவது தேடிப் பார்க்கலாம். அவன் எப்படி இருப்பான் என்றே தெரியவில்லையே? அவனுடைய அட்டூழியம் வரவர அதிகமாகிவிட்டது. இப்படியே விட்டுக்கொண்டுபோனால் போலீஸ் இலாகாவுக்கே ஆபத்து. நீங்கள்தான் பெரிய மனது பண்ணி நிழல் மனிதனைக் கண்டுபிடித்துக் கைது செய்து காப்பாற்ற வேண்டும்" என்று சற்று இரங்கிய குரலில் சொன்னார் உதவிக் கமிஷனர் வகாப்.

சங்கர்லால் சிரித்துக்கொண்டு, "சரிதான், பாரம் முழுவதையும் ஒரேயடியாக என் தலையில் தூக்கிப் போட்டுவிட்டீர்களே! நீங்கள் நினைப்பதுமாதிரி நிழல் மனிதனைக் கைது செய்வது அவ்வளவு எளிதான செயல் இல்லையே வகாப்" என்றார்.

"உண்மைதான். எளிதான செயலாக இருந்தால் உங்களிடம் நான் ஏன் வரப்போகிறேன்!" என்று சொல்லிவிட்டு, தான், நல்ல கருத்துடன் பேசிவிட்டதாகப் பெருமைப்பட்டுக்கொண்டார் வகாப்.

"சரி, கிண்டல் இருக்கட்டும். விஷயத்தைச் சொல்லுங்கள்" என்றார் சங்கர்லால்.

"எவ்வளவு செலவழிந்தாலும் சரி, எப்பாடுபட்டாவது நீங்கள் நிழல் மனிதனைக் கண்டுபிடித்துத் தரவேண்டும். கண்டுபிடித்துத் தந்தால் மட்டும் போதாது; கைது செய்தும் தரவேண்டும்" என்றார் வகாப்.

"உயிருக்கே அபாயமான வேலை! இருக்கட்டும், நிழல் மனிதனைப்பற்றி உங்களுக்குத் தெரிந்த விவரங்களைமட்டும் சொல்லுங்கள்" என்றார் சங்கர்லால்.

"எனக்கு எந்த விவரமும் இதுவரை தெரியாது சங்கர்லால். நானும் போலீஸ் கமிஷனரும், போலீஸ் இலாகாவும் எவ்வளவோ முயன்று பார்த்துவிட்டோம். நிழல் மனிதனைப் பற்றிய எந்த விவரமும் எங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை" என்றார் வகாப்.

"நிழல் மனிதன் இதுவரை கொலைகள் ஏதாவது செய்திருக்கிறானா?" என்று கேட்டார் சங்கர்லால்.

“இல்லை. இதுவரை அவன் ஒரு கொலைகூடச் செய்ததில்லை. அவன் வெறும் திருடன்தான். ஆனால், தனக்கு இடைஞ்சலாக இருப்பவர்களைக் கொலை செய்தே தீருவான்” என்றார் வகாப் வருத்தத்துடன்.

“ஐயோ, அப்படியானால் நீங்களும் நானும்தான் இன்றிலிருந்து அவனுக்கு இடைஞ்சலாக இருக்கப்போகிறோம்” என்று சொல்லிவிட்டுக் கழுத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உயிருக்குப் பயப்படுவதுபோல் பாவனை செய்துவிட்டுப் பிறகு, வாய்விட்டுச் சிரித்தார் சங்கர்லால்.

ஆனால், வகாபிற்கு மட்டும் சங்கர்லால் மாதிரிச் சிரிக்க வரவில்லை! அதற்குப் பதிலாக அவர் முகம் கருத்தது. உடம்பு வியர்த்தது. ஆனால், இதெல்லாம் வெளியே தெரியாமல் மறைப்பதற் காகக் கொஞ்சம் சிரித்துப் பார்த்துக்கொண்டார்.

கொஞ்ச நேரம் கழித்து, “பொறுப்பை உங்களிடம் ஒப்புவித்துவிட்டேன்” என்று சொல்லிவிட்டு நிம்மதியுடன் விடைபெற்றுக்கொண்டார் வகாப்.

ஒரு நாள்...

மாலை வேளை. மணி ஏழு அல்லது ஏழரை இருக்கும். எங்கும் மின்சார விளக்கு வெளிச்சம் நிறைந்திருந்தது. மஸ்டா ஒட்டல் அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்தது. அந்த ஒட்டலிலே நெருக்கம் இல்லாத நாளே கிடையாது. பெரிய பெரிய கனவான்களெல்லாம் போய் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களுடைய பளபளப்பான பிளஷர் கார்களெல்லாம் வகை வகையாக அந்த ஒட்டலுக்கு முன்னால் நின்றுகொண்டிருந்தன. இவ்வளவு அமைதியற்ற நிலைக்கு நடுவிலே—

எதிரிலே இருந்த பிளாட்பாரத்திலே ஒருவன் சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்தான். அவன் பிச்சைக்காரனா? இருக்கலாம். அவனுடைய கோட்டில் நிறைய ஒட்டைகள்...கால் சட்டையிலே அங்கங்கே ஒட்டைகள்......

அவன் சரியானபடி சாப்பிட்டு இரண்டு மூன்று நாட்களுக்குமேல் ஆகின்றன. அவனுக்குப் பசி காதை

அடைந்தது. அவனுடைய கண்களெல்லாம் இருண்டு கொண்டு வந்தன. அவன் கோட்டுப் பைகளிலும், மற்றப் பைகளிலும் கையைவிட்டுத் துழாவினான். ஏமாற்றத்தோடு கையை எடுத்துக் கொண்டான். அவன் பைகளிலே—

பணமே இல்லை. கையை முகவாய்க் கட்டையில் முட்டுக் கொடுத்துக்கொண்டு சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்தான். நெடுநேரம் உட்கார்ந்திருந்தான். அவன் முகத்திலே சுருக்கங்கள் நிறைந்து நெளிந்தன. அவன் எதைத்தான் அப்படிச் சிந்தனை செய்தானோ?

அவனுடைய பெருங்குடல் சிறுகுடலைத் தின்பது மாதிரி இருந்தது. அவனுக்கு அவ்வளவு பசி! அந்தப் பசி அவனை விட்டுப் போகவேண்டும். அதற்கு என்ன செய்வது? பிச்சை எடுக்கவா?

அவனுடைய மல்லன் போன்ற உருவத்தைப் பார்த்த பிறகு யார்தான் பிச்சை போடுவார்கள்? அவனுடைய பரந்த மார்பையும், இருண்டு திரண்ட கை கால்களையும் பார்க்கும்போது அவன் ஒருவனே நாலைந்து பேரை அடித்துச் சாய்த்துவிடுவான் என்றுதான் தோன்றும்!

அந்தக் கந்தல் ஆடைக்காரன் ஏதோ முடிவுக்கு வந்துவிட்டவனைப்போல் அங்கிருந்து எழுந்தான். சுற்றுமுற்றும் இருப்பவர்களைக் கவனித்தான். தன்னை எவரும் கவனிக்கவில்லை என்று தெரிந்துகொண்டபின் அங்கிருந்து முன்னாலிருந்த ஓட்டலை நோக்கிப் போனான். அவன் ஓட்டலுக்குள் நுழைந்தான். வாசலிலே நின்றுகொண்டே ஓட்டலுக்குள் இருந்தவர்களையெல்லாம் ஒருமுறை பார்த்தான். பிறகு, காலியாக இருந்த ஒரு மேசைக்கு முன்னால் போய் உட்கார்ந்தான். அந்த மேசையில் அவனைத் தவிர வேறு ஆட்களே இல்லை!

அப்படியே சாய்ந்துகொண்டு சிறிது நேரம் ஓய்வெடுத்துக்கொண்டான். புதிதாக அந்த ஓட்டலுக்குள் சாப்பிட வந்த எவரும் அவனுக்குப் பக்கத்திலே போய்க் கூட உட்காரவில்லை. அவனுடைய பயங்கரமான பெரிய

தோற்றத்தைக் கண்டு அவர்கள் பயந்தார்களோ, என்னவோ!

அந்தக் கந்தலாடைக் காரனுக்குப் பக்கத்திலே துணிந்த பணியாள் ஒருவன் போய் நின்றான். “ஐயா உங்களுக்கு என்னவேண்டும்?” என்று கேட்டான்.

“என்ன இருக்கிறது!” என்று கேட்டான் அவன்.

பணியாள், ஓட்டலில் இருப்பதையெல்லாம் ஏற்கனவே மனப்பாடம் பண்ணி வைத்திருந்தான். அதை அப்படியே அவனிடம் கிடுகிடுவென்று ஒப்பித்தான்.

அந்தக் கந்தலாடைக்காரன் ஒருமாதிரியாகச் சிரித்துக் கொண்டே, கொஞ்சம்கூடப் பதறாமல் “இப்பொழுது சொன்னாயே, அவ்வளவையும் கொண்டுவா” என்றான்! அவன் முகத்தில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.

பணியாள், திகைத்துப் போய்விட்டான். அந்தக் கந்தலாடைக்காரனை ஒருமுறை ஏற இறங்கக் கவனித்தான். தயங்கி நின்றான். ஆனால் அந்தக் கந்தலாடைக்காரன் முகத்தைக் கொஞ்சம் கடுமையாக வைத்துக்கொண்டு “ஏனய்யா நிற்கிறீர்? நான்தான் சொல்லி விட்டேனே, கொண்டுவாயேன்” என்று உறுமினான்.

இதைக் கேட்டதும், பணியாள், துள்ளிக் குதித்துக் கொண்டு அங்கிருந்து பறந்தோடிப் போனான்!

கொஞ்ச நேரத்தில் அந்த ஓட்டலில் இருந்த பலகார வகைகளையெல்லாம் அந்த மனிதனுக்கு முன் இருந்த மேசை நிறையப் பரப்பி வைத்துவிட்டான் பணியாள் அந்தக் கந்தலாடைக்காரன், இரண்டு கைகளாலும் எதிரில் இருந்த பலகாரங்களையெல்லாம் எடுத்து எடுத்து விழுங்கினான், கோழி, தவிடு விழுங்குகிறமாதிரி. எதிரில் இருந்த வற்றையெல்லாம் உள்ளே தள்ளித் தண்ணீர் குடித்தான். பெரியதாக ஏப்பம் விட்டான்!

பணியாள், பில்லைக் கொண்டுவந்து மேசையின்மேல் வைத்தான். பில், ஏழு ரூபாய்க்கு ஆகி இருந்தது! அதைப் பார்த்ததும் அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவனை அடித்துப் போட்டால்கூட அவனிடம் ஏழு பைசா

கிடையாது. அவன் ஏழு ரூபாய்க்கு எங்கே போவான்? அவன், பில்லைக் கையிலே வைத்துக்கொண்டு அதைப் பல விதமாக மடித்து அழகு பார்த்துக்கொண்டிருந்தான்! அந்தப் பில்லுக்கு எப்படிப் பணம் கொடுப்பது என்பதைப் பற்றித் தீவிரமாகச் சிந்தனை செய்துகொண்டிருந்தான்.

இரவு மணி எட்டரை!

அந்தக் கந்தலாடைக்காரன், ஓட்டலிலேயே இருந்தான். அவன், தான், உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு எழுந்திருக்கவில்லை. அவன் கையிலே பலவிதமாக மடித்து வைத்துக்கொண்டிருந்த பில்லைப் பைக்குள் போட்டுக் கொண்டான்.

அப்பொழுது இரவு மணி ஒன்பது!

அந்தக் கந்தலாடைக்காரனால் இன்னும் மேற்கொண்டு எந்த வகையான முடிவுக்கும் வர முடியவில்லை. அவன் சுற்று முற்றும் பார்த்தான். அவனை இரண்டொருவர் கவனித்துக் கொண்டிருந்ததாகத் தெரிந்தது. அவன் மாடி வழியே கவனித்தான். மாடிப்படிகளின் வழியாக—

ட்வீட் கோட்டும், சட்டையும் போட்டுக்கொண்டிருந்த ஒரு பெரிய மனிதர் கீழே இறங்கி வந்துகொண்டிருந்தார். அவருடைய பார்வை முழுவதும் அந்தக் கந்தலாடைக்காரன் மேலே வேறொன்றி நிலைத்து நின்றுவிட்டிருந்தது. அவர், ஏன் தன்னை இப்படி உற்றுப் பார்க்கிறார்? ஒரு வேளை, தன்னைப்பற்றி அவருக்குத் தெரிந்துவிட்டிருக்குமோ என்ற சந்தேகம் அவனுக்கு!

அந்தப் பெரிய மனிதர் அவனை நோக்கி வந்துகொண்டிருந்தார். அந்தப் பெரிய மனிதர் எதற்காகவோ வந்திருக்கிறார்; எங்கேயோ போய் உட்காருவார் என்றுதான் அவன் எதிர்பார்த்தான். ஆனால்—

அவர், அவன் மேசைக்கு எதிரிலேயே வந்து உட்கார்ந்தார். அவனுக்கு அது கொஞ்சம் அதிர்ச்சியாகவே இருந்தது. அவன் கட்டாயப்படுத்தித் தன் பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டான்.

கொஞ்ச நேரம் ஆயிற்று.

அந்தப் பெரிய மனிதர் போகவில்லை. பேசவில்லை.

அந்தக் கந்தலாடைக்காரன், அவரைத் திரும்பிப் பார்த்தான். அவர், தன் கோட்டுப் பைக்குள் கையை விட்டுப் பணப்பையை எடுத்தார். அவன் ஒன்றும்புரியாமல் அந்தப் பெரியவரையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவருடைய செய்கை, அவனுக்குப் புதிராக இருந்தது.

அவர், பையிலிருந்து பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்தார். அதை அந்தக் கந்தலாடைக்காரனிடம் நீட்டினார். அவன் மனம் குழம்பியது.

“இது...இது...”—அதற்குமேல் ஒன்றும் பேச முடியாமல் அவன் வாய் திக்கியது.

அவர் சிரித்தார். கட்டாயப்படுத்தி அந்தப் பத்து ரூபாய் நோட்டை அவன் கையில் திணித்துக்கொண்டே, “ஏன் அதிர்ச்சி அடைகிறாய்? எனக்குத் தெரியும். இது பத்துரூபாய் நோட்டுதான். உனக்குத்தான் கொடுக்கிறேன். நீ இதுவரை சாப்பிட்டதற்குப் பணியாள் பில் கொடுத்திருக்கிறான். அதற்குப் பணம் கொடுக்க வேண்டாமா? அதற்காகத்தான் இந்தப் பணம். இதை எடுத்துக்கொண்டு போய்ப் பில்லுக்குப் பணம் கொடு” என்று பரிவோடு சொன்னார்.

இதைக் கேட்டதும் அந்தக் கந்தலாடைக்காரனின் விழிகள் ஆச்சரியத்தால் விரிந்தன. “பில்லுக்குப் பணம் கொடுக்க என்னிடம் பணம் இல்லை என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டான்.

அதற்கு அவர் ஒருமாதிரியாகச் சிரித்துக்கொண்டே, “உன்னிடம் பில்லுக்குப் பணம் இல்லை என்பது மட்டும் தான் எனக்குத் தெரியும் என்று நினைக்காதே. நீ யார் என்பதுகூட”...என்று நீட்டினார்.

அதற்குள் அவன், அவர் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கொஞ்சம் பயந்த குரலில், “நான் யார் என்பதுகூட......?” என்று கேட்டான்.

அந்தப் பெரிய மனிதர், குரலைக் கொஞ்சம் தாழ்த்திக் கொண்டு, "ஆம், நீ யார் என்பதுகூட எனக்குத் தெரியும். நீ, நிழல் மனிதன்" என்றார்!

அந்த கந்தலாடைக்காரன் இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இதனால் ஏற்பட்ட தாக்குதலை சமாளிப்பது அவனுக்குக் கொஞ்சம் கடினமாகத்தான் இருந்தது. அவன் கொஞ்ச நேரம்வரை ஒன்றுமே பேசவில்லை. சட்டென்று எழுந்து நின்று வெளியில் கவனித்தான். வெளியே சிவப்புத் தொப்பிக்காரர்கள் நிறையப் பேர்கள் நீட்டிய துப்பாக்கிகளோடு நின்றுகொண்டிருந்தார்கள். அங்குமிங்குமாகச் சுற்றிக் காவல் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இந்த ஏற்பாடுகளெல்லாம் தன்னைப் பிடிக்கத்தான் என்பது அவனுடைய எண்ணம். அப்படியானால் எதிரில் இருக்கும் இந்தப் பெரிய மனிதர்?—

இவர் நம்மைப் பிடிக்கத்தான் இப்படியெல்லாம் வேடம் போட்டு விசாரிக்கிறார் என்று நினைத்தான் நிழல் மனிதன். அவனுக்கு அது—

அந்தப் பெரிய மனிதர் அவன் காதோடு காதாக, "நிழல் மனிதா, நீ அதிர்ச்சி அடையாதே. பரபரப்புக் காட்டாதே. மெய்யாகச் சொல்லுகிறேன். என்னை நீ சந்தேகிக்காதே. என்னால் உனக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்பட்டுவிடாது. நீ நிம்மதியாக இரு. விவரத்தைச் சொல்லுகிறேன்" என்றார்.

நிழல் மனிதன் உடனே உஷாராகிவிட்டான். அவன் பதுங்கியபடி உட்கார்ந்துகொண்டு, எட்ட இருந்தவரைப் பக்கத்தில் வரும்படிச் சைகை செய்தான். அந்தப் பெரிய மனிதரும் நாற்காலியை இழுத்து அவனுக்குப் பக்கத்தில் போட்டுக்கொண்டு அவன் காதோடு பேச ஆரம்பித்தார். நடுநடுவே நிழல் மனிதனின் கண்கள், சுற்றி இருப்பவர்களில் தங்களை யார் யார் கவனிக்கிறார்கள் என்பதை அளவெடுத்துக்கொண்டிருந்தன.

அப்போது எவரோ அவர்களைக் கவனிப்பதுபோலத் தோன்றியது. உடனே அவன், அந்தப் பக்கமாக வந்த பணியாளிடம், "இந்தாப்பா, இங்கே, இரண்டு பாதாம் கீர் கொண்டுவா" என்றான்.

பணியாள், பாதாம் கீரைக் கொண்டுவந்து வைத்ததும் நிழல் மனிதன், எதிரில் இருந்த பெரிய மனிதரை எடுத்துக் கொள்ளும்படி சைகை செய்தான். அந்தப் பெரிய மனிதர் நிழல் மனிதனின் நுணுக்கமான ஆராய்ச்சியை மெச்சியபடி ஒரு கிளாஸை எடுத்துக்கொண்டு பாதாம்கீரைச் சுவைத்துக்கொண்டே பேச ஆரம்பித்தார். நிழல் மனிதனும் மீதியுள்ள இன்னொரு டம்ளரை எடுத்துக்கொண்டே அவர் பேசுவதைக் கவனமாகக் கேட்டான்.

அந்தப் பெரிய மனிதர் நிழல் மனிதனுக்கு மட்டும் கேட்கும்படியான குரலில், "நிழல் மனிதா, கொஞ்சம் கவனமாகக் கேள். நான் இப்போது ஒரு பெரிய ஆபத்திலே சிக்கிக்கொண்டிருக்கிறேன். வெளியே சுற்றிக் கொண்டிருக்கிற போலீஸ்காரர்களெல்லாம் எனக்காகத்தான் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். நான் இதற்குப் பயந்து நான் இந்த ஓட்டலிலேயே ஒரு வாரமாகத் தங்கி இருக்கிறேன்: நான் இந்த ஓட்டலில்தான் தங்கி இருக்கிறேன் என்பதை இவர்கள் எப்படியோ தெரிந்துகொண்டிருக்கிறார்கள். நான் எப்படியும் மிகவும் சீக்கிரமாக இந்த ஓட்டலைவிட்டு வெளியேறவேண்டும். இல்லாவிட்டால், நான் இன்னும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் கைதாகி விடுவேன். இந்த ஓட்டலைவிட்டு வெளியேறவேண்டுமானால், அதற்கு உன்னுடைய உதவி தேவை. நீ ஒருவன் தான் என்னைப் பத்திரமாக வெளியே கொண்டுபோய்ச் சேர்க்க முடியும். உனக்கு ஒருவனுக்குத்தான் அந்தத் திறமை உண்டு. உன்னைத்தான் நான் பெரிதும் நம்பி இருக்கிறேன். நீ என்னை மோசம் செய்யமாட்டாய் என்று நம்புகிறேன்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

நிழல் மனிதன் கொஞ்சநேரம் யோசித்துவிட்டு, "நீங்கள் ஒரு வாரம்வரை இந்த ஓட்டலிலேயே மறைந்திருந்ததைப்போல் இன்னும் இரண்டு நாட்களுக்கு நாம் இரண்டு பேருமே இந்த ஓட்டலுக்குள் மறைந்து இருக்கலாமே. அப்புறம் வேண்டுமானால் இரண்டு பேருமே தப்பித்துப் போய்விடலாம். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான் பரபரப்புடன்.

அந்தப் பெரிய மனிதர் உதட்டைப் பிதுக்கிக் காட்டிவிட்டுத் தலையை ஆட்டிக்கொண்டே கைக்கடியாரத்தைப் பார்த்தார். பிறகு பதட்டத்தோடு, "நிழல் மனிதா, நீ மிகவும் திறமைசாலி. இப்போது மணி ஒன்பதரை. இன்னும் அரைமணி நேரத்திற்குள் நான் இங்கிருந்து வெளியேற வேண்டும். இல்லாவிட்டால் கம்பி எண்ணத்தான் வேண்டும். நிழல் மனிதா, எப்படியாவது என்னைக் காப்பாற்று. உன்னை உயிர் உள்ளவரை மறக்கமாட்டேன். என்னைக் கைவிட்டுவிடாதே" என்று கெட்டியாக அவன் கையைப் பிடித்துக்கொண்டார்.

நிழல் மனிதனின் நெற்றியில் சுருக்கங்களும், நெளிவுகளும் மிதந்தன. கொஞ்சம் கொஞ்சமாக அவன் முகத்திலே ஒளி பரவியது. கொஞ்சநேரத்துக்கெல்லாம் அவன் முகம் கடுமையாக மாறியது. அவன், "உங்களுக்குக் கார் இருக்கிறதா?" என்று கேட்டேன்.

"இருக்கிறது. வெளியே நிற்கிற பியூக் என்னுடையதுதான்" என்றார் அவர்.

"ஓகோ" என்று தலையை ஆச்சரியத்துடன் ஆட்டிவிட்டு எழுந்தான் நிழல் மனிதன்.

பிறகு, தன் கோட்டுப் பையிலிருந்து ஏதோ ஓர் அட்டையை எடுத்துக் கோட்டில் குத்திக் கொண்டான்.

நிழல் மனிதன் அவரைக்கண்டு அனாயாசமாகச் சிரித்துக்கொண்டே, "நீங்கள் எதற்கும் பயப்படாதீர்கள். நான் முன்னால் போகிறேன். எனக்குப் பின்னாலேயே நீங்கள் ஒளிந்துகொண்டே வாருங்கள். என்னை ஏதாவது செய்த பிறகுதான் உங்களைத் தொடமுடியும்" என்று சொல்லியபடியே தன் பக்கவாட்டுப் பைகளில் இரண்டு கைகளையும் விட்டான்.

அவன் கைகளை வெளியே எடுத்தபோது இரண்டு கைகளிலும் இரண்டு கைத்துப்பாக்கிகள் இருந்தன! அவன் இரண்டு கைகளிலும் துப்பாக்கியை ஏந்திப் பிடித்துக்கொண்டு ஏறுநடை போட்டு நடந்தான். அந்தப் பெரியமனிதரும் அவனுக்குப் பின்னால் பதுங்கிப் பதுங்கி வந்தார். அவரும், தன் பக்கவாட்டுப் பையிலே கையை

விட்டார். கைத் துப்பாக்கியோடு மெதுவாகக் கையை வெளியே எடுத்தார்.

அப்போது—

எதிரே ஓட்டல் வாசலில் நீட்டிய துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்த போலீஸ்காரன், துப்பாக்கியைத் தூக்கி நிழல் மனிதனைச் சுடப் போனான்.

ஆனால் அடுத்த விநாடி—

அவன் துப்பாக்கி தொங்கியது. நிழல்மனிதன் நெஞ்சில், **நான் தான் நிழல் மனிதன்** என்று தொங்கிய சீட்டு, அவன் துப்பாக்கியைத் தொங்கவைத்து விட்டது. அவன் கண்கள், நிழல் மனிதன் நெஞ்சில் தொங்கும் சீட்டையே பார்த்துக் கொண்டிருந்தன. தனக்கு எதிரே நிழல் மனிதன் நீட்டிய துப்பாக்கியுடன் நிற்கிறான் என்று தெரிந்தவுடனேயே அவனுக்கு, தன் கையில் இருப்பது துப்பாக்கி என்பதுகூட நினைவுக்கு வரவில்லை. அவன் உடம்பு ஆடியது! அவன் என்ன செய்வான்? நிழல் மனிதனைப் பற்றி அவன் கேட்ட வதந்திகளும் பயங்கரமான சம்பவங்களும்தாம் அதற்குக் காரணம்!

நிழல் மனிதன் முறுக்காக முன்னால் நடந்தான். என்ன நெஞ்சுத் துணிவு அவனுக்கு! ஒரு குண்டு அவன உடம்பில் நுழைந்தாலும் போதுமே!

போலீஸ்காரர்களும், சப்-இன்ஸ்பெக்டரும் நீட்டிய துப்பாக்கிகளோடு நின்றுகொண்டிருப்பதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. எதிரிகளிடம் இருப்பதெல்லாம் வெறும் தடிகள மாதிரியும், தன் கையில் இருப்பதுதான் துப்பாக்கி என்றும் நினைத்து முன்னேறுவதுபோல் முன்னேறிக் கொண்டிருந்தான் நிழல் மனிதன். பின்னாலேயே அந்தப் பெரிய மனிதர் அவன் முதுகுக்குப் பின்னால் மறைந்து கொண்டே வந்தார்.

நிழல் மனிதன், போலீஸ்காரனுக்கு அருகில் வந்ததும், கழுத்தை, இலேசாகத் திருப்பிப் பின்னால் வரும் அந்தப் பெரிய மனிதரிடம், “இந்தப் போலீஸ்காரனிடம் இருக்கும் துப்பாக்கியைப் பறியுங்கள்” என்றான்!

உடனே, அந்தப் பெரிய மனிதர், தன் கையிலிருந்த துப்பாக்கியைத் தன் பைக்குள் போட்டுக்கொண்டு, போலிஸ்காரனிடம் நெருங்கி வந்து அவன் கையிலிருந்த துப்பாக்கியைப் பறித்தார்.

போலீஸ்காரன், துப்பாக்கியை நழுவவிட்டான். அது மட்டுமா? அவன் ஆடிக்கொண்டே நின்றான். பெரிய மனிதர் துப்பாக்கியை நீட்டிப் பிடித்தபடி மறுபடியும் நிழல் மனிதனுக்குப் பின்னால் வந்து மறைந்துகொண்டார். நிழல் மனிதன் முன்னேறினான்.

வாசலுக்கு வெளியே, சப்-இன்ஸ்பெக்டர் கைத் துப்பாக்கியுடன் நின்றுகொண்டிருந்தார். அவர் எந்தவிதமான முயற்சியும் செய்யாமல், அசையாமல் நின்றார். அவர் முதலில் சுடுவதற்காகத் துப்பாக்கியைத் தூக்கினார். நிழல் மனிதன் நெஞ்சில் தொங்கும் அட்டையைப் பார்த்ததும், அவர் கையிலிருந்த துப்பாக்கி, தானாகவே கீழே விழுந்தது.

நிழல் மனிதன் மெல்ல சப்-இன்ஸ்பெக்டரைத் தாண்டி வெளியே வந்தான்! பின்னாலேயே அந்தப் பெரிய மனிதரும் வந்தார். அதற்குள்—

ஓட்டலில் இருந்தவர்களெல்லாம் பரபரப்புடன் எழுந்து நின்றார்கள். இரண்டொருவர் ஆளுக்கொரு பக்கம் ஓடிப்போய்ப் போலீஸுக்குப் போன் செய்தார்கள். அங்கே நிற்பவர்களெல்லாம் அவர்கள் கண்களுக்குப் போலீஸாகத் தெரியவில்லை!

நிழல் மனிதன், பாதை ஓரத்தில் நின்ற பியூக் காருக்கு அருகில் வந்து நின்றான். பின்னாலேயே அந்தப் பெரிய மனிதரும் வந்து நின்றார்.

நிழல் மனிதன், மெல்லக் கழுத்தைத் திருப்பிப் பின்பக்கமாகப் பார்த்தான். அந்தப் பெரிய மனிதர் அவன் முதுகுப் பக்கமாக ஒட்டிக்கொண்டிருந்தார். அவர், அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதையே ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். நிழல் மனிதன், குரலைத் தாழ்த்திக்கொண்டு, அவருக்கு மட்டும் கேட்கிறமாதிரி, "நீங்கள் காருக்குள்ளே ஏறி, டிரைவர் இடத்தில் உட்காருங்கள்" என்று கட்டளை இட்டான்.

அந்தப் பெரிய மனிதரும் வேறொன்றும் பேசாமல், டிரைவர் இடத்திலேயே தயங்கியபடியே ஏறி உட்கார்ந்தார்.

நிழல் மனிதன், கம்பீரமாகச் சுற்றியிருந்தவர்களை யெல்லாம் கவனித்தான். அவர்களெல்லாம் இன்னும் பழைய நிலையிலேயே வெலவெலத்துப்போய் கிடந்தார்கள். நிழல் மனிதன், கண்களை உருட்டி விழித்து அவர்களை யெல்லாம் முறைத்துப் பார்த்துக்கொண்டே, டிரைவர் இடத்துக்குப் பக்கத்திலே ஏறி உட்கார்ந்தான். அப்போதும், அங்கு நின்றுகொண்டிருந்தார்கள் பிணம்போலத் தான் இருந்தார்கள். அசையவில்லை!

நிழல் மனிதன், அவனுடைய ஏந்திய துப்பாக்கியை இன்னும் இறக்கவில்லை. அவன் அசட்டையாகப் பக்கத்திலே இருந்த பெரிய மனிதரைக் கவனித்தான். அவர் திகைத்துக் கொண்டிருந்தார்.

நிழல் மனிதனுக்கு அவர் நிலையைக் கண்டதும் இலேசாகச் சிரிப்பு வந்தது. அவன் அதை அடக்கிக்கொண்டே முழங்கையால் அவர் தோளை இலேசாக இடித்தபடி, “உங்களால் எவ்வளவு வேகமாகக் காரை ஓட்ட முடியுமோ, அவ்வளவு வேகமாகக் காரை ஓட்டுங்கள். நீங்கள் எவருக்காகவும், எதற்காகவும் கவலைப்பட வேண்டியதில்லை” என்றான்.

இதைக் கேட்டதும் அந்தப் பெரிய மனிதர் ஸ்டியரிங்கை அழுத்திப் பிடித்தார்.

அவ்வளவுதான், பியூக் ஓர் உலுக்கு உலுக்கிக் கொண்டு அங்கிருந்து கிளம்பியது. பாதையிலே படிந்திருந்த புழுதியை வாரிவிட்டுக்கொண்டு அதற்கு நடுவிலே பறந்துபோனது பியூக்.

நிழல் மனிதன், காருக்குப் பின் பக்கமாக இருந்த கண்ணாடியின் வழியாகப் பின்னலே கவனித்துக்கொண்டு வந்தான். பின்னல்—

எங்கேயோ இருந்து ஒரு கார் வந்து அந்த ஓட்டலுக்கு முன்னல் நின்றது. அது என்ன கார் என்று கவனித்தான் நிழல் மனிதன். சந்தேகமில்லை. அது போலிஸ் காரேதான்!

இவ்வளவு சீக்கிரமாகப் போலீஸ் கார் எப்படி அந்த ஓட்டலுக்கு முன் வந்து நிற்க முடியும்? ஓட்டலிலே இருந்தவர்கள் போன் செய்தார்களே, அதைக் கேட்டு இந்தப் போலீஸ் கார் அங்கே வந்திருக்க முடியாது. தற்செயலாக அந்த வழியாக வந்த கார்தான் அங்கே வந்து நின்றிருக்க முடியும். அந்தக் கார் அங்கு வந்து நின்றதும், அங்கே நின்றுகொண்டிருந்த போலீஸ்காரர்களெல்லாம் எகிறிக் குதித்து அந்தக் காருக்குள் ஏறிக்கொண்டார்கள். அவர்களெல்லாம், தான் ஏறிப் போகின்ற பியூக்கைக் காட்டிப் பேசிக்கொண்ட சைகை அவனுக்கு மிக மிக நன்றாகப் புரிந்தது.

அவன் அந்தப் பெரிய மனிதரை இன்னும் வேகமாகக் காரை ஓட்டச் சொன்னான். பியூக் சிட்டாய், பஞ்சாய்ப் பறந்தது.

அந்தப் பாதை, வளைவு நெளிவு இல்லாமல் நேராக இருந்ததால் அந்தப் பாதை நெடுந்தூரம் வரை என்ன நடக்கிறது என்பதை நிழல் மனிதனின் கூர்மையான கண்கள் கவனித்துக்கொண்டுதான் வந்தன. தூரத்திலே இருந்த அந்தப் போலீஸ் கார், பியூக்கைத் துரத்திக்கொண்டு விடாமல் தொடர்ந்து வந்தது.

பியூக், முழு வேகத்தில் பறந்தது. ஏறக்குறைய அதே வேகத்தில் போலீஸ் காரும் துரத்தியது.

நிழல் மனிதன் துப்பாக்கியை அழுத்திப் பிடித்தான்.

அந்தப் பெரிய மனிதரிடம் இன்னும் வேகமாக ஓட்டும்படி உற்சாகப்படுத்தினான். முன் பக்கம் உட்கார்ந்துகொண்டிருக்க அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவன் முன் பக்கத்தைத் தாண்டிக்கொண்டு பின் பக்கம் போனான். அந்தப் பின்பக்கத்துக் கண்ணாடியிலே அவன் கண்கள் புதைந்துவிட்டிருந்தன. அதை ஊடுருவி, வெளியே அந்தப் பாதையிலே அவன் பார்வை நிலைத்திருந்தது.

போலீஸ் கார், பியூக்கை நோக்கிவந்துகொண்டிருந்தது. அதன் வேகம் அதிகரித்தது. போலீஸ் கார், பியூக்கை நெருங்கிக்கொண்டிருந்தது.

அந்தப் பெரிய மனிதரும், அவரால் முடிந்தவரை வேகமாகக் காரை ஓட்டினர். இனியும் வேகமாக எவராலேயும் அந்தக் காரை ஓட்ட முடியாது. இதற்கு மேலும் வேகமாகப் போனல் பியூக் தலைகுப்புறக் கவிழ்ந்து உருண்டு விழுந்து எரிந்துவிடவேண்டியதுதான்! அவ்வளவு வேகமாகத் தன் முழுத் திறமையோடு காரை ஓட்டினர் அவர்.

இருந்தும், போலீஸ் கார், பியூக்கை நெருங்கி வந்து கொண்டுதான் இருந்தது.

காடு மலைகளை யெல்லாம் தாண்டிப் பியூக் பறந்தது. ஆனலும், போலீஸ் கார் துரத்துவதை நிறுத்தவில்லை.

பெரிய மனிதர், பின்பக்கம் திரும்பிப்பார்க்கவே இல்லை. அவர்பாட்டுக்கு ஆக்ஸிலேட்டரை அமுக்கிக்கொண்டிருந்தார். எதிரே இருக்கும் மரங்களெல்லாம் பறந்து போய்க் கொண்டிருந்தன. ஆள் நிற்பதுகூடத் தெரியாத அந்த இருட்டில் வெள்ளிக் கம்பிபோல் வளைந்து நீண்டு கிடந்த சாலையில், பியூக் பறந்துகொண்டிருந்தது.

ஒவ்வொரு திருப்பத்திலும் பின்னல் வரும் கார் நன்ருகத் தெரிந்தது.

“போய்க்கொண்டே இருக்கட்டுமா?” என்று கேட்டார் அந்தப் பெரிய மனிதர்.

நிழல் மனிதன் பின்னல் திரும்பிப் பார்த்துவிட்டு, “இன்னும் கொஞ்சதூரம் போங்கள், சொல்லுகிறேன்” என்ருன்.

பியூக், பறந்துகொண்டிருந்தது. போலீஸ் கார் துரத்திக்கொண்டிருந்தது, அவ்வளவு தூரம் வந்தும் கார் மறையவில்லை. அது அருகில் நெருங்கி வருவதுபோலவே தெரிந்தது. நெருங்கிக்கொண்டே இருந்தது.

நிழல் மனிதன், பின்னல் திரும்பிப் பார்த்துவிட்டு, “கடைசி வரைக்கும் விடமாட்டார்கள்போல் இருக்கிறது. சட்டென்று ஏதாவது ஒரு திருப்பத்தில் திரும்பிக் காட்டிற்குள் நுழைந்து ஒரு மர ஓரத்தில் நிறுத்திக்கொள்ளுங்கள். ஆனல், நீங்கள் திரும்புவது போலீஸ் காருக்குத் தெரியக் கூடாது” என்ருன். அப்பொழுது—

பின்னால், போலீஸ் காரில் வந்த போலீஸ்காரர்கள் அந்தப்பேரும் சுட்டார்கள். பியூக்கின், பின் கண்ணாடிக் கதவு சிதறியது. காரின் பல இடங்களிலும் குண்டுகள் பளிச் பளிச்சென்று பாய்ந்தன !

ஆனாலும் கார் நிற்கவில்லை. போய்க்கொண்டேதான் இருந்தது. நிழல் மனிதன் திரும்பிப் பார்த்துவிட்டு, "போலீஸ்காரர்கள். நம் காரின் சக்கரங்களைக் குறி பார்க்கிறார்கள். சக்கரங்களில் குண்டு பாய்ந்தால் நம் கதி அதோ கதிதான். சரிப்படுத்த முடியாவிட்டாலும் பரவாயில்லை. ஆக்ஸிலேட்டரை முடிந்தவரை அமுக்குங்கள். துப்பாக்கிக் குண்டு எட்டாத தூரத்துக்கு நாம் போகவேண்டும்" என்றான் !

பெரிய மனிதரின் கால், ஆக்ஸிலேட்டரை மிருக பலத்துடன் அமுக்கியது. பியூக் பறந்தது.

கொஞ்ச நேரத்துக்குள் பியூக், போலீஸ் காரை விட்டு வெகுதூரத்துக்கு வந்துவிட்டது.

நிழல் மனிதன் திரும்பிப் பார்த்தான். போலீஸ் கார் கண்ணுக்கே தெரியவில்லை.

நிழல் மனிதன் திரும்பி, "காரைச் சட்டென்று காட்டுக்குள் விடுங்கள்" என்று அவர் காதருகில் கத்தினான். சட்டென்று—

பியூக், காட்டிற்குள் நுழைந்து இருளில் மறைந்துவிட்டது. கொஞ்ச நேரத்தில்—

தூரத்தில் போலீஸ் காரின் வெளிச்சம் தெரிந்தது. அது வேகமாகச் சென்று மறைந்துவிட்டது. பியூக்கைத் துரத்திக்கொண்டு போவதாக அவர்களுக்கு நினைப்பு ! பாவம் ! சில வினாடிகளில்—

காட்டுக்குள்ளிருந்த பியூக் வெளியே வந்தது. வந்த திசையிலேயே அது போய்க்கொண்டிருந்தது.

பியூக் எங்கெங்கெல்லாமோ சுற்றிக் கடைசியில் இருண்ட தெரு ஒன்றுக்குள் நுழைந்து ஒரு சாதாரண வீட்டிற்கு முன் நின்றது.

கார், நின்றதும் அந்தப் பெரிய மனிதர், கீழே இறங்கினர். அடுத்தாற்போல நிழல் மனிதனும் இறங்கினன். இருவரும் அந்த வீட்டிற்குள் போனார்கள்.

அவர்கள் இருவரும் வீட்டிற்குள் நுழைந்த இரண்டொரு வினடிகள் கழித்து உள்ளே இருந்து எவனே ஒருவன் வெளியே வந்து காரை எடுத்துக்கொண்டு போய் ஒரு மறைவான இடத்தில் நிறுத்திவிட்டு மறுபடியும் அதே வீட்டிற்குள் நுழைந்தான்.

அந்தப் பெரிய மனிதரும், நிழல் மனிதனும் வீட்டிற்குள் இறுதியில் உள்ள ஓர் அறையில் வந்து அமைதியாக உட்கார்ந்தார்கள்.

நிழல் மனிதன் அங்கே கிடந்த ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு, "என் தலையில் பின்பக்கம் ஏதோ சுடுவதுபோல் இருக்கிறது. மயக்கமாக வருகிறது" என்று சொன்னன் கொஞ்சம் தணிந்த குரலில்.

பெரிய மனிதர் உடனே விளக்கு வெளிச்சத்தில் அவன் தலையின் பின் பக்கத்தைத் திருப்பிப் பார்த்தார்.

தலையின் பின் பக்கத்தில் ஓர் ஓட்டை இருந்தது. அதன் வழியாக இரத்தம் கசிந்து வழிந்துகொண்டிருந்தது. அந்த ஓட்டைக்குள் துப்பாக்கி குண்டு ஒன்று இருந்தது!

மண்டைக்குள் இருந்த அந்த குண்டைப் பார்த்தும் அந்தப் பெரிய மனிதருக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஆனாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், நிழல் மனிதனை நன்ருகச் சாய்வு நாற்காலியில் படுக்கவைத்து விட்டு. "ஒன்றும் இல்லை. ஏதோ தலையில் அடிபட்டிருக்கிறது. அவ்வளவுதான். எதற்கும் டாக்டரை வரவழைக்கிறேன்" என்று சொல்லிவிட்டு வேகமாக வெளியே வந்தார் அந்தப் பெரிய மனிதர்.

நிழல் மனிதன், நன்ருக வசம் பார்த்துச் சாய்ந்து கொண்டு கண்களை மூடிக்கொண்டான்.

கொஞ்ச நேரம் கழிந்தது.

ஒரு வைத்தியரும் அந்தப் பெரிய மனிதரும் நிழல் மனிதன் மயங்கிக் கிடக்கும் அறைக்குள் நுழைந்தார்கள்.

இருவரும் சேர்ந்து நிழல் மனிதனைத் தூக்கி அங்கே கிடந்த நீளமான நாற்காலியில் மெதுவாகக் குப்புறப் படுக்கவைத்தார்கள்.

வைத்தியர், கிடுகிடுவென்று ஆப்பரேஷன் செய்து நிழல் மனிதன் மண்டைக்குள்ளிருந்த குண்டை வெளியே எடுத்து விட்டு, மருந்து வைத்து, இரத்தத்தைத் துடைத்துவிட்டு, கட்டுக் கட்டினார்.

அந்தப் பெரிய மனிதரிடம், வேண்டிய மருந்தையும், கொடுக்க வேண்டிய விதத்தையும், செய்யவேண்டிய சிகிச்சைகளையும் சொல்லி, தான் மறுபடியும், காலையில் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார் வைத்தியர்.

மறுநாள் நடுப்பகல்.

நிழல் மனிதன், மெல்லக் கண்களைத் திறந்தான். மேல் சுவர்தான் தெரிந்தது. பிறகு மெல்லக் கண்களைத் திருப்பினான். பக்கத்தில் அந்தப் பெரிய மனிதர் சிரித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தார்.

நிழல் மனிதன் அவரைப் பார்த்துவிட்டு வேதனைதரும் தலையைத் தொட்டுப் பார்த்தான். அவன் கையில் துணிக் கட்டுத் தட்டுப்பட்டது.

“இதென்ன? என் தலையில் ஏன் கட்டு?” என்று அந்தப் பெரிய மனிதரிடம் மெல்ல வாய் திறந்து கேட்டான்.

அதற்கு, அவர் சிரித்துக்கொண்டே, “உன் தலையில் ஒரு துப்பாக்கிக் குண்டு இருந்தது. அதை எடுத்து விட்டுக் கட்டுப் போட்டிருக்கிறது” என்றார்!

நிழல் மனிதன் அதைக் கேட்டு அதிர்ச்சி அடையவில்லை. சிரித்துக் கொண்டே, “இப்பொழுதெல்லாம் போலீஸ்காரர்கள் குறி தவறாமல் சுடத் தொடங்கி விட்டார்கள்போலிருக்கிறது” என்றான்!

பெரிய மனிதர் சிரித்தார்.

கதவைத் திறந்துகொண்டு ஒருவன் ஒரு கோப்பை தேனீரையும் காபியும் கொண்டுவந்தான். தேனீரை அந்தப்

பெரிய மனிதரிடம் கொடுத்துவிட்டுக் காப்பியை நிழல் மனிதனிடம்கொடுத்தான். பிறகு கொஞ்சநேரத்தில் அவன் இரண்டுகாலிக் கோப்பைகளேயும் வாங்கிக்கொண்டு வெளியே போய்விட்டான்.

பெரிய மனிதர், நிழல் மனிதனைப் பார்த்து, "இப்பொழுது உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

"எனக்கு எப்பொழுதும் உடம்பு ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். இந்தக் குண்டைப்போல இன்னும் எத்தனை குண்டுகள் என் மண்டைக்குள் பாய்தாலும் ஒன்றும் ஆகாது" என்று சிரித்தான் நிழல் மனிதன்!

"உண்மைதான்" என்ருர் பெரிய மனிதர்.

"சொல்ல மறந்துவிட்டேன். நாம் வந்த பியூக் காரை நீங்கள் இனிமேல் உபயோகிக்காதீர்கள். அந்தக் காரில் பல குண்டுகள் பாய்ந்த அடையாளத்தை உங்களால் மாற்ற முடியாது. அந்தக் காரின் அடையாளத்தைப் போலீஸ் இலாகா கண்டுபிடித்துவிடும்" எனருன் நிழல் மனிதன்.

"எனக்குத் தெரியாதா?" என்ருர் பெரிய மனிதர்.

"நீங்கள் நிரம்பத் தெரிந்த மனிதராகத்தான் இருக்கிறீர்கள். இந்தமாதிரிக் குறுக்கு விசயங்களிலெல்லாம் நீங்கள் எனக்குச் சளேத்தவராக இல்லே. இவ்வளவு திறமைசாலியாக நீங்கள் இருந்தும், நீங்கள் ஏன் ஆபத்தில் சிக்கிக்கொண்டதாகச் சொல்லுகிறீர்கள்? அப்படித்தான் ஆபத்தில் சிக்கிக்கொண்டாலும் என்னுடைய உதவியைத் தேடுகின்ற அளவுக்கு உங்களுக்கு என்ன அப்படிப்பட்ட பரிதாபகரமான நிலேமை ஏற்பட்டது?"—நிழல் மனிதன் தெளிவாகவே இவ்வளவையும் கேட்டான்.

அவன் தலேயிலே பயங்கரமாகப் பாய்ந்துவிட்டிருந்த குண்டைப் பற்றி அவன் கொஞ்சம்கூடக் கவலேப்பட்டுக் கொண்டதாகவே தெரியவில்லே. அவன் குரல், கலங்காமல் கணீரென்றுதான் இருந்தது.

அந்தப் பெரிய மனிதர், நிழல் மனிதன் பேசியதைக் கேட்டதும் கொஞ்ச நேரம் அசடு வழியச் சிரித்தார். பிறகு, கைகளேப் போட்டுப் பிசைந்துகொண்டே, "நான் யார்.

என் உன் உதவியை நாடினேன் என்பதையெல்லாம் உனக்குச் சொல்லாமலா இருக்கப்போகிறேன்? நீ என்னைப் பற்றித் தெரிந்துகொள்ள மாட்டேன் என்றாலும், நான் உன் காதிலே வலிய வந்து என்னைப் பற்றிய சமாசாரத்தைத் திணிக்கத்தான் போகிறேன். அதற்கு முன்னால்..." என்று நீட்டிவிட்டு, மூடிக்கொண்டிருந்த இரண்டு கைகளின் விரலை மட்டும் தூக்கித் தட்டி, எதையோ தீவிரமாகச் சிந்திப்பதுபோல் பாவனை செய்தார்.

நிழல் மனிதன் அந்தப் பெரிய மனிதரின் நடிப்பைக் கண்டு உள்ளுக்குள்ளேயே சிரித்தபடியே, "அதற்கு முன்னால்..." என்று அவரையே திருப்பிக் கேள்வி கேட்டான்.

அந்தப் பெரிய மனிதர் அப்பொழுது தான் விழித்துக் கொண்டவரைப்போல் நிழல் மனிதன் பக்கம் திரும்பினார். நிழல் மனிதனின் முகத்துக்குள் எதையோ ஊடுருவிப் பார்த்தார். பிறகு, "அதற்கு முன்னால் நீ உன்னைப் பற்றிய விவரங்களை எனக்குச் சொல்லவேண்டும்" என்று தெளிவாகக் கேட்டார்.

நிழல் மனிதன் அவர் இப்படிக் கேட்பார் என்று கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை. அவன் மிகவும் அதிர்ச்சி அடைந்தான். "என்னைப்பற்றிய விவரங்களையா?" என்று திடுக்கிட்டுக் கேட்டான்.

நிழல் மனிதன் நிலைமையைக் கண்டு, பெரிய மனிதர், ஒரு மாதிரியாகச் சிரித்தார். பிறகு, அவனை இலேசாகத் தட்டிக் கொடுத்துக்கொண்டே, "என், இப்படித் திடுக்கிடுகிறாய்? உன்னைப் பற்றிய விவரங்களை நான் தெரிந்து கொள்ளக்கூடாதா? உன்னைப் பற்றிய விவரங்களை உனக்கு என்னிடம் சொல்லுவதற்குப் பயமாக இருக்கிறதா? நிழல் மனிதா, என்னைப் பார். நானும், நீயும் இப்போது ஏறக்குறைய ஒரே மாதிரி நிலைமையில்தான் இருக்கிறோம். உன்னையும் என்னையும் போலீஸ் பிடித்துக் கொள்ளும். மெய்யாகச் சொல்லுகிறேன். உன்னைப் பற்றிய விவரங்களை நீ என்னிடம் சொல்லுவதால் உனக்கு எந்த வகையான ஆபத்தும் ஏற்படாது" என்றார்.

நிழல் மனிதன் மேலும் தயங்கினன்.

அதற்கு அந்தப் பெரிய மனிதர் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டே, "போகட்டும். நிழல் மனிதா, நீ எனக்கு எவ்வளவுவரை சொன்னல் போதும் என்று நினைக்கிருயோ, அவ்வளவு சொல். அவற்றைக் கொண்டே நான் மற்றவற்றை யெல்லாம் தெரிந்து கொள்ளுகிறேன்" என்ருர், அதிக விருப்பம் இல்லாதவர்போல.

நிழல் மனிதன், தன் தலைக்கட்டைச் சரிப்படுத்திக் கொண்டு படுக்கையைத் தலைப் பக்கமாகக் கொஞ்சம் உயர்த்தினன். நடுவிலே அந்தப் பெரிய மனிதரும் அவனுக்கு உதவியாகப் பணி செய்தார். அவன் அந்தப் படுக்கையில் மெல்லச் சாய்ந்துகொண்டான். அந்தப் பெரிய மனிதர் அவன் படுப்பதற்கு அவன் உடம்பைப் பிடித்து விட்டார்.

அவன் சாய்ந்துகொண்டு அவரைப் பார்த்து ஒரு மாதிரியாகச் சிரித்தான். அவரும், பதிலுக்கு அவனைப் பார்த்துச் சிரித்தார். பிறகு, நிழல் மனிதனிடம், "உம். இப்பொழுது உனக்கு, வசதியாக இருக்கிறதல்லவா? இனிமேல் உன் கதையைச் சொல்லத்தொடங்லாமே, உம், இன்னும் என்ன தயக்கம்?" என்று கேட்டார். அவருடைய கை, நிழல் மனிதனின் பருத்துத் திரண்ட கையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டது.

கொஞ்ச நேரம் ஆயிற்று.

நிழல் மனிதன் இன்னும் வாயைத் திறக்கவே இல்லை.

அந்தப் பெரிய மனிதர் நிழல் மனிதனைப் பிடித்து மெல்ல உலுக்கினர்.

நிழல் மனிதன் ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டான். பிறகு பேசினன்:

"வேலியே பயிரை மேய்கிறது என்று ஒரு பழமொழி. நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" — இப்படியாகத் தொடங்கினன் நிழல் மனிதன்.

அதற்கு அந்தப் பெரிய மனிதர் கொஞ்சம் எரிச்சலோடு, "உன்னைப் பற்றிச் சொல்லப்பா என்ருல், நீ என்னமோ...?" என்ருர்.

நிழல் மனிதன் உதட்டுக்குள்ளேயே சிரித்துக்கொண்டு, " இந்தப் பழமொழிக்கு அடியிலே நான் பதுங்கி இருக்கிறது என் பழைய கதை" என்றான்.

அவர் ஒன்றும் புரியாமல் விழித்தார்.

நிழல் மனிதன், "மேலும் என்னைப்பற்றி உண்மைகளை எல்லாம் சொன்னால்கூட நீங்கள் நம்புவீர்களோ என்னவோ ?" என்றான்.

"நீ செய்யும் அட்டூழியங்களை யெல்லாம் மற்றவர்கள் சொல்லக் கேட்டால், இப்படி யெல்லாம் நடக்குமா, இது உண்மையாக இருக்குமா என்றுதான் தோன்றுகிறது. ஆனால், நேரில் போய்ப் பார்த்தால் அவ்வளவும் கலப்பில்லாத உண்மையாகத்தான் இருக்கிறது. உன்னைப் பற்றிய விவரங்களும் அப்படித்தான் இருக்குமோ ?" என்று அவனை உயர்த்தி வைத்துக் கேட்டார் அவர்.

நிழல் மனிதன் கொஞ்சநேரம் அசடு வழியச் சிரித்துக்கொண்டான். பிறகு, அந்தப் பெரிய மனிதர் பக்கம் திரும்பி, "நான் ஒரு பெரிய இராணுவ அலுவலகனாக இருந்தேன் என்றால் நீங்கள் நம்புவீர்களா ?" என்று அழுத்தமாகக் கேட்டான்.

இதைக் கேட்டதும் அந்தப் பெரிய மனிதர் முதலில் திடுக்கிட்டார். பிறகு, சமாளித்துக்கொண்டு, "ஏன் நம்பாமல் ? உன்னுடைய தேகக் கட்டைப் பார்த்துவிட்டு யார்தான் நம்பமாட்டார்கள் ? சின்னக் குழந்தைகூடச் சிப்பாயாகச் சேவகம் பார்க்கலாம் என்று சொல்லுமே ! ஆமாம், உண்மையாகவே சேனையில் இருந்தாயா ?" என்று சந்தேகத்தோடு கேட்டார்.

அதற்கு நிழல் மனிதன், நெற்றியைச் சுருக்கிக்கொண்டு, "பார்த்திர்களா ? எனக்குத் தெரியும், நீங்கள் நம்பமாட்டீர்கள் என்று. ஆனால், உண்மையாகச் சொல்லுகிறேன். நான் இராணுவத்தில் ஒரு மதிப்பான அலுவல் பார்த்து வந்தேன்" என்றான்.

இதைக் கேட்டதும் அந்தப் பெரிய மனிதரின் முகம் இலேசாக வெளுத்துக் காணப்பட்டது. பக்கவாட்டுப்

பையிலிருந்த கைக்குட்டையினல் முகத்தைத் துடைத்துக் கொண்டார். அப்போது இலேசாக வியர்வை அரும்பியதை அவரால் தடுத்துவிட முடியவில்லை. தொண்டையைத் தடவி விட்டுக்கொண்டார்.

நிழல் மனிதன், அந்தப் பெரிய மனிதரின் பரிதாப நிலைமையைக் கண்டு பலமாகச் சிரித்தான். அவன் அவரைத் தட்டிக் கொடுத்துக்கொண்டே, "நீங்கள் முன்னமேயே சொன்னதுபோல் நீங்களும், நானும் ஒரே வகையானவர்களாகத்தான் இப்போதைக்கு இருக்கிறோம். அது போகட்டும். உங்கள் பெயரையாவது நான் தெரிந்து கொண்டால் நல்லது என்று நினைக்கிறேன்" என்றான்.

அவன் இப்படிப் பேசியதும் அந்தப் பெரிய மனிதருக்குக் கொஞ்சம் தைரியம் வந்துவிட்டது. அவர் கொஞ்சம் பல்லைக் காட்டிக்கொண்டு, "எனக்கு எவ்வளவோ பெயர்கள் உண்டு நான், நான், நான் அவற்றுக்குள்ளே எந்தப் பெயரைச் சொல்லட்டும்?" என்று கேட்டார்.

"நீங்கள் கடைசியாக வைத்துக்கொண்ட பெயரைச் சொல்லுங்களேன்."

"கடைசியாக வைத்துக்கொண்ட பெயரா?" என்று கேட்டுவிட்டுச் சிறிது நேரம் யோசித்த அந்தப் பெரிய மனிதர், பிறகு, "ரசூல்" என்றார்.

இந்தப் பெயரைக் கேட்டதும் அந்தப் பெரிய மனிதரின் முகத்தின் அருகில்போய், இன்னும் நன்றாக உற்றுப் பார்த்தான் நிழல் மனிதன். பிறகு ஏதோ தெரிந்து கொண்டவனைப் போல் தலையை ஆட்டியபடியே, "ரசூல்... மிகவும் நல்ல பெயர்தான்" என்று ஒப்புக்கொண்டு, "ஐயா ரசூல், என் கதை உங்களுக்கு மிகவும் வேடிக்கையாகப் படலாம். என்னைப் பைத்தியக்காரன் என்றுகூட நீங்கள் நினைக்கலாம். கொஞ்சம் கவனமாகக் கேளுங்கள், நான் ஏன் இப்படிப் பயங்கரவாதியாக மாறினேன்? என்னுடைய கைவரிசையையெல்லாம் எந்தப் பக்கத்திலே காட்டுகிறேன்? என்னால் எல்லாருமே அவதிப்படுகிறார்களா? யாராவது சுகப்படுகிறார்களா? என்னை எல்லாருமே தூற்றுகிறார்களா? யாராவது போற்றுகிறார்களா?—இவை

களையெல்லாம் உங்களுக்குச் சொல்லுகிறேன், கடைசியில் என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை நீங்களே சொல்லுங்கள்" என்று நெடுகப் பேசிவிட்டுக் கொஞ்சம் நெளிந்து உட்கார்ந்தான் நிழல் மனிதன்.

ரசூல், இடத்தைவிட்டு எழுந்து நகர்ந்து உட்கார்ந்து கொண்டார். நிழல் மனிதன் இன்னும் என்ன சொல்லப் போகிறான் என்பதை அறியும் ஆவல், அவர் கண்களிலே மிதந்தது. நிழல் மனிதன் மேலும் மேலும் சொன்னான்.

"ஐயா ரசூல், என்னைப் பாருங்கள். என்னுடைய இந்த கட்டு மாறாத தேகத்தையும், உருண்டு திரண்ட உருவத்தையும் நன்றாக எடுத்துப் பாருங்கள். இந்த மாதிரி உடற்கட்டையும், உயர்ந்த உருவத்தையும் நீங்கள் மிக மிக, அற்புதமாகத்தான் பார்க்க முடியும். இப்படிப் பட்ட எனக்கும் மற்ற மனிதர்களுக்கும் வேறுபாடே கிடையாதா?

"ஒரு தடவை—எனக்கு நன்றாக் ஞாபகமிருக்கிறது. நாலைந்து சிப்பாய்கள் சேர்ந்து இரும்புத் தூணை இந்தப் பக்கமாக இருந்து அந்தப் பக்கம் தூக்கி வைக்க மிகவும் தடுமாறினார்கள். அப்பேர்ப்பட்ட இரும்புத் தூணை நான் ஒருவனே அவர்களை எல்லாம் ஒதுங்கிக்கொள்ளச் சொல்லிவிட்டு அந்தப் பக்கமாகத் தூக்கி எறிந்து விட்டேன்! இவ்வளவு வலிமை படைத்த நான் மற்றவர்களுக்குப் பயந்து நடந்துகொண்டிருக்கக் கொஞ்சங்கூட விரும்பவில்லை. எப்படி விரும்ப முடியும்?

"எந்த வகையிலாவது என் வலிமைக்கு—என்னுடைய திறமைக்கு நிகர் ஒருவருமே இல்லை என்று எல்லாரும் நினைக்கும்படி செய்ய வேண்டும். அதற்குத் தகுந்த நிலைமையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற வெறி, என் மனதுக்குள்ளே எப்போதும் உறுத்திக்கொண்டே இருந்தது. இரும்பு பிடித்தவன் கையும், உரம் படைத்தவன் உடலும் சும்மாவே இருக்காது.

"சங்கர்லாலைப் பற்றி நான் அடிக்கடி கேள்விப்படுவதுண்டு. பத்திரிகையிலும் படிப்பதுண்டு. அந்தத் துப்பறியும் நிபுணராலும் என்னைத் தெரிந்துகொள்ள முடியாதபடி-

நான் மறைந்து திரிந்து, என் திறமையைக் காட்ட வேண்டும் என்று நான் துடித்தேன். என்னை, சங்கர்லால் நேரில் பார்த்ததில்லை.

“என் திறமையை இந்தச் சங்கர்லாலிடம் காட்ட வேண்டும் என்ற என் ஆசையை நிறைவேற்றிக்கொள்வதற்காகவே நான் இந்தப் பகுதியிலேயே இருந்து வருகிறேன். தனக்கு நிகர் எவரும் இல்லை என்ற கர்வத்தோடு தலை நிமிர்ந்து நடக்கும் சங்கர்லாலைத் தலை குனியவைக்க வேண்டும் என்று எனக்கு ஆசை. என்னுடைய ஆசை, ஏறக்குறைய நிறைவேறிவிட்டது என்றுதான் பெருமையோடு சொல்லவேண்டும்.”

நிழல் மனிதன் தன்னுடைய நீண்ட கதையை இந்த இடத்திலே நிறுத்தினான். பிறகு, திருப்தியோடு ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு இரண்டு கைகளையும் உயர்த்தித் தலைக்குப் பின்னால் கட்டிக்கொண்டான்.

அந்தப் பெரிய மனிதர் நிழல் மனிதனை நன்றாக ஊடுருவிப் பார்த்தார். ஏனோ வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவருக்குள்ளேயே கொஞ்சம் மனம் விட்டுச் சிரித்துக்கொண்டார்.

நிழல் மனிதன், ஏதோ நிறைவேறாத திட்டத்தைப் பற்றிக் குறைபட்டுக்கொள்ளுகிறவனைப் போல் முகத்தை வைத்துக்கொண்டான். பெரிய மனிதர் குறுக்கிட்டு, “எனக்கு இன்னும் ஒரு ஐயம்” என்று தயங்கினபடியே மெல்லிய குரலில் கேட்டார்.

நிழல் மனிதன் விழித்துக்கொண்டவனைப்போல் அவர் பக்கம் திரும்பி, “நீங்களும் நானும் உயிர்த் தோழர்களாகி விட்டோம். என்னைப் பற்றிய ரகசியத்தை நீங்கள்தான் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள்.

“நான், நிழல் மனிதனாக மாறிய பிறகு அறிந்துகொண்ட முதல் மனிதரே நீங்கள்தான். என்னைப்பற்றிய ரகசியம் எதையுமே இனி நான் உங்களிடம் மறைத்து வைக்கப்போவதில்லை. என்னைப் பற்றி நீங்கள் என்ன தெரிந்துகொள்ளவேண்டுமானாலும் இப்போதே கேளுங்கள். சொல்லுகிறேன்” என்றான் மனம் விட்டு.

அவன் பேசும்போது இவ்வளவு அருமையான பேச்செல்லாம் வருகிறதே என்ற ஆச்சரியம் எவருக்குமே ஏற்படத்தான் செய்யும்.

அந்தப் பெரிய மனிதர் மெல்லச் சிரித்துக்கொண்டே, "இவ்வளவு பெரிய பெரிய கொள்ளைகளை யெல்லாம் அடித்து நீங்கள் நிறையச் சம்பாதித்திருக்க வேண்டுமே! அப்படி யிருக்கும்போது நீங்கள், ஏன் ஒருவேளை பலகாரத்துக்குக் கூடக் கையிலே காசில்லாமல் இருக்கிறீர்கள்? ஏன் இந்த மாதிரி நல்ல துணிகூட இல்லாமல் ஏழையாக இருக்கிறீர்கள்? இந்தக் கந்தலாடை யெல்லாம் வெறும் வேடமா, நடிப்பா?" என்று கேட்டார்.

நிழல் மனிதன், அவர் இப்படிக் கேட்டதும் பெருமை யோடு ஒரு சின்னச் சிரிப்புச் சிரித்தான். கந்தல் துணியில் உள்ள கிழிசலை யெல்லாம் தடவி விட்டுக்கொண்டே, "இதையெல்லாம்தானே கேட்கிறீர்கள்? இதெல்லாம் உண்மைதான். கலப்பில்லாத உண்மைதான். நான் உண்மையாகவே ஏழைதான். இப்போது என்னிடம் நீங்கள் பார்க்கிறீர்களே, இவ்வளவுதான் என்னுடைய எல்லாச் சொத்துகளும்! உண்மையாகவே கொள்ளையடித்த மறு நாள் நான் லட்சாதிபதியாகக் கூட இருப்பதுண்டு. அவ்வளவு சொத்தையும் இரண்டொரு நாட்களிலெல்லாம் தீர்த்துக் கட்டிவிட்டுப் பழையபடி பரதேசி ஆகிவிடுவேன்! அதிலேதான் நான் பெருமை அடைகிறேன். அவ்வளவு சொத்தையும் நான் எப்படித் தீர்த்துக் கட்டிவிடுகிறேன் என்பது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். நான் பேசுவது உங்களுக்குப் பைத்தியக்காரத் தனமாகக்கூடப் படலாம். ஆனால், உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். இந்த இடத்திலேதான் நிழல்மனிதனைப்பற்றிய உண்மையை நீங்கள் அறிந்துகொள்ள முடியும்.

"ஐயா ரகுல், நீங்கள் 'ராபின் ஹுட் ஆப் இங்கிலாந்'தைப் பற்றிப் படித்திருக்கிறீர்களா? அவன் பெரிய கொள்ளை, கொலைகளை யெல்லாம்கூட நடத்தியிருக்கிறான். அவனுக்கு இப்போது இங்கிலாந்து மக்கள் சிலை எடுத்திருக்கிறார்கள். ஏன் தெரியுமா? அந்தப் பெரிய கொள்ளைக்காரன் ஏழைகளுக்கு உதவி செய்தான். பணக்காரர்களைக்

கொள்ளை அடித்தான். அவனால் அவதிப்பட்டவர்கள் குறைவு. சுகப்பட்டவர்கள் மிகவும் அதிகம்!

"என்னுடைய திறமையை நான் கொள்ளையடிப்பதில் காட்டவேண்டும் என்று இறங்கினாலும், என்னுடைய உடல் பலம் என்னைக் கொள்ளைக்காரனாக மாற்றினாலும், என் மனத்திலே துரோகமான எண்ணம் கொஞ்சம்கூட இல்லை. நான் நிறையக் கொள்ளையடித்தாலும், அவற்றில் என் சுயநலத்துக்காகக் கொஞ்சம்கூட உபயோகித்துக் கொள்ளவே இல்லை. ஒருவேளைக் கஞ்சிக்கும் வழியில்லாமல் கண்ணீர்விட்டுக் கொண்டு, தங்குவதற்கு இடம் இன்றி, உடலை மூடக் கை அகலக் கந்தை இன்றி அவதிப்படும் ஏழை மக்களுக்காகச் செய்தேன்.

"துன்பப்பட்டுச் சம்பாதிக்காமல் பணத்தைப் பூட்டி வைத்திருக்கும் பெரிய மனிதர்களில் சில பேர் என்னால் அவதிப்பட்டது உண்மைதான். ஆனால், உழைப்பதற்குத் தயாராய் இருந்தும் வேலை கிடைக்காமல் திணறியவர்கள் என்னால் சுகப்பட்டார்கள். அவர்கள் மனதார என்னை வாழ்த்துகிறார்கள். எனக்கு அதுவே போதும்" என்று நெஞ்சுருகப் பேசி முடித்தான்.

இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பெரிய மனிதர், நிழல் மனிதனின் உதார குணத்தை மெச்சிப் பாராட்டினார். இவ்வளவு முரட்டுத் தேகத்துக்குள் கனிந்துருகும் மிருதுவான மனமிருந்தால் யார்தான் பாராட்டமாட்டார்கள்?

நிழல் மனிதன் திடுப்பென்று அந்தப் பெரிய மனிதரின் பக்கம் திரும்பி, "ஓட்டலிலே நான் நிழல் மனிதன் என்று நீங்கள் எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? என்னை முன்பின் உங்களுக்குத் தெரியுமா? உங்களைப் பற்றிய உண்மையை நீங்கள் என்னிடமிருந்து மறைக்கப் பார்க்கிறீர்களா? சொல்லுங்கள், நீங்கள் யார்? ஏன் இப்படிப் போலீஸுக்கு மறைந்து தலைமறைவாகத் திரிய வேண்டும்?" என்று அவரை உலுக்கிக் கேட்டான்.

அவர் அர்த்த நிறைவோடு சிரித்துக் கொண்டு, "உங்களைப் பற்றிய உண்மையையெல்லாம் நீங்கள்

என்னிடம் வெள்ளையாகச் சொல்லிவிட்ட பிறகு, என்னைப் பற்றிய உண்மையை மட்டும் நான் உங்களிடம் மறைக்க முடியுமா? அதற்கு முன்னால் என் முகத்தை நன்றாக உற்றுப் பாருங்கள். என்னை நீங்கள் எங்கேயாவது சந்தித்ததாக நினைவு இருக்கிறதா?" என்று கேட்டார்.

நிழல் மனிதன் அவர் முகத்தை உற்றுப் பார்த்தான். அவன் முகத்திலே பல வகையான சிந்தனை ரேகைகள் வளைந்து நெளிந்தன!

நிழல் மனிதன் வெகுநேரம் கழித்து, " இல்லை, உங்களை எனக்குத் தெரியவில்லை. இதற்கு முன் உங்களை நான் ஒரு தடவை கூடப் பார்த்ததில்லை. ஆனால், உங்கள் முகம் நன்றாகத் தெரிந்த ஒரு பிரபல முகம் மாதிரித் தெரிகிறது" என்றான் கொஞ்சம் ஐயத்தோடு.

" நன்றாகச் சொன்னீர்கள். என் முகத்திற்கும் பிரபலத்திற்கும் தொடர்பே இல்லையே! ஏதோ என் மனத்திருப்திக்காகச் சொல்லுகிறீர்கள்" என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் அந்தப் பெரிய மனிதர்.

பெரிய மனிதர் சிரிப்பதைப் பார்த்து, நிழல் மனிதனும் வேண்டுமென்று சிரமப்பட்டு மெல்லச் சிரித்தான். நிழல் மனிதன் தனக்காகச் சிரிப்பதை பெரிய மனிதர் மர்மமாகக் கவனிக்காமல் இல்லை.

இருள் பரவத் தொடங்கியது.

நிழல் மனிதன், புரண்டு நன்றாகத் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

பெரிய மனிதர், ஒன்றும் பேசாமல் அமைதியாக வெளியே தெரியும் இருளையே பார்த்துக்கொண்டிருந்தார்.

உள்ளேயும் இருள்.

பெரிய மனிதர் எதையோ ஆழ்ந்து சிந்தனை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது—

வெளிச்சம் தெரிந்தது.

பணியாள் விளக்கைத் தட்டிவிட்டுக் கையில் தேனீருடன் நின்றுகொண்டிருந்தான்.

பெரிய மனிதர் தேனீரைக் கொண்டு வரும்படி சைகை செய்தார். பணியாள் அவருக்கு அருகில் வந்து ஒரு தேனீரை எடுத்து அவர் கையில் கொடுத்தான். அவர் அதை வாங்கி வலது கையில் வைத்துக்கொண்டு இடது கையால் அயர்ந்து கிடக்கும் நிழல் மனிதனைத் தட்டி எழுப்பினுர். நிழல் மனிதன் எழுந்து உட்கார்ந்தான்.

"இந்தாருங்கள் தேனீர்" என்று பெரிய மனிதர் அவனிடம் தேனீரை நீட்டினுர், தன் கையினுல்.

"தேனீரா? எனக்கு வேண்டாம். காப்பி இருந்தால் தேவலே" என்ருன் நிழல் மனிதன், அரைகுறையாக மூடிக் கிடந்த தன் கண்ணைத் திறந்துகொண்டு.

"சரி, இவருக்குக் காப்பி கொண்டுவா" என்று பணியாளிடம் சொல்லிவிட்டு தேனீரைச் சுவைத்துக் குடிக்கத் தொடங்கினுர் அந்தப் பெரிய மனிதர்.

தேனீர் குடிக்கும் அந்தப் பெரிய மனிதரையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த நிழல் மனிதன்; "நீங்கள் தேனீரை அதிகமாக விரும்பிக் குடிப்பதைப் பார்த்தால் எனக்குக் கொஞ்சம் பயமாக இருக்கிறது" என்ருன்!

"ஏன்?" என்று தலையை நிமிர்த்திக் கேட்டார் அந்தப் பெரிய மனிதர். அவர் முகத்தில் மாறுதல் எதுவும் தெரியவில்லை. கேள்விக் குறிதான் தெரிந்தது!

"சங்கர்லால் தேனீரை அதிகமாக விரும்பி அடிக்கடி குடிப்பாராம். நீங்களும் தேனீரை விரும்பிக் குடிப்பதால் ஒருவேளை நீங்கள் சங்கர்லாலாக இருப்பீர்களோ என்ற பயந்தான்" என்ருன் நிழல் மனிதன்!

"ஆ......ஆ......ஆ......ஆ" என்று சிரித்தார் பெரிய மனிதர். அவர் அப்படிச் சிரித்துக்கொண்டே, "நல்ல ஐயம் உங்களுக்கு! நான் சங்கர்லாலேப் பார்த்ததே கிடையாது. அவருக்கு தேனீர் பிடிக்கும் என்பதும் எனக்குத் தெரியாது. நாம் எங்கே சங்கர்லால் கண்ணில் பட்டுவிடப் போகிறேமோ என்று பயந்துகொண்டே திரிகிறேன்! நீங்கள் என்னடாவென்ருல் என்னைப் போய்ச் சங்கர்லால் என்கிறீர்கள்? நல்ல ஐயம் உங்களுக்கு! நான் சங்கர்

லாலாக இருந்தால் உங்களை ஓட்டலில் உடனேயே கைது செய்திருப்பேன்!" என்றார்.

"ஆமாம், நீங்கள் சங்கர்லாலாக இருந்தால், நம்மை ஏன் போலீஸ் துரத்தவேண்டும்?" என்றான் நிழல் மனிதன்.

பெரிய மனிதர் மெல்லச் சிரித்துக்கொண்டார்.

"சரி, நீங்கள் இன்னும் உங்கள் வரலாற்றைச் சொல்லாமல் இருக்கிறீர்களே, சீக்கிரம் சொல்லுங்கள். என்னால் செய்ய முடிந்ததைச் செய்துவிட்டு நான் விரைவில் போக வேண்டும்" என்றான் நிழல் மனிதன்.

"இன்று இரவு முழுவதும் நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நாளைக் காலையில் நான் என்னைப்பற்றிச் சொல்லுகிறேன்" என்றார் பெரிய மனிதர்.

"பாதகமில்லை, சொல்லுங்கள்" என்றான் நிழல் மனிதன் அழுத்தமாக, கண்டிப்பான குரலில்.

"இல்லை. நான் சொல்லுவதைக் கொஞ்சம் கேளுங்கள். மண்டைக்குள் குண்டு பாய்ந்த அதிர்ச்சியும், வலியும் இன்னும் உங்களுக்கு இருக்கும். அந்த அதிர்ச்சியும் வலியும் போக, நீங்கள் அயர்ந்து தூங்கவேண்டும்."

"பாதகமில்லை. சொல்லுங்கள்" என்றான் நிழல் மனிதன் சற்றுக் கடுமையாக.

"அது சிக்கலான வரலாறு. அமைதியான நேரத்தில் கேட்டுப் புரிந்து செயலாற்றவேண்டும்" என்றார் அந்தப் பெரிய மனிதர் அமைதியாக.

இதைக் கேட்ட நிழல் மனிதன் கட்டிலை விட்டுத் தாவி எழுந்து நின்று, "உங்கள்மீது எனக்கு ஏதோ ஐயம் ஏற்படுகிறது. நான் வருகிறேன். தங்களைப் பற்றிய ஐயம் எனக்கு நீங்கிய பிறகு வந்து, நான், தங்களுக்கு உதவி செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியே கிளம்பினான்.

நிழல் மனிதனின் இந்தத் திடீர் செயலை அந்தப் பெரிய மனிதர் எதிர்பார்க்கவே இல்லை. ஆனாலும், சமாளித்துக்கொண்டு கதவோரத்தில் நின்றுகொண்டிருந்த பணி

யாளைப் பார்த்துச் சற்று கண்ணடித்துவிட்டு, "ஐயா...ஐயா ...நில்லுங்கள்" என்று கத்திக்கொண்டே, ஓடிப்போய் நிழல் மனிதன் கையைப் பிடித்துக்கொண்டு வந்து மறுபடியும் கட்டிலில் உட்காரவைத்தார். அப்போது—

ஒரு மனிதர் அறைக்குள் ஓடிவந்து, "ஐயா, போலீஸ் கார் ஒன்று நம் வீட்டிற்கு வருவதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறதாம். இன்னும் சற்று நேரத்தில் இங்கே போலீஸ் கார் வந்துவிடும்" என்று பதறினான்.

அந்தப் பெரிய மனிதர் பயத்துடன் மெல்ல எழுந்து நின்று, "நம் வீடு போலீஸுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

"அது எப்படித் தெரியுமோ எனக்குத் தெரியாது. நம் ஆள் ஒருவன் கார்கானவிலிருந்து போன் செய்தான்" என்றான் வந்தவன்.

"நம் ஆள் யார்?"

"ராகவன்?"

"ராகவனா?"

"ஆமாம்"

"அப்படியானல் உண்மையாகத்தான் இருக்கும். நம் கார்களில் ஒன்றைக் கொண்டுவரச் சொல்லு. நீங்களெல்லாம் விரைவில் வெளியேறுங்கள்" என்று சொல்லிவிட்டு நிழல் மனிதன் பக்கம் உடனே திரும்பி, "புறப்படுங்கள், இப்பொழுதே புறப்படுங்கள்" என்றார்.

"ஓ, நான் தயாராய் இருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே கட்டிலில் கிடந்த கைத்துப்பாக்கியை எடுத்து இடையில் செருகிக்கொண்டு எழுந்து எல்லாவற்றிற்கும் தயாராய் நின்றான் நிழல் மனிதன்.

அடுத்த விநாடி வெளியே கிளம்பினான். பின்னாலேயே அந்தப் பெரிய மனிதரும் பெரிய துப்பாக்கியை எடுத்துக் கொண்டு அவன் பின்னல் போனார்.

வெளியே நின்றுகொண்டிருந்த காரில், டிரைவர் இடத்தில் ஏறி உட்கார்ந்துகொண்டான் நிழல் மனிதன்.

அதைப் பார்த்த பெரிய மனிதரின் முகம் மாறியதிலிருந்து அவர் அதை எதிர்பார்க்கவில்லை என்று தோன்றியது. ஆனாலும் சட்டென்று சமாளித்துக்கொண்டு, "இது மிகவும் மோசமான வேளை. எப்படியும் தப்பியாகவேண்டும். நானே காரை ஓட்டுகிறேன்" என்றார் பெரிய மனிதர்.

இதைக் கேட்ட நிழல்மனிதன் மெல்லச் சிரித்துவிட்டு, "அப்படியானால் நான் கார் ஓட்டுவதில் மட்டமானவன் என்று தங்கள் அபிப்பிராயம்போல் இருக்கிறது. அப்படியெல்லாம் நினைக்காதீர்கள். என்னோடு கார் ஓட்டுவதில் உங்களை ஒப்பிட்டால் நீங்கள் ஒரு கற்றுக்குட்டி என்றுதான சொல்லவேண்டும். ஆனாலும், நம் கார் போய்க்கொண்டிருக்கும்போது நமக்கு முன்னும் பின்னும் ஏற்படப் போகும் ஆபத்தைச் சமாளிப்பதற்காக நான் பக்கத்து ஸீட்டில் உட்காருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பக்கத்து ஸீட்டில்போய் உட்கார்ந்தான்.

அந்தப் பெரிய மனிதர் சிரித்துக்கொண்டே டிரைவிங் ஸீட்டில் உட்கார்ந்தார். அடுத்த விநாடி—

கார். பின்னால் வந்து, சந்தைத் தாண்டியதும் பெரிய சாலையில் திரும்பிப் பறந்தது.

இருளைக் கிழித்துக்கொண்டு கார் பறந்தது. அப்பொழுதுதான் இருள் பரவிக் கனத்துக்கொண்டிருந்தது. அதனால் சாலையில் பல கார்களும் வண்டிகளும் வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருந்தன. மக்கள்கூடச் சிற்சில இடங்களில் தென்பட்டார்கள்.

கார். ஊரைத் தாண்டி வெகுதூரத்திற்கு வந்து விட்டது. அப்பொழுதும் அதன் வேகம் குறையவில்லை.

நிழல் மனிதன் முன்னாலும் பின்னாலும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே இருந்தான். அந்தப் பெரிய மனிதர் பின்னால் திரும்பிப் பார்க்கவே இல்லை. அவர் முன்னால் பார்த்துக்கொண்டே ஆக்ஸிலேட்டரைக் கொஞ்சம் கொஞ்சமாக அழுத்திக்கொண்டிருந்தார்.

கார், பறந்துகொண்டிருந்தது.

திடீரென்று—

டுமீல்......

குண்டு ஒன்று, காரின் பின் மட்காடை ஓட்டை போட்டுவிட்டுச் சென்றது.

நிழல் மனிதன், உடனே ஸீட்டுக்கடியில் உட்கார்ந்து கொண்டு, இடையில் இருந்த துப்பாக்கியை எடுத்து நீட்டிப் பிடித்துக்கொண்டு, "ஐயா, நீங்கள் குனிந்துகொண்டு காரை ஓட்டுங்கள். பின்னுலிருந்து நம்மை யாரோ சுடு கிருர்கள். அனேகமாகப் போலீஸாகத்தான் இருக்கும். நான் கவனித்துக்கொள்ளுகிறேன். நீங்கள் எச்சரிக்கை யாகக் குனிந்துகொண்டு ஓட்டுங்கள்" என்ருன்.

உடனே அந்தப் பெரிய மனிதர் முகத்தில் எதிர் பாராத கலவரம் பரவியது.

ஆனுலும், அவர் காரியத்தை விட்டுவிடாமல், முடிந்த வரை குனிந்துகொண்டு கண்களைமட்டும் கண்ணுடிக்குமேல் வைத்துக்கொண்டு ஆக்ஸிலேட்டரை இன்னும் சற்று அழுத்தினர். கார் பறந்தது. திடீரென்று—

தூரத்தில் காரின் வெளிச்சம் தெரியத் தொடங்கியது.

நிழல் மனிதன், காரில் உள்ள பின் கண்ணுடிச் சன்னல் வழியாகப் போலீஸ் காரின் வெளிச்சத்தைப் பார்த்துவிட்டு, "போலீஸ் கார்தான் நம்மைத் துரத்தி வருகிறது. அதில் உள்ள போலீஸ்காரர்களே நம்மைப் பார்த்துச் சுடுகிருர்கள். நீங்கள் முடிந்தவரை காரை வேகமாக ஓட்டுங்கள். நான் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டுத் திரும்பிக் காரின் பின்னுல் உள்ள சன்னல் வழியாகத் தூரத்தில் தெரியும் காரின் விளக்கு வெளிச்சத்தைப் பார்த்துச் சுட்டான். கண்ணுடிச் சில்கள் தெறித்தன!

கார் விரைந்து பறந்தது.

ஆனுலும், பின்னுல் வரும் போலீஸ் காரின் வேகம் இதைவிட அதிகமாக இருந்ததால் காரின் விளக்கு வெளிச்சம் நெருங்கிக்கொண்டே இருந்தது!

"ஐயா, ஆக்ஸிலேட்டரை முடிந்தவரை அமுக்குங்கள். போலீஸ் கார் நெருங்கிக்கொண்டே இருக்கிறது" என்று

சொல்லிவிட்டு, தூரத்தில் தெரியும் அந்த விளக்கு வெளிச்சத்தைப் பார்த்துச் சுட்டான் நிழல் மனிதன்.

அந்த விளக்கு வெளிச்சம் அப்படியேதான் தெரிந்தது. ஆனால், அது, அருகில் நெருங்கிக்கொண்டே இருந்தது.

நிழல் மனிதன் சுட்டான்.

இப்பொழுது தூரத்தில் வந்துகொண்டிருந்த விளக்கு வெளிச்சத்தில் ஒன்று அணைந்துவிட்டது!

நிழல் மனிதன் துப்பாக்கியிலிருந்து கிளம்பிய குண்டு, அந்தப் போலீஸ் காரின் விளக்குகளில் ஒன்றைத் தொலைத்துவிட்டது! நிழல் மனிதனுக்கு நிறைய உற்சாகம் கிளம்பியது. அவன் சுட்டான்.

குண்டு, எங்கே போயிற்று என்றே தெரியவில்லை! மறுபடியும் அவன் சுட்டான்.

அந்த விளக்கு வெளிச்சம் அணையவில்லை! அதற்குப் பதிலாக அது நெருங்கிக்கொண்டிருந்தது!

நிழல் மனிதன் துப்பாக்கிக்குள் குண்டுகளைத் தள்ளிக்கொண்டே, "ஐயா, ஆக்ஸிலேட்டரை இறுதிவரைக்கும் அழுத்துங்கள். போலீஸ் கார் நம்மை நெருங்கிக்கொண்டே இருக்கிறது" என்றான். அப்பொழுது—

கார், கடகடவென்று ஒரு மலைப் பாதையின்மேல் போய்க்கொண்டிருந்தது.

"கார் இப்பொழுது எங்கே போய்க்கொண்டிருக்கிறது?" என்று கேட்டுக்கொண்டே நிழல் மனிதன் தூரத்தில் தெரிந்த ஒற்றை விளக்கை நோக்கிச் சுட்டான். அப்பொழுது—

கார், கடகடவென்று அதள பாதாளத்தில் விழுந்துகொண்டிருந்தது! அதள பாதாளமான பள்ளத்தை நோக்கி இரண்டு மனிதர்களும் ஒரு காரும் மண்டிக்கிடந்த அந்த இருளிலே தலைகுப்புற விழுந்துகொண்டிருந்தார்கள்!

மறுநாள்.

காலை.

சங்கர்லால் பங்களாவிற்குள் ஒரு கார் நுழைந்து போர்ட்டிகோவில் நின்றது. கார் நின்றதும் டிரைவர் இறங்கி ஓடி வந்து, பின் பக்கத்துக் கதவைப் பணிவோடு திறந்தான். உள்ளே இருந்து உதவிப் போலீஸ் கமிஷனர் வகாப் குதித்து இறங்கினர்.

வெளியே நின்றுகொண்டிருந்த போலீஸ் பொன்னன் உதவிப் போலீஸ் கமிஷனரைக் கண்டதும் ஒரு ஸல்யூட் அடித்துவிட்டு மேலே ஓடினன்.

சங்கர்லால் தன் அறையில், கால்கள் இரண்டையும் மேசையின்மேல் போட்டுக்கொண்டு ஏதோ ஒரு புத்தகத்தைச் சுவையோடுப் படித்துக்கொண்டிருந்தார்.

பொன்னன் ஒரு ஸல்யூட் போட்டுவிட்டு அறைக்கு வெளியிலேயே நின்றுன்.

சங்கர்லால், புத்தகத்திலிருந்து பார்வையைத் திருப்பி, "என்ன பொன்ன ?" என்று கேட்டார்.

"உதவிக் கமிஷனர் ஆப் போலீஸ் வந்திருக்கிருர்" என்றுன் பொன்னன்.

"உடனே வரச் சொல்லு" என்றுர் சங்கர்லால்.

பொன்னன், "உத்தரவு" என்று சொல்லிவிட்டுக் கிழே இறங்கிப்போன கொஞ்ச நேரத்திற்குள், "வணக்கம் சங்கர்லால்" என்று வணங்கிக்கொண்டே வகாப் மேலே விரைந்து ஏறி வந்தார்.

"வணக்கம். வாருங்கள்" என்று வகாபை அன்போடு வரவேற்றுர் சங்கர்லால்.

வகாப், மேசைக்குப் பக்கத்தில் கிடந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்ததும் சங்கர்லாலின் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டு, "என்ன சங்கர்லால் உங்கள் நெற்றியிலே கட்டு ?" என்று கேட்டார்.

சங்கர்லால் மேசையின்மேல் இருந்த கால்களைக் கீழே இழுத்துக்கொண்டு, "நெற்றியிலே மட்டுந்தான ?" என்று சொல்லிக்கொண்டே தன் வலது கையை மூடிக்கொண்டிருந்த சட்டையின் கைப்பகுதியை மேலே தூக்கினர்.

"ஐயோ என்னது பெரிய கட்டு! என்ன சங்கர்லால், நீங்கள் எங்கிருந்தாவது விழுந்து விட்டீர்களா என்ன? ஏன் இந்தக் காயங்கள் உங்களுக்கு?" என்று உதவிக் கமிஷனர் வகாப் பதறினார்.

"நிழல் மனிதனைப் பிடித்ததினால்......" என்றார் சங்கர்லால் மிகவும் அமைதியாக.

"நிழல் மனிதனைப் பிடித்துவிட்டீர்களா?" என்று இருந்த இடத்திலிருந்து தாவிக் குதித்தார் மகிழ்ச்சி மிகுதியினால், வகாப்!

"பின்னே விடுவேனா நான்? இவ்வளவு விரைவில் இவ்வளவு இலகுவாக, நிழல் மனிதனைப் பிடிக்கமுடியும் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை வகாப்," என்றார் சங்கர்லால் சாவதானமாக.

"இப்பொழுது அவன் எங்கே? அவனை நான் பார்க்க வேண்டுமே" என்று பதறினார் வகாப்.

"இருங்கள். இதற்குள் இப்படிப் பதறுகிறீர்களே! அவசரப்படாமல் இருங்கள். நான் அவனை உங்களுக்குக் காண்பிக்கிறேன். இனிமேல் நம்மிடமிருந்து அவன் தப்பி விடமுடியாது" என்று சொல்லிவிட்டுப் பக்கத்தில் இருந்த மின்சார மணி விசையை அமுக்கினார் சங்கர்லால்.

கொஞ்ச நேரத்தில் மாது மேலே வந்தான். மேலே வந்து உதவிக் கமிஷனர் வகாப் இருப்பதைப் பார்த்ததும் திரும்பிப்போகத் தொடங்கினான்!

"டேய் மாது, என்னடா இது? வந்தவன், என்ன, ஏது என்று ஒன்றும் கேட்டுக் கொள்ளாமல் நீ பாட்டிற்குப் போய்க் கொண்டிருக்கிறாயே?" என்றார் சங்கர்லால்.

"தெரியும் தம்பி, இந்தப் போலீஸ் உத்தியோகஸ்தர் நம வீட்டு தேனிருக்குத்தானே வருகிறார். தெரியாதா? அதுதான் இரண்டு தேனீர் கொண்டுவரப் போகிறேன்" என்றான் மாது, மாடிப்படிகளில் நின்றுகொண்டே.

"மகா புத்திசாலிடா நீ. வயதாக வயதாக எல்லாருக்கும் மூளை மழுங்கும். உனக்கு என்னடா வென்றால்,

வயதாக வயதாக, மூளை கூர்மையாகிறது" என்று சொல்லி விட்டுச் சிரித்தார் சங்கர்லால். வகாபும் அவருடன் சேர்ந்து மனம் விட்டுச் சிரித்தார்.

"போ தம்பி, இப்பொழுது எனக்கு மூளை கூர்மையாகிறது என்றால் இதற்கு முன் என் மூளை மழுங்கிக்கிடந்தது என்று அர்த்தமா? இரு. உனக்குக் கொண்டுவரும் தேனீரில் உப்பைப் போட்டுக் கொண்டுவருகிறேன்" என்று பொய்க் கோபத்துடன் கீழே இறங்கிப் போய்க் கொஞ்ச நேரத்தில் இரண்டு தேனீருடன் மேலே வந்தான் மாது.

மாது, இரண்டு தேனீரையும் மேசையின் மேல் மெல்ல கொண்டுவந்து வைத்தான்.

வகாப் சிரித்துக் கொண்டே, "இந்தஇரண்டில் உப்புத் தேனீர் எதப்பா?" என்று கேட்டார்.

மாது, கடகடவென்று சிரித்துவிட்டு, "இரண்டும் சர்க்கரைத் தேனீர்தான். பயப்படாமல் எதை வேண்டு மானாலும் எடுத்துக் குடியுங்கள்" என்றான்.

ஆளுக்கொரு தேனீரைத் எடுத்து மெல்ல உறிஞ்சிக் குடிக்கத் தொடங்கினர்.

மாது, காலித் தட்டை எடுத்துக்கொண்டு கீழே இறங்கிப் போய்விட்டான்.

வகாப், தேனீரை மெல்லக் குடித்துக் கொண்டே, "என்ன சங்கர்லால், நிழல் மனிதன் இப்பொழுது எங்கே இருக்கிறான்?'

"இங்கேயே இருக்கிறான்" என்றார் சங்கர்லால் மிகமிக அமைதியாக!

"இங்கேயேவா?" என்று அலறினார், உதவிப் போலீஸ் கமிஷனர், வகாப்!

அவர் கையிலே இருந்த தேனீர்க் கோப்பை, கீழே விழுந்து தூள் தூளாகச் சிதறியது!

"என்ன வகாப் இது? இப்பொழுது என்ன நடந்து விட்டது? ஏன் உங்களுக்கு இந்தப்பதட்டம்?"

வகாப் கொஞ்சம் சமாளித்துக் கொண்டு "இல்லை... சங்கர்லால், நான் இந்தத் திடீர் பதிலை எதிர்பார்க்கவே இல்லை. அதனால்தான் இப்படி... அதுவும் நிழல் மனிதன் இங்கேயே இருக்கிறான் என்பதைக் கேட்டதும் என்னால் சற்றும் நம்பவே முடியவில்லை. அது சரி, இங்கே அவன் எப்படி இருக்கமுடியும்? இங்கே போதுமான அளவு பாதுகாப்பு இல்லையே?" என்றார்.

"நிழல் மனிதனைச் சிறைவைத்துக் காப்பது என்றால் முடியவே முடியாது. நீங்கள் எவ்வளவு தான் பாதுகாப்பு ஏற்படுத்தினாலும் சரி. தவறாது அவன் தப்பிவிடுவான்" என்றார் சங்கர்லால்.

"அப்படியானால் பாதுகாப்பே இல்லாத இடத்தில் அவனை நீங்கள் எப்படி வைத்திருக்கிறீர்கள்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை சங்கர்லால்! நீங்கள் சொல்லுவதை எல்லாம் வைத்துப் பார்த்துச் சொன்னால் நீங்கள் தான் நிழல் மனிதனோ என்னவோ?" என்றார் வகாப், முனகிக்கொண்டு!

இதைக் கேட்டதும் சங்கர்லால், வகாபின் முகத்தை ஊன்றிக் கவனித்தார்.

சங்கர்லால், தன்னையே கூர்ந்து பார்ப்பதை அறிந்த வகாபின் முகம், பயத்தால் இருண்டது!

வகாபின் முகம் இருண்டுவிட்டதை அறிந்த சங்கர்லால் மெல்லச் சிரித்துக்கொண்டே, "நீங்கள் எதை வைத்து நான்தான் நிழல் மனிதனோ என்று ஐயப்படுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"நீங்கள் தவறாக நினைக்காவிட்டால் சொல்லுகிறேன்" என்றார் தொண்டை அடைக்க, வகாப்.

"ஒன்றும் தவறாக நினைக்கமாட்டேன். உங்களை எனக்கு நன்றாகத் தெரியாதா, என்ன வகாப். உங்கள் மனதில் உள்ளதைத் தெளிவாகச் சொல்லுங்கள்" என்றார் சங்கர்லால்.

"நிழல் மனிதன், இதுவரைக்கும் ஒரு கொலை கூடச் செய்யவில்லை. அவன், நான், திருடியதை யெல்லாம், தான்

வைத்துக்கொள்ளாமல் எல்லாவற்றையும் மக்களுக்கு வாரிக் கொடுக்கிறான் என்று கேள்விப்படுகிறேன். 'ஏழை களுக்கு ஏற்றவன். மனிதர்களுக்குள் மதிக்கத்தக்கவன்' என்று அவனைப்பற்றி அனைவரும் பேசிக்கொள்ளுகிறார்கள். நீங்களும் அப்படித்தான். உங்கள் உள்ளமும் அப்படித் தான். அதனால்தான் ஒருவேளை நீங்களே நிழல் மனிதனாக இருப்பீர்களோ என்று ஐயமடைந்தேன், சங்கர்லால்'' என்றார் உதவிக் கமிஷனர் வகாப்!

"சரி, அப்படியே வைத்துக்கொள்ளுவோம். நானே நிழல் மனிதனாக இருந்தால், எனக்கு நெற்றியிலும் கையிலும் இந்தக் காயங்கள் ஏன் ஏற்படவேண்டும்? சொல்லுங்கள்'' என்று கேட்டார் சங்கர்லால்.

"கட்டையும், அவிழ்த்து எடுத்துவிட்டுப் பார்த்தால் தானே, காயங்களா இல்லையா என்பது தெரியும்!'' என்றார் வகாப் மெல்லச் சிரித்துக்கொண்டே.

சங்கர்லால், "நல்ல மனிதர் நீங்கள்! சரி, உங்களுக்கு இருக்கும் இந்த ஐயத்திற்கு இப்பொழுது முடிவுகட்டி விடுவது நலம். இந்தக் காயங்கள் உண்மையான காயங் கள்தாம். நான் அல்ல நிழல் மனிதன். நிழல் மனிதன் அடுத்த அறையிலே இருக்கிறான். அவனை உங்களுக்கு நான் காண்பிக்கிறேன். நீங்கள் எனக்கு ஒரு செய்தியில் உறுதி சொல்வதாக இருந்தால்'' என்றார்!

"ஓ, உறுதி சொல்லுகிறேன். காட்டுங்கள்'' என்றார் வகாப், குதூகலத்துடன்!

"நிழல் மனிதனை இப்பொழுது நீங்கள் கைது செய்யக் கூடாது. அவன் இப்பொழுது படுகாயங்களுடன் கிடக் கிறான். அவன் உடம்பு பரிபூரணமாகக் குணமானவுடன் தான் அவனை நீங்கள் கைது செய்யவேண்டும். அவனுக்கு உடம்பு குணமாகும்வரை என் வீட்டில் இருப்பான். அவன் தப்பிப் போகாமல் இருப்பதற்கு நான் பொறுப்பு. அவனைப் பாதுகாப்புக் கைதியாக வைத்து விசாரணை முடியும்வரை சகல வசதிகளுடன் அவனை நம்முடன் வைத்துக்கொள்ளவேண்டும். இதுவரை அவன்

ஒரு கொலைகூடச் செய்யவில்லை. அவன் இதுவரை கொள்ளையடித்ததையெல்லாம் ஏழை மக்களுக்கு வாரி விட்டுவிட்டான். கோடி கோடியாகக் கொள்ளை யடித்த அவன், இப்பொழுது ஒருவேளை உணவுக்கு வழியில்லாத பிச்சைக்காரனாய் இருக்கிறான்! எனவே, அவன் குற்ற மற்றவன். தனக்கென வாழாதவன். அவனுடைய மகத்தான சாமர்த்தியத்தை, நம் ஆளுவோர் பயன்படுத்திக் கொள்ளுவதற்காக, அவனை நிபந்தனை இன்றி விடுதலை செய்து அவனுக்கு மதிப்பும் மரியாதையும் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதாய் இருந்தால் அவனை நீங்கள் பார்ப்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. இல்லாவிட்டால் நீங்கள் அவனை எப்போதும் பார்க்கவே முடியாது" என்றார் சங்கர்லால்!

"ஆகா! சரியான யோசனை சொன்னீர்கள் சங்கர்லால்! அப்படியே செய்வோம். வாருங்கள் அவனைப் பார்ப்போம்" என்று துள்ளிக் குதித்துக்கொண்டே அடுத்த அறைக்கு ஓடினார், உதவிப் போலீஸ் கமிஷனர் வகாப்.

சங்கர்லால், அந்த அறைக் கதவைத் திறந்தார். அங்கே—

கட்டிலில் பிணம்போலக் கிடந்தான் நீல மனிதன்! அவன் கண்கள் பாதி திறந்து மயங்கிக் கிடந்தன. அவன் தலை, கை, காலெல்லாம் ஒரே கட்டு! அவன் அசையாமல் அரைக் கண்களை மட்டும் திறந்துகொண்டு பிணம்போல உணர்வின்றிக் கிடந்தான்!

நீண்டு வேதாளம்போல் கிடக்கும் அந்த உருவத்தை வகாப், இமைகளை இமைக்காமல் பார்த்தார்!

சங்கர்லால், கதவை மெல்லச் சாத்தினார்.

"இவனை எப்படிச் சங்கர்லால் பிடித்தீர்கள்?" என்று கேட்டார் வகாப், மெல்லிய குரலில்.

"வாருங்கள் சொல்லுகிறேன்" என்று தன் அறைக்கு அவரை அழைத்துச் சென்றார் சங்கர்லால்.

வகாபை அங்கிருந்து அழைத்துக்கொண்டு சங்கர்லால், தன் அறைக்கு வந்து தன் இடத்தில் உட்கார்ந்தார். வகாபும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார்.

சங்கர்லால், மணிவிசையை அமுக்கிவிட்டுக் கைக் குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டார்.

மாது, இரண்டு தேனீருடன் வந்து ஆளுக்கொரு கோப்பையை கொடுத்துவிட்டுத் தட்டை எடுத்துக்கொண்டு கீழே இறங்கிப்போனான்.

சங்கர்லால், தேனீரைக் குடித்துவிட்டு, தான், நிழல் மனிதனைப் பிடித்த கதையை வகாபுக்குச் சொல்லத் தொடங்கினார்:

"நீங்கள் துன்பப்படாமல் நிழல் மனிதனைப் பிடிக்கும் பொறுப்பை என் தலையில் போட்டுவிட்டுப் போய்விட்டீர் கள். நான் இரண்டொரு நாட்களாய் என்ன செய்வ தென்றே தெரியாமல் விழித்தேன். ஆனால், எப்படியும் அவனை நான்தானே கண்டுபிடித்தாக வேண்டும்! ஆழ மாகவே சிந்தனை செய்தேன். அதன் பிறகு உடனே செயலில் இறங்கத் தொடங்கினேன்.

"இந்தப் பக்கத்தில் மக்கள் அதிகமாகக்கூடும் இடம் மஸ்டா ஓட்டல்தானே? அங்கே நிழல் மனிதன் ஒரு தடவையாவது வருவான் என்று எனக்குப் பட்டது. அப்படி அவன் வராவிட்டாலும் அவனோடு தொடர்பு உள்ளவர்களாவது வருவார்கள் என்று நினைத்தேன். அதனால் அன்றாடம் மஸ்டா ஓட்டலைக் கவனித்துக் கொண்டு வந்தால் எப்படியும் நிழல் மனிதனைக் கண்டு பிடித்துவிடலாம் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

"உடனே நான், நம் வைத்தியர் மனோகரனிடம் போய், பிளாஸ்டிக் ட்ரீட்மெண்ட் செய்து முகத்தை மாற்றி, உப்ப வைத்துக்கொண்டேன். பெயரையும் ரசூல் என்று மாற்றிக்கொண்டேன். குரலையும் மாற்றிக்கொண்டேன்.

"நான், மாறுவேஷத்தோடுபோனால் நிழல் மனிதனோடு நான் நெருங்கிப் பழக முடியாது. அவனும் ஐயப் படுவான். நான் இயல்பாக என் தோற்றமே அப்படித் தான் என்கிறமாதிரி அங்கே போனால் ஐயப்படுவதற்குச் சந்தர்ப்பமே இல்லையல்லவா?

"நான், இந்தப் பங்களாவை விட்டுவிட்டு என்னுடைய பழைய வீட்டிற்குப் போய்ப் பாழடைந்து கிடந்த அந்த

விட்டை நன்றாகச் சுத்தப்படுத்திவிட்டு அங்கேயே என் விட்டை வைத்துக்கொண்டேன். நிழல் மனிதனைக் கண்டு பிடிக்கும் வரை அங்கேயே என் விட்டை வைத்துக் கொள்ளுவதென்று தீர்மானித்தேன். அதனால் நம் சி.ஐ.டி. இலாகாவில் உள்ள சிலரை அந்த வீட்டில் வேலைக்காரர்கள் மாதிரி நடிக்கச் சொன்னேன். சி. ஐ. டி. இலாகாவில் உள்ள சில கார்களையும் கொண்டுவந்து அங்கே வைத்துக் கொண்டேன்.

“இங்கே சிங்கையும், மாதுவையும் சமையல்காரனையும் பத்திரமாக இருக்கும்படி எச்சரிக்கை செய்துவிட்டு, முக்கியமான செய்தி ஏதாவது இருந்தால், மாதுவை மட்டும் வந்து ரகசியமாகச் சொல்லச் சொல்லிவிட்டு, நான் அந்தப் பழைய வீட்டிலேயே நிரந்தரமாக இருந்துகொண்டு, அடிக்கடி மஸ்டா ஓட்டலுக்குப் போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருந்தேன்.

“மஸ்டா ஓட்டலில் நிரந்தரமாய்த் தங்கி இருப்பவர்களையும், நிரந்தரமாய்த் தங்கி இருப்பவர்களைப் பார்க்க வருகிறவர்களையும், அடிக்கடி வந்து காபி சாப்பிட்டுவிட்டுப் போகிறவர்களையும் நான் கூர்ந்து கவனித்துவந்தேன்.

“நான், எவரை ஐயப்பட்டேனோ அவர்களோடெல்லாம் நெருங்கிப் பழகினேன். அதனால் எனக்கு எவ்வளவு செலவாயிற்றுத் தெரியுமா?” என்று சொல்லி விட்டுச் சிரித்தார் சங்கர்லால்!

“அதற்கென்ன. நீங்கள் செலவழித்ததைப்போல் இரண்டு மடங்கு வாங்கித் தருகிறேனே” என்று பதிலுக்குச் சொல்லிவிட்டு வாகாயும் சிரித்தார்!

சங்கர்லால் மறுபடியும் தொடர்ந்தார்.

“ஒரு நாள் நான் மாடியிலிருந்து, டீயும் சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்களையும் ஓட்டலுக்கு வெளியே நிற்பவர்களையும் கவனித்துக்கொண்டிருந்தேன்.

“வெளியே ஒரு பிச்சைக்காரன் நின்றுகொண்டிருந்தான். அவனுக்கு நல்ல பசி என்பது அவன் முகத்தில்

தெரிந்தது ; அவன் தன், பசியைத் தீர்த்துக்கொள்ளத் தவிக்கிறுன் என்பதும் அவன் முகத்தில் நன்கு தெரிந்தது. வெளியே வெகுநேரம் காத்து நின்ற அவன், பசி தாங்க முடியாமல் கடைசியில் சட்டென்று காசு இல்லாமலே சாப்பிடுவது என்ற முடிவுக்கு வந்து, ஓட்டலுக்குள் நுழைந்து, தனியாக இருந்த ஓரிடத்தில் போய் உட்கார்ந்து, வயிறு முட்டச் சாப்பிடத் துவங்கினுன்.

“அவனுடைய விழிகளையும், முகபாவத்தையும், அவனுடைய ஒவ்வொரு சிறு செயலையும் நான் கூர்ந்து கவனித்தேன். அவனுடைய ஒவ்வொரு செயலிலும் பெரிய மனிதனின் தன்மை இருந்தது. அவன் திரண்டு, உருண்டு இருந்தான். அவன் பிச்சைக்காரன் அல்ல என்றும், அவன் நிழல் மனிதனுய் இருக்கலாம் என்றும் நினைத்தேன்.

“அவன் சாப்பிட்ட பிறகு பில்லுக்கு எப்படிப் பணம் கொடுப்பது என்று சிந்தனை செய்துகொண்டிருந்தான். நான், இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று அறிந்து, கீழே இறங்கி அவனிடம் போனேன்.

“அவனுக்கு அருகில் உட்கார்ந்ததும் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டினேன். அவன் அப்படியே பிரமித்து அசந்து போய்விட்டான்!

“நீ பில்லுக்குப் பணம் இல்லாமல் சாப்பிடுவது மட்டும்தான் எனக்குத் தெரியும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறுயா? நீதான் நிழல் மனிதன் என்பதும் எனக்குத் தெரியும் என்று சும்மா ஒரு போடு போட்டேன். இதைக் கேட்டதும் அவனுக்குக் கை கால்களெல்லாம் உதறத் தொடங்கிவிட்டன! நானும் அசந்துவிட்டேன்! இப்படி நடக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை! சும்மா தூண்டிலைப் போட்டு வைப்போம், மீன் விழுந்தாலும் சரி, விழாவிட்டாலும் சரி என்கிற மனப்பான்மையில், ‘நீ தான் நிழல் மனிதன் என்பதும் எனக்குத் தெரியும்’ என்று சும்மா சொல்லி வைத்தேன். என் வாய்ப்புக் காரணமாக அவனே நிழல் மனிதனுக இருந்துவிட்டான்!”

—இப்படி, தான், மாறுவேடத்தோடு இருக்கும்போது, நிழல் மனிதனேடு நடந்த சம்பவங்களில் ஒன்றைக்கூட

விடாமல் கடைசி வரைக்கும், அத்தனையையும், நடந்தது முழுவதையும் சொன்னார் சங்கர்லால்.

நடந்த விவரங்கள் முழுவதையும் கேட்டதும் வகாப் அப்படியே ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனார்.

"ஆமாம், மலைப் பாதையில் போய்க்கொண்டிருந்த உங்கள் கார், திடீரென்று அதளபாதாளத்தில் விழுந்து விட்டதாகச் சொல்லுகிறீர்களே, அந்த விபத்தில் இருந்து நீங்கள் இருவரும் எப்படித் தப்பினீர்கள்?" என்று இறுதியாகத் தனக்கு இருந்த ஒரே ஐயத்தைக் கேட்டார் வகாப்.

"ஏற்கனவே நான் எல்லா ஏற்பாடுகளும் செய்து வைத்திருந்தேன். அதன்படி அந்த மலைக்குக் கீழே உள்ள மரங்களை யெல்லாம் வெட்டிவிட்டு, மிகப் பெரிய வலையை விரித்துக்கொண்டு நூற்றுக்கணக்கான பேர் தயாராய் இருந்தார்கள். திட்டப்படி நான் அந்த இடத்தில் அந்தக் காரைத் திருப்பினேன். கார், பாதையை விட்டு உருண்டு கீழே நூற்றுக்கணக்கான பேர் பிடித்துக்கொண்டிருந்த வலையில் போய் நேராக விழுந்தது. ஏற்கனவே எல்லாம் தெரியுமாதலால் நான் முன் எச்சரிக்கையாகவே இருந்து சிறு காயத்துடன் தப்பித்துக்கொண்டேன். நிழல் மனித னுக்கு இந்த ஏற்பாடெல்லாம் தெரியாததாகையால் அவ னுக்கு நிறையக் காயங்கள்" என்றார் சங்கர்லால்.

"பிரமாதம் சங்கர்லால்! தைரியசாலி என்றால் நீங்கள் தான் தைரியசாலி!" என்றார்.

"ஊம்......ஒரு வழியாய் நீங்கள் எனக்குக் கொடுத் திருந்த பணியை நான் செய்துவிட்டேன். இனிமேல், நான் நிம்மதியாய் இருக்கலாம் என்று நினைக்கிறேன்" என்று சங்கர்லால் கூறிவிட்டு வகாபை நோக்கினார்.

"நன்றாக நிம்மதியாய் இருங்கள் சங்கர்லால். ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்" என்றார் வகாப்.

அப்பொழுது—

கீழே காவல் காத்துநிற்கும் பொன்னன் மேலே வந்து, சங்கர்லால் அறைக்கு எதிரே நின்றான்.

"என்ன பொன்னு?" என்று கேட்டார் சங்கர்லால்.

"கமிஷனர் ஆப் போலீஸ் வந்திருக்கிறார் தங்களைப் பார்க்கவேண்டுமாம். வரச் சொல்ல உத்தரவு உண்டா?" என்று பணிவோடு கேட்டான்.

"கமிஷனர் ஆப் போலீஸா? வரச் சொல்லு, வரச் சொல்லு" என்று எழுந்து நின்றுகொண்டார் வகாப்.

சங்கர்லால் "வரச் சொல்லு" என்றார்.

"உத்தரவு" என்று கீழே போனான் பொன்னன்.

கமிஷனர் ஆப் போலீஸ் மேலே வந்தார்.

வகாப், நிமிர்ந்து நின்றுகொண்டு சல்யூட் அடித்தார். கமிஷனர் ஆப் போலீஸ் பதிலுக்கு ஒரு சல்யூட் போட்டு விட்டுச் சங்கர்லாலை வணங்கினார். சங்கர்லால், வணங்கிக் கமிஷனர் ஆப் போலீஸை வரவேற்றார்.

போலீஸ் கமிஷனர், நாற்காலியில் உட்கார்ந்ததும் வகாபும் உட்கார்ந்தார்.

சங்கர்லால் மணியின்விசையை அமுக்கினார்.

மாது வந்தான்.

"மூன்று கோப்பை தேனீர்" என்றார் சங்கர்லால்.

மாது, கீழே போய் தேனீர் கொண்டுவந்தான்.

கமிஷனர், தேனீரைக் குடித்துக்கொண்டே, "உங்களிடம் தான் வந்தேன் சங்கர்லால்" என்றார்.

இதற்குள் வகாப் முந்திக்கொண்டு, "சங்கர்லால், நிழல் மனிதனைப் பிடித்துவிட்டார்" என்றார்.

"ஓ! நன்றி. பெரிய மகிழ்ச்சியான செய்தியே எனக்கு. இதைவிடக் களிப்பான செய்தி வேறுஎன்ன இருக்க முடியும் எனக்கு? நிழல் மனிதன் விவகாரம் சங்கர்லாலிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது என்றதுமே எனக்கு நிழல் மனிதனைப் பற்றிய கவலை எல்லாம் மறைந்து விட்டதே" என்று சொல்லிவிட்டுச் சங்கர்லாலின் கையைப் பிடித்துக் குலுக்கினார் கமிஷனர்.

“என்ன அலுவலாக வந்தீர்கள்?” என்று வெகு அமைதியாகக் கேட்டார் சங்கர்லால்.

“உங்களை அயர்லாந்து சர்க்கார் அவசரமாக அழைத்திருக்கிறார்கள். நீங்கள் அயர்லாந்து செல்ல வசதிப்படுமா? நாங்கள் உங்களை அயர்லாந்து செல்ல அனுமதிக்க முடியுமா? என்று மத்திய அரசாங்கம் எங்களைக் கேட்டிருக்கிறது. தங்கள் எண்ணம் என்ன? புறப்படுகிறீர்களா?” என்று கேட்டார் கமிஷனர்.

“ஓ, புறப்படுகிறேன். எனக்குங் கொஞ்சம் மாறுதல் வேண்டும். இங்கேயும் எனக்கு ஒன்றும் வேலை இல்லை. நிழல் மனிதனுக்குப் பூரணமாக உடம்பு குணமானதும், அவனுக்கு நான் சொல்லவேண்டியதை சொல்லி உங்களிடம் ஒப்படைத்த பிறகு, நான் புறப்படத் தயாராய் இருக்கிறேன்” என்றார் சங்கர்லால்.

“நிரம்ப மகிழ்ச்சி” என்று சங்கர்லாலின் கையைப் பிடித்துப் பலமாகக் குலுக்கினார் கமிஷனர் ஆப் போலீஸ்.

கொஞ்ச நேரத்தில் கமிஷனர் ஆப் போலீஸும் உதவிக் கமிஷனரும் விடைபெற்றுக்கொண்டார்கள்.

மாது தேனீரோடு வந்து நின்றான். சங்கர்லால், அதை வாங்கிக்கொண்டு, “டேய் மாது, அயர்லாந்து போகவேண்டும். தயாராய் இரு”—என்றார்.

“அது என்ன தம்பி அயர்லாந்து? அது எங்கே இருக்கிறது? போய்விட்டு ஒரு நாள் இரண்டு நாளில் திரும்பிவிடலாமா?” என்று கேட்டான் மாது.

“போடா மடையா, போய்விட்டுவர ஆறு மாதம் ஆகும்” என்றார் சங்கர்லால்!

* * *

கப்பல், கரையோரமாக நின்றுகொண்டிருந்தது. அது கிளம்ப இன்னும் நாழிகை இருந்தது.

கப்பலை ஒட்டிக் கரையோரத்தில் சங்கர்லால் நின்றுகொண்டிருந்தார். அவரைச் சுற்றிப் போலிஸ் கூட்டம்,

கூட்டம், ஒரே கூட்டம்! துறைமுகத்திற்கு வெளியே, அயல்நாடு செல்லும் அருமைச் சங்கர்லாலைப் பார்க்க ஒரே கூட்டம் மயம்!

கமிஷனர் ஆப் போலீஸ், தன் கையில் இருந்த பெரிய மாலையைச் சங்கர்லாலின் கழுத்தில் போட்டார். ஒரே கை தட்டல்! சங்கர்லால், தன் கழுத்திலிருந்த மாலையை எடுத்தார். பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மாது, அந்த மாலையை வாங்கிக்கொண்டான்.

வகாப், தன் கையில் இருந்த பெரிய மலர் மாலையைச் சங்கர்லாலின் கழுத்தில் போட்டார். ஒரே கை தட்டல்! ஒரே ஆரவாரம்!

அதற்குப்பிறகு சங்கர்லாலைத் தெரிந்த போலீஸ் உத்தியோகஸ்தர்களெல்லாம் ஒருவர் பின் ஒருவராக வந்து மாலை போட்டுக்கொண்டே இருந்தார்கள். ஊர்ப் பிரபலஸ்தர்களின் வரிசை அடுத்தபடியாக வந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் இளைத்தவர்கள் இல்லை என்று சொல்லுவதுபோல் போட்டி போட்டுக்கொண்டு பெரிய பெரிய மாலைகளாகக் கொண்டுவந்து சாய்த்தார்கள்.

கூட்டத்தில் கிளம்பிய கை தட்டலும், ஆரவாரமும் யார் என்ன சொல்லியும் அடங்கவில்லை. இறுதியில் சங்கர்லாலே எல்லாரையும் வணங்கி அமைதியாக இருக்கும்படி சைகை காட்டிக் கையமர்த்தினர்.

அவ்வளவுதான், மகுடிக்காரன் வசப்பட்ட நல்லபாம்பைப்போல, கூட்டம் அப்படியே வாய்மூடிக் கை மடக்கிக் குப்பென்று அடங்கிவிட்டது. சங்கர்லாலிடம் அப்படி என்னதான் மந்திர சக்தி இருக்குமோ!

இறுதியில் கமிஷனர் ஆப் போலீஸ் கூட்டத்தின் நடுவிலிருந்து எழுந்து நின்று பேசினர். அவர் குரல் சற்றுக் கம்மியிருந்தது.

" சகோதரர்களே, சகோதரிகளே!"

' உங்கள் எல்லாருடைய முகத்திலும் களிப்பா கவலையா என்று பிரித்தறிய முடியாத உணர்ச்சி, பின்னிக்கொண்டிருப்பதைக் காண்கிறேன். சங்கர்லாலைப் பற்றித்

தெரியாதவர்கள் நம் தேசத்திலே ஒருவர்கூட இருக்கமாட்டார்கள் என்று உறுதியாகச் சொல்லலாம். இந்தியா மட்டுமென்ன, வையகம் முழுதுமே இன்று அவரை நன்கு தெரிந்துகொண்டிருக்கிறது. அவரை மெச்சிப் பாராட்டுகிறது. மற்ற எல்லா தேசத்தவர்களும் சங்கர்லால் தங்கள் தேசத்தவராக இல்லையே என்று குறைபட்டுக் கொள்ளுகிறார்கள்; சங்கர்லால், நமக்குக் கிடைத்த விலை மதிப்பற்ற மாணிக்கம். நமது அருமைத் தேசத்தின் பெருமையை விளக்கும் அணையாச் சுடர். நமது தாய் நாடு பெற்றெடுத்த தவப் புதல்வர். இந்த மனிதகுல மாணிக்கம் கொஞ்ச நாளைக்கு நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து, தூர தேசம் போகிறார்.

"பொது மக்களாகிய உங்களுக்குத் தெரியாது, அவரால் நாங்கள் எவ்வளவு தூரம் பயனடைந்தோம் என்பது. சங்கர்லால் எங்கள் இலாகாவின் இருதயம். எங்களுக்கு அவர்தான் முதுகெலும்பு. இன்று அவர் நம்மைப் பிரிந்து வெளி நாடு செல்லுகிறார்.

"இந்தத் துக்கம் நிறைந்த நேரத்திலே நமது துப்பறியும் லைட்ஹௌஸ் சங்கர்லால் எங்கே போகிறார், எதற்காகப் போகிறார் என்பதையெல்லாம் நான் முக்கியமாகச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அயர்லாந்திலே ஒரு பெரிய வழக்கு. அந்த வழக்கில் ஈடுபட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அயர்லாந்து சர்க்கார், தங்களால் ஆனவரை எவ்வளவோ முயற்சி செய்தார்கள். தொடர்புள்ள இலாகா முழுவதுமே இரவென்றும், பகலென்றும் பாராமல் பாடுபட்டது. இறுதிவரை அவர்களால் அந்தப் பெரிய வழக்கின் விவரத்தைச் சேகரித்துக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கவே முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறார்கள்.

"சங்கர்லாலைத் தங்கள் நாட்டுக்கு அனுப்பி அந்தப் பெரியவழக்கில் உள்ள சிக்கலை விடுவித்துக்கொள்ள உதவி செய்ய வேண்டுமென்று அயர்லாந்து சர்க்கார் நமது மத்திய சர்க்காரிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். நமது மத்திய சர்க்கார், சங்கர்லாலுக்குக் கடிதம் எழுதிச் சங்கர்லாலின் சம்மதத்தைக் கேட்டிருந்தார்கள்.

"அயர்லாந்துக்குப் போய்த் தன்னுடைய திறமையையும், தாய் நாட்டின் பெருமையையும் நிலை நாட்டுவதற்காக இன்று கப்பலேறிப் போகிறார் சங்கர்லால். அவரை வாழ்த்துவோம்.

"அவர் உடல் நலத்தோடு அயர்லாந்தை அடைந்து, அயர்லாந்து சர்க்கார் கொடுக்கும் பரிசைச் சுமந்து கொண்டு, வெற்றி வீரராக நாடு திரும்பும் நல்ல நாளை விரைவிலேயே எதிர்பார்ப்போம். அவர் நலத்தோடு நாடு திரும்ப வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்."

—கமிஷனர் ஆப் போலீஸ், தன் நீண்ட பிரசங்கத்தை முடித்துக்கொண்டு கைகளைக்கூப்பி இறைவனைப் பிரார்த்தனை செய்துவிட்டுத் தன் இடத்தில் அமர்ந்தார்.

அவர் பேசி முடிந்ததும் அந்த இடத்திலே எழுந்த வாழ்க ஒலி வானைப் பிளந்தது. கைதட்டல் சத்தம் அங்கிருந்தவர்களுடைய காதுகளை யெல்லாம் செவிடாக்கி விடும்போல் இருந்தது. அந்த ஆரவாரம் அடக்குவதற்கே அரை மணி நேரத்துக்கு மேலாயிற்று.

அடுத்தபடியாக வகாப் மெல்ல எழுந்தார். அவரால் சரியானபடி பேசவே முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. ஏனென்றால், சங்கர்லாலோடு நெருங்கிப் பழகிய அலுவலகர், வகாபைப் போல் வேறு ஒருவருமே இல்லை. அவர் ஏதோ அடக்கமாக இரண்டொரு வார்த்தைகள் தாம் சொன்னார்.

அந்தச் சமயத்திலே சங்கர்லாலுக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த மாது, சங்கர்லாலின் காதோடு, "தம்பி, ஐயாவுக்கும் நாம் வீட்டுத் தேனீர் இனிமேல் கிடைக்காதே என்றுதான் நிரம்பவும் வருத்தமாக இருக்கும்" என்று நடுவில் நகைத்துக் கொண்டேசொன்னான்!

இதைக் கேட்டதும் அந்த இக்கட்டான நிலைமையில் கூடச் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. சங்கர்லால் மாதுவைச் செல்லமாகக் கோபித்துக்கொண்டார்.

எல்லாரும், "சங்கர்லாலைப் பேசச் சொல்லுங்கள் சங்கர்லாலைப் பேசச் சொல்லுங்கள்" என்று வாயொலியைக் கிளப்பினார்கள்.

இறுதியில் சங்கர்லால் எழுந்து நின்றார். பேசினார்:

"நீங்கள் எல்லாரும் என்னிடம் வைத்திருக்கும் மதிப்புக்கும், அன்புக்கும் நான் மிகவும் நன்றி செலுத்துகிறேன். தலை வணங்குகிறேன். நீங்கள் வாழ்க!

"கமிஷனர் ஆப் போலிஸ் அவர்கள் என்னை என்னுடைய உண்மைத் திறமைக்கும், தகுதிக்கும் அதிகமாக மெச்சிப் பாராட்டிப் பேசிவிட்டார்கள். அது, அவர்கள் என்னிடம் வைத்திருக்கும் அதிகப்படியான அன்பைக் காட்டுகிறதே தவிர, நான் அவ்வளவு புகழுக்கும், பெருமைக்கும் தகுதி உடையவன் அல்ல. நானும் உங்களைப்போல ஒரு சாதாரண மனிதன்தான்.

"எனக்குச் சின்ன வயதிலே இருந்து ஒரு விசித்திரமான பழக்கம் உண்டு. எந்தச் சின்னச் செய்தியையும் நான் துருவித் துருவி ஆராய்வேன். அதுதான் என்னை இந்தத் துப்பறியும் இலாகாவில் கொண்டு வந்து சேர்த்தது. உங்கள் அன்பும், ஆதரவும் இருக்கும்வரை நான் என் கடமைகளைச் சரிவரச் செய்வேன்; நாட்டின் பெருமையை நிலைநாட்டும் வகையில் எடுத்த பணி எதுவானாலும் இனிது முடித்துக் காட்டுவேன் என்று உறுதி கூறுகிறேன். உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளுகிறேன். உங்கள் அனைவருக்கும் என் வணக்கம்."

—சங்கர்லால் இரத்தினச் சுருக்கமாகக் கணீரென்று பேசிக் கச்சிதமாகத் தன் பிரசங்கத்தை முடித்துக்கொண்டு நாற்காலியைப் பின்னுக்கு இழுத்துப் போட்டார். அதே சமயத்தில், "கப்பல் புறப்படுவதற்கு இன்னும் பத்து நிமிடங்கள்தாம் இருக்கின்றன" என்று தொடர்புள்ள அதிகாரி ஒருவர் எச்சரித்தார்.

மாதுவுக்குக் கடல் தண்ணீரில் மிதந்து போகப் போகிறோம் என்று ஒரே குதூகலம். அவன்தான் கப்பலுக்குள் முதலில் ஏறினான். அவனை முன்னால் போகவிட்டுப்

பின்னால் போனார் சங்கர்லால். சங்கர்லாலுக்குப் பின்னால் அவருடைய பாதுகாப்பாளர் சிங் போனார்.

கப்பலின்மேல் ஏறிக்கொண்டதும் கீழே இருந்தவர்கள், "சங்கர்லால் வாழ்க, சங்கர்லால் வாழ்க" என்று இனிய ஒலியைப் பெருக்கினார்கள்.

சங்கர்லால், அவர்களையெல்லாம் அன்போடு பார்த்து இன்பமாகச் சிரித்தார்.

கப்பல், மெதுவாக நகர்ந்தது. சங்கர்லாலையே பார்த்துக்கொண்டிருந்த அதிகாரிகள் கைகளை ஆட்டினார்கள். சங்கர்லாலும் பதிலுக்கு மரியாதைக்காகத் தம் கைகளை ஆட்டிக்கொண்டே இருந்தார்.

கப்பல், கரையை விட்டு விலகி விலகிப் போய்க்கொண்டிருந்தது. கரையில் இருந்தவர்களெல்லாம் சங்கர்லாலை நோக்கி அலை அலையாகக் கைகளை வீசிக்கொண்டே இருந்தார்கள். அவர்களுடைய உருவங்களெல்லாம் வர வரச் சிறியனவாகிக்கொண்டே வந்தன.

அவர்களையெல்லாம் பிரிந்து நிலப்பாகத்தையேவிட்டு நெடுந்தூரம் வந்துவிட்டது கப்பல். எங்கும் தண்ணீர்!

சங்கர்லாலுக்கு முதல் வகுப்பிலே தனி அறை ஒதுக்கிவிட்டிருந்தார்கள். சங்கர்லால், சாய்வுநாற்காலியில் சாய்ந்துகொண்டு ஏதோ வழக்குத் தொடர்புள்ள காகிதங்களைப் புரட்டிக்கொண்டிருந்தார்.

மாதுவுக்குத்தான் எந்த அலுவலும் இல்லையே! அவன் கப்பலுக்கு வெளியிலேயே கண்ணோட்டம் விட்டுக்கொண்டிருந்தான். அவனுக்கு வெளியிலே பார்த்துக்கொண்டிருந்தது எப்படித் தோன்றியதோ? மெல்ல சங்கர்லாலின் அருகில் வந்து, "தம்பி, நான் இப்போதுதான் முதல் தடவையாகக் கப்பலில் வருகிறேன். எனக்கு என்னமோ மாதிரியாக இருக்கிறது. மயக்கம் வரும்போலத் தோன்றுகிறது. உனக்கு அப்படி இல்லையா?" என்று கேட்டான்.

அதற்குச் சங்கர்லால், "எல்லாருக்குமே முதலில் அப்படித்தான் தோன்றும். பிறகு, போகப் போகச் சரியாகிவிடும். நீ ஏதாவது பணி செய்தால் பரவாயில்லை.

இதோ, இந்தக் கப்பல் சாப்பாடு எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்காது. நான் அதிகாரிகளிடம் சொல்லி உனக்குச் சமைப்பதற்கு வேண்டிய சாமான்களைக் யெல்லாம் கொடுக்கச் சொல்லுகிறேன். நீ சமையல் செய்" என்றார்.

"தம்பி, நான் கூட உன்னிடம் இதைப் பற்றித்தான் கேட்கவேண்டுமென்று இருந்தேன். உடனே போய் ஏற்பாடு செய் தம்பி" என்று சங்கர்லாலை மிகவும் அவசரப் படுத்தினான் மாது.

கப்பல், போவதே தெரியாமல் அருமையாக மிதந்து போய்க்கொண்டிருந்தது. சங்கர்லால், மாதுவின் கைச் சமையலைத்தான் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்.

அவர்கள் கடல் பிரயாணம் புறப்பட்டுச் சில நாட்களுக்குப் பிறகு கப்பல் ஒரு துறைமுகத்தில் நின்றது.

"இதுதானே ஏடன் துறைமுகம்?" என்று சங்கர்லாலைக் கேட்டார் பாடிகாட் சிங்.

சங்கர்லால், "ஆமாம்" என்று தலையை அசைத்தார்.

மாது, "தம்பி, தம்பி, இப்போதுதான் பூமி வந்திருக்கிறது. கீழே இறங்கிப் போய் எல்லாவற்றையும் வேடிக் பார்த்துவிட்டு வரலாமே" என்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

அதற்குச் சங்கர்லால், "இங்கே கப்பல் ஒரு நாள் தான் நிற்கும். அதற்குள்ளே, ஊருக்குள்ளே போய் எதைப் பார்ப்பது? நீ வேண்டுமானால் துறைமுகத்துக்குள்ளே இறங்கி எதையாவது வேடிக்கை பார்த்துவிட்டு வா. எனக்குக் கொஞ்சம் அலுவல் இருக்கிறது" என்றார்.

"உனக்கு என்றைக்குத்தான் பணி இல்லாமல் இருக்கிறது?" என்று சொல்லிவிட்டுப் போனான் மாது.

ஒரு மாதத்துக்குப் பிறகு—

சங்கர்லாலை ஏற்றி வந்த கப்பல், நீலத் திரைக்கடலில் அயர்லாந்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. இது

வரை அமைதியாக மிதந்து வந்த கப்பல் இரண்டொரு மணி நேரமாக ஆட்டம் கொடுப்பதைப் போலிருந்தது.

சங்கர்லால் அறையிலே இருந்த ஒலி பெருக்கி அலறியது:

"யாரும் பயப்படாதீர்கள். இரண்டு மைல் தூரத்திலே ஒரு புயல் கிளம்பி இருக்கிறது. அதனால்தான் இங்கே கப்பல் கொஞ்சம் ஆட்டம் கொடுக்கிறது. எல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்தில் சரியாகிவிடும்."

—இதுவரை மிரண்ட கண்களோடு அந்த ஒலி பெருக்கியையே பார்த்துக்கொண்டிருந்த மாது, சங்கர் லாலின் பக்கம் திரும்பி, "இரண்டு கல்லுக்கு அப்பால் புயல் எழும்பும்போதே கப்பல் இவ்வளவு ஆடுகிறதே! இன்னும் புயலுக்குப் பக்கத்திலேயே கப்பல் போய் விட்டால்?" என்று சொல்லி தன் உடலைக் கலவரத்தோடு சிலிர்த்துக்கொண்டான்.

"சங்கர்லால், அதைப்பற்றியெல்லாம் கொஞ்சம்கூடக் கவலைப்படாமல், மாது, மேசையின் மேல் வைத்த தேனீரை சுவைத்துக் குடித்துக்கொண்டிருந்தார்.

கப்பல் ஆடிக்கொண்டேதான் இருந்தது. அதனுடைய ஆட்டம் அதிகமானதே தவிர, குறையவில்லை.

சில மணி நேரத்துக்குப் பின்—

ஒலிபெருக்கி மீண்டும் தொடர்ந்து அலறியது:

"சகோதரர்களே, உங்கள் கடவுள்களையெல்லாம் வணங்கிக்கொள்ளுங்கள். இனி, மனித யத்தனத்தால் ஆவது ஒன்றும் இல்லை. புயலின் வேகம் பயங்கரமாக மாறிவிட்டது. இனி கடவுள்தான் காப்பாற்றவேண்டும்"

—இந்தப் பயங்கர அறிவிப்பை மாது கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. அவன் மண்டியிட்டுத் தன் குல தெய்வமான மாடசாமியைக் கும்பிட்டான்.

அந்தக் கப்பலின் ஆட்டம் மிக மிக அதிகமாயிற்று.

கப்பலில் உள்ள பெண்களும், குழந்தைகளும், மற்றவர் களும் எழுப்பும் பரிதாபமான அழுகைக் குரல்தான் அந்தக் கப்பலில் நிறைந்திருந்தது. திடீரென்று—

ஒரு பெரிய அலை. அதைத் தொடர்ந்து விர்ரென்று அடித்த பயங்கரமான பேய்ப் புயல். சடாரென்று கப்பலில் மோதியது ஒரு ராட்சச அலை. கப்பலுக்குள் நிறையக் கடல் நீர் நுழைந்துவிட்டது. கப்பல்—

முழுகியது. எவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

* * *

கப்பல் முழுகியதற்கு ஒரு நாளைக்குப் பிறகு—

மறுநாள்—

கப்பல் முழுகிய இடத்திலிருந்து இருபது கல்களுக்கு அப்பால், கடலில் மெல்ல வீசும் அலைகளுக்கு இடையில் ஒரு தலை தெரிந்தது.

அது செத்த பிணமா?

அது செத்த பிணம்—

இதோ, அது, தலையைத் தூக்குகிறதே!

இப்பொழுது, அதன் முகம், நன்றாகத் தெரிகிறதே!

ஆமாம், அது, சங்கர்லால்தான்!

இப்பொழுது சங்கர்லால், கப்பல் முழுகிய இடத்திற்குத் தென் திசையில் இருபதாவது கல்லில் நீந்திக் கொண்டிருக்கிறார். இரவு பகலாக ஒரு நாள் முழுவதும் நீந்திக்கொண்டிருக்கிறார்! நேற்று இதே நேரத்தில்தான் இருபதாவது கல்லில் கப்பல், புயலால் மூழ்கியது.

எதுவும் சாப்பிடாமல் பச்சைப் பட்டினியாய் ஒரு நாள் முழுவதும் நீந்திக்கொண்டிருக்கிறார் சங்கர்லால்!

இன்னும் எத்தனை கல்கள் நீந்த வேண்டுமோ? இன்னும் எத்தனை நாட்களுக்குப் பச்சைப் பட்டினியாய், இந்தப் பாழுங் கடலில் கிடக்கவேண்டுமோ?

சங்கர்லால் கை ஓயவில்லை. ஆனால், வேகம் இல்லாமல் அவர் கைகள் மாறி மாறிச் சின்னஞ் சிறிய அலைகளின் மேல் விழுந்து கொண்டிருந்தன. அவர் தன் கால்களை அசைக்காமல், கைகளை மட்டுமே, மாற்றி மாற்றிப் போட்டு முன்னேறிக்கொண்டிருந்தார்.

ஓரளவு காற்றையும் தண்ணீரையும் குடித்து விட்டதால் அவர் உடம்பு ஊதிப் போயிருந்தது. அவர் முகம், ரத்தப் பசையற்று வெளுத்து, உப்பி இருந்தது!

அவர் முகத்தை மேலே தூக்காமல், கால்களை ஆட்டாமல், உடம்பை அலட்டிக் கொள்ளாமல், மூச்சு விடும்போது மட்டும் முகத்தைக் கொஞ்சம் மேலே தூக்கிக் கொண்டு, அதிகமாகச் சிரமப் படுத்திக் கொள்ளாமல் நீந்திக்கொண்டிருந்தார்.

எலும்பு, தசை, தோல் இரத்தத்தால் ஆகிய ஒருமாமிச உடல் உணவின்றி எத்தனை நாட்களுக்கு நீந்திக்கொண்டிருக்கமுடியும்?

வெகு நேரத்திற்குப் பிறகு—

ஒரே திசையில் விடாப்பிடியாய் நீந்தி வந்த சங்கர்லால், மூச்சு வாங்குவதற்குத் தலையை மெல்லத் தூக்கினார். அப்பொழுது—

எதிரே—

தீவு ஒன்று தெரிந்தது!

சங்கர்லால், கண்களை அகலத் திறந்து ஆவலுடன் அந்தத் தீவைப் பார்த்தார். அது தீவுதான்!

சங்கர்லாலின் உடம்பில் எங்கிருந்தோ புது ஆற்றல் ஒன்று பரவிப் பாய்ந்தது. அவ்வளவுதான், சங்கர்லால், தலையை ஓர் உலுப்பு உலுப்பிவிட்டு வேகமாக நீந்தி, தண்ணீரைக் கத்திக் கிழிப்பதைப்போல் கிழித்துக் கொண்டு, வெகு வேகமாக முன்னேறினார்.

சங்கர்லாலின் கால், கைகள் ஓயவே இல்லை. அவர் கால்களும், கைகளும் தண்ணீரைத் தள்ளின.

உடம்பில் இருந்த இரத்தமெல்லாம் கால்களுக்கும், கைகளுக்கும் வந்து விட்டது போல், சங்கர்லாலின் கால்களும், கைகளும் சிவந்துவிட்டன!

அவர் முகத்தில் இருந்த வெளுப்பு நிறம்கூட மாறி, மெல்ல மெல்லச் சிவப்பேறிக்கொண்டிருந்தது.

வெகு நேரத்திற்குப் பிறகு, சங்கர்லால், ஓய்ந்து போன தன் கால்களைத் தரையில் ஊன்றித் தள்ளாடித்

தள்ளாடித் தண்ணீரை விட்டு மணல் கரைக்கு வந்து கொண்டிருந்தார்.

அவர் கால்கள், தரையில்பட்ட பிறகும்கூட, அவருக்கு நடப்பதுபோல் தெரியவில்லை. அப்பொழுதும் மிதந்து கொண்டிருப்பது போலவேதான் அவருக்கு பட்டது! அவர், தன் கால்களைச் சரியாகத் தரையில் ஊன்ற முடியாமல், தள்ளாடித் தள்ளாடித் தண்ணீரைத்தாண்டி மணலில் போய் மரக்கட்டை மாதிரி விழுந்தார்.

அடுத்த நிமிடம்...

அவருக்கு நினைவே இல்லை.

எப்பொழுதோ—

“தம்பி, தம்பி, தம்பி...” என்ற சத்தம் கேட்டது. கண்களைத் திறந்து பார்த்தார் சங்கர்லால்.

மாது!

“மாது...மாது” என்று கத்திக்கொண்டே குபீரென்று எழுந்து, மாதுவைக் கட்டிக்கொண்டார் சங்கர்லால்.

“தம்பி, தம்பி” என்று கத்திக்கொண்டே மாது, சங்கர்லாலை உடம்போடு உடம்பாய்க் கட்டிக்கொண்டு கேவிக் கேவிச் சின்னப்பிள்ளை மாதிரி அழுதான்.

சங்கர்லால், தன் முகம் மாதுவுக்குத் தெரியாமல் அவன் முதுகோடு சேர்த்து வைத்துக்கொண்டு அழுதார்! சங்கர்லால் அழுதார்! துப்பறியும் நிபுணர் அழுதார்! உலகத்திலேயே தைரியசாலியான சங்கர்லால் அழுதார்! உச்சி மீது வானம் இடிந்து விழுந்தாலும் அஞ்சாத சங்கர்லால் அழுதார்! சங்கர்லாலின் கண்களில் கண்ணீர்!

சங்கர்லால், தனக்கு விவரம் தெரிந்த பிறகு, தன் வாழ்க்கையில், தன் சரித்திரத்தில், முதல் முதலாக இப்பொழுதுதான் அழுகிறார். அவருடைய கண் இமைகள் கண்ணீரால் இப்பொழுதுதான் முதல் முதலாக நனைந்து ஊறுகின்றன.

மாது, குலுங்கிக் குலுங்கி அழுதான். அவன் அழுகை அதிகமாயிற்றே ஒழிய, குறையவில்லை!

வெகு நேரத்திற்குப் பிறகு—

சங்கர்லால், மாதுவுக்குத் தெரியாமல், தன் கண்களில் வழியும் கண்ணீரைத் துடைத்துவிட்டு, மெல்லத் தன் தலையை அவன் தோள்பட்டையிலிருந்து எடுத்து, " என்ன மாது இது? சிறுபிள்ளை மாதிரி? நாம்தான் பிழைத்து விட்டோமே! இனிமேல் ஏன் அழுகிறாய்?" என்றார்.

மாதுவின் குலுங்கல் அழுகை, இதைக் கேட்டதும் குறைந்தது. கொஞ்ச நேரத்திற்குள் அவன் அழுகை முழுவதும் அடங்கிவிட்டது. ஆனாலும் அவன் முகத்தில் ஆழ்ந்துவிட்ட கவலை இருள், இன்னும் நீங்கவில்லை.

சங்கர்லால், மாதுவைத் தட்டிக்கொடுத்துவிட்டு, தன், மேல் சட்டையைக் கழற்றி பிழியப் போனார்.

அப்பொழுது—

அவர் சட்டையின் பின்பாகம் ஒரே சிவப்பு வண்ணமாய் இருந்தது! சங்கர்லால் அந்தச் சிவப்பைப் பார்த்தார்.

இரத்தம்!

இவ்வளவு இரத்தம் பெருகிவெளிவரக்கூடிய அளவுக்கு தன் முதுகில் காயம் இருப்பது நமக்குத் தெரியாமல் இருக்கிறதே என்று ஐயத்துடன் தன் முதுகைக் கையினால் தடவிப்பார்த்தார்.

மாது சிரித்தான்!

இரத்தத்தைக் கண்டு சிரிப்பா?

"ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டார் சங்கர்லால்.

"உன் முதுகில் ஏது தம்பி காயம்?" என்றான் மாது.

"பின்னே இந்தச் சட்டையின் முதுகுப் பக்கத்தில் இரத்தம் எப்படி வந்தது?"

மாது சிரித்துக்கொண்டே, தன் வேட்டியையும் சட்டையையும் காண்பித்தான். அவன் வேட்டியையும் சட்டையும் ஒரே இரத்தமாய் நனைந்து போயிருந்தது!

சரி, மாதுவின் உடம்பில்தான் எங்கேயோ காயம் இருக்கிறது என்று தெரிந்துகொண்டார் சங்கர்லால்.

மாது, மௌனமாக, இதுவரை, தான் பின்னால் ஒளித்து வைத்திருந்த கையை வெளியே எடுத்துச் சங்கர் லாலுக்கு முன் நீட்டினான்.

அந்தக் கையைப் பார்த்த சங்கர்லால், சட்டென்று தன் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டார்!

பார்க்கக் கூடிய காட்சியா அது?

மாது, கையை இன்னும் நீட்டியபடியே வைத்துக் கொண்டிருந்தான். அவன் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்துகொண்டே இருந்தது. அந்தக் கையில் —

ஒரு விரல்தான் இருந்தது!

மற்ற நான்கு விரல்கள் எங்கே?

தெரிந்ததுதானே? சுறுமீன் ஒன்று அந்த நான்கு விரல்களையும் தின்றுவிட்டது!

சங்கர்லால், சட்டென்று தன் பக்கவாட்டுப் பையில் இருந்த கைக்குட்டையை எடுத்து, மாதுவின் நான்கு விரல்களின் அடிப்பாகத்தில் வழியும் இரத்தத்தைத் துடைத்து விட்டுப் பிறகு தன் சட்டையின் முன் பாகத்தைக் கிழித்து அவன் கையில் பெரிய கட்டு ஒன்றை இறுக்கிப் போட்டார்.

சங்கர்லால், சட்டையின் மறுபாதி இரத்தக் கறை யுடன் மணலில் கிடந்தது!

சங்கர்லால், தூரத்தில் பரந்து விரிந்து கிடக்கும் தண்ணீர்ப் பரப்பைப் பார்த்தார்!

வெகு நேரம் கழித்து, மாது, சங்கர்லால் பக்கம் திரும்பி, "தம்பி, எங்கே போய்விட்டார்?" என்றான்.

"உனக்கெப்படித் தெரியும்?" என்று கேட்டார் சங்கர்லால் கவலையோடு.

"இதற்கு சோதிடம் பார்க்கவேண்டுமா என்ன? அவருக்குத்தான் நீந்தத் தெரியாதே" என்றான் மாது.

"ஆமாம், நான் எதிர்பார்த்ததுதான். அதன்படியே தான் நடந்திருக்கிறது. கப்பல் மூழ்கும்போது நான் தப்பிப் பிழைப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்க

வில்லை. நீயும் அதே மாதிரிப் பிழைக்கமாட்டாய் என்று தான் நான் நினைத்தேன். ஆனாலும், நம்பிக்கையோடு நான் நீந்தினேன். கிட்டத்தட்ட இருபது கல் நீந்திய பிறகு தான் எனக்குக்கூட ஓரளவு நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டது. ஆனாலும், களைக்காமல், சளைக்காமல் நீந்தினேன். எத்தனையோ கல் நீந்திய பிறகுதான் எனக்கு இந்தத் தீவில் வளர்ந்து ஓங்கி நிற்கும் தென்னைமரங்கள் தெரிந்தன. அதற்குப் பிறகுதான் நான் பிழைத்தேன் என்று நினைத்தேன். அதற்குப் பிறகுதான் உன்னைப்பற்றிய நினைவு எனக்கு வந்தது. நான் வந்த திசையிலேயே நீயும் நீந்தி வந்ததால் பிழைத்தாய். நான் வந்த திசையில் நீ வராமல் வேறு திசையில் நீ நீந்திப்போயிருந்தால், நீ பிழைத்திருக்க முடியாது. ஆனால், உன் நல்ல காலம் நான் வந்த திசையிலேயே நீயும் நீந்தி வந்திருக்கிறாய். உடம்பில் தளர்ச்சி ஏற்படாமல், எத்தனை நாட்களுக்கு வேண்டுமானாலும் தண்ணீரிலேயே கிடக்கும் நீச்சல் பயிற்சியை எனக்குக் கற்றுக் கொடுத்த குரு நீதானே! எனவே, எப்படியும் நீ பிழைத்து விடுவாய் என்பதில் இந்தத் தீவைக் கண்ட பிறகு எனக்கு நம்பிக்கை ஏற்பட்டது. அதேமாதிரி நீ பிழைத்து வந்து விட்டாய். ஒரு வேளை நீ இறந்திருக்கும்பட்சத்தில் எனக்கு இந்த உலகத்தில் இருக்கவே பிடித்திருக்காது. தன்னந் தனியாக இந்தத் தீவில் சுற்றிவிட்டுத் தற்கொலை செய்து கொண்டிருப்பேன்! உன்னைக் கண்ட பிறகு நான் வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறேன் மாது" என்றார் சங்கர்லால் குரலிலே தழுதழுப்புடன்.

"அது சரி தம்பி, நான் இனிமேல் சமையல் செய்ய முடியாதே" என்றான் மாது, சிரித்துக்கொண்டே!

"அதனால் என்ன? நீயும் நானும் இனிமேல் நல்ல சாப்பாடு சாப்பிடலாமல்லவா?" என்றார் சங்கர்லால்.

"அது சரி தம்பி, இப்பொழுது இருக்கும் அகோரப் பசியைத் தீர்த்துக்கொண்ட பிறகுதானே வாழ்வதைப் பற்றி யோசிக்கவேண்டும்?" என்றான் மாது.

"சரி கிளம்பு. கண்ணில் படுவதைத் தின்று வைப்போம்" என்று சொல்லிவிட்டுச் சங்கர்லால் எழுந்தார்.

மாதுவும் தன் சட்டைப் பனியனைப் சுழற்றிப் பிழிந்து கொண்டே எழுந்து நின்றான்.

இருவருமாக வெள்ளை மணலைக் கடந்து, சற்றுத் தூரத்தில் தெரியும் அடர்ந்த தென்னை மரங்களை நோக்கி மெள்ளத் தள்ளாடி நடந்தார்கள்.

இருவருக்கும் நல்ல பசி. அதனால், கால்களில் வலிமையே இல்லை. அவர்களால் மணலில் கால்களை ஊன்றி நடக்க முடியவில்லை. மெல்ல மெல்லக் கால்களைத் தூக்கி வைத்து நடக்கத் தொடங்கினார்கள்.

“ தம்பி, இந்தத் தீவில் நம்மைத் தவிர வேறு எவருமே இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்” என்றான் மாது, சற்றுக் கவலை நிறைந்த குரலில்.

“ இருக்கிறார்கள் ” என்றார் சங்கர்லால்.

“ உனக்கெப்படித் தெரியும் ?” என்று ஆவலோடு கேட்டான் மாது.

சங்கர்லால், அதற்குப் பதில் எதுவும் சொல்லாமல் சற்றுத் தூரத்தில் மணலில் குறிப்பிட்ட இடத்தை அவனுக்குச் சுட்டிக் காண்பித்தார்.

மாது, சங்கர்லால், சுட்டிக் காண்பித்த அந்த இடத்தை உற்றுக் கவனித்தான். அங்கே—

ஒரு மனிதன் நடந்து சென்ற அடிச் சுவடுகளின் அடையாளங்கள் மங்கலாகத் தெரிந்தன. வீசிய காற்று எழுப்பிய மணல்கள், பரவிக் கிடந்ததாலும், எப்பொழுதோ பெய்த மழைத் துளிகளாலும் அந்த அடிச்சுவடுகளின் அடையாளங்கள் அங்கே சரியாகத் தெரியவில்லை.

அந்த மணலில் பதிந்துபோய் மங்கலாகத் தெரியும் அடிச் சுவடுகளின் அடையாளத்தை மாது வியப்போடும் ஐயத்தோடும் பார்த்தான்.

அவன், சங்கர்லாலைப் பார்த்து, “ என் தம்பி, அப்படி யானால் இந்தத் தீவில் மனிதர்கள் இருக்கிறார்கள்

என்பதில் சந்தேகமே இல்லை. இனி, நாம் எப்படியும் பிழைத்துக் கொள்ளலாம்'' என்றான் ஐயத்துடன்.

"சொல்ல முடியாது மாது'' என்றார் சங்கர்லால்.

"ஏன் தம்பி?'' என்று கேட்டான் மாது.

சங்கர்லால், மெல்லச் சிரித்துக்கொண்டே, "மங்கலாகத் தெரியும் இந்த அடையாளங்கள் எப்பொழுதோ எவரோ வந்து விட்டுப்போனதன் அடையாளங்கள். யாரோ ஒரு தனி மனிதன் மட்டுமே இங்கு வந்துவிட்டுப் போயிருக்கிறான். நீண்டு போய்க்கொண்டிருக்கும் இந்த அடிச் சுவடுகளின் அடையாளங்கள் நிச்சயமாக ஒரே மனிதனுடையவை. அவன் போன அடையாளம் மட்டும்தான் இங்கே தெரிகிறது. அவன் திரும்பி வந்த அடையாளத்தை இங்கே காணோம். எனவே அவன் இந்தத் தீவிலேயே இருக்கவேண்டும். அல்லது எதிரே தெரியும் கடற்கரை வழியாக ஏதாவது கப்பலில் ஏறிச் சென்றிருக்கவேண்டும்'' என்று ஊகித்துச் சொன்னார்.

"எதை வைத்துத் தம்பி, இந்தத் தீவில் மனிதர்கள் இருக்கிறார்கள் என்பதைச் சொல்ல முடியாது என்கிறாய்?'' என்று கேட்டான் மாது.

"இந்தத் தீவில் மனிதர்கள் இருந்தால் அவர்கள் கண்டிப்பாய்க் கடற்கரையைச் சுற்றித் திரிவார்கள். கடலில் கப்பல்கள் தெரிகின்றனவா என்று ஆசையோடு வந்து பார்ப்பார்கள். கடற்கரையில் ஏதாவது வந்து ஒதுங்கிக் கிடக்கிறதா என்று ஐயத்தோடு வந்து பார்ப்பார்கள். அப்பொழுது இந்த மணல் கடற்கரையில் மனிதச் சுவடுகளின் அடையாளங்கள் நிறையத் தெரியும். ஆனால், இதோ ஒரு மனிதன் எப்போதோ நடந்து சென்ற அடையாளத்தைத்தவிர வேறு எதுவுமே தெரியவில்லையே'' என்றார் சங்கர்லால், உறுதி நிறைந்த குரலில்.

மாதுவினால், சங்கர்லால் சொன்னதை மறுக்க முடியவில்லை. அவர் சொன்னதை அப்படியே ஒப்புக்கொண்டான். ஆனால், பயந்தான். சங்கர்லால், தன் கூடவே இருக்கிறார் என்ற தைரியத்தால் அந்தப் பயம் அவனுக்கு அவ்வளவாகத் தெரியவில்லை.

"சரி, இப்பொழுது உள்ளே இறங்கிப் போயிருக்கும் அந்த மனிதன், இந்தத் தீவில் இருக்கிறானா, இல்லையா?" என்று கேட்டான் மாது.

"அதெப்படிச் சொல்ல முடியும்? இந்த அடிச் சுவடுகளைப் பின்பற்றிப் பார்த்துக்கொண்டே போனால்தான் தெரியும்" என்றார் சங்கர்லால்.

மாதுவுக்கு அந்த வார்த்தைகள் அவ்வளவாகத் தைரியத்தைத் தரவில்லை. ஆனாலும், அவன் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு, "என் தம்பி, நாம் இந்தத் தீவிலிருந்து எப்படியும் தப்பிப் போய்விட முடியுமல்லவா?" என்று கேட்டான், தனக்கு இருந்த பயத்தைத் தீர்த்துக்கொள்ள!

நடுத்தீவில் தத்தளிக்கும் தனக்கு ஏதாவது ஒரு வகையில் தைரியம் ஏற்படட்டுமே என்று அவனுக்கு நினைப்பு!

"அதெப்படிச் சொல்ல முடியும்? இந்தத் தீவைச் சுற்றிலும் நெடுங்கடல் நீண்டு கிடக்கிறது. எந்தத் தேசத்தோடும் தொடர்பு இல்லாத பயங்கரமான நிலைமை இது. இங்கே, இப்படி ஒரு தீவு இருக்கிறது என்பது எவருக்குமே தெரியாதே. எவரோடும் தொடர்புகொள்ள வசதியும் இல்லையே. இந்த நிலையில் நாம் தப்பிப் பிழைக்க முடியும் என்று நாம் எப்படிச் சொல்லுவது?" என்றார் சங்கர்லால்.

இந்த வார்த்தைகள் மாதுவை மிகவும் கலக்கின.

"அப்படியானால் நாம் இங்கிருந்து தப்பிச்செல்ல வழியே கிடையாதா?" என்று கேட்டான் மாது.

"எந்தக் கப்பலாவது வழி தெரியாமல் இந்தப் பக்கம் வந்தால்தான் உண்டு. இல்லையென்றால், எப்படித் தப்புவது என்பதை இனிமேல்தான் யோசிக்க வேண்டும்" என்றார் சங்கர்லால்.

இந்தச் சமயத்தில், இவ்வளவு மோசமான சூழ்நிலையில், இவ்வளவு ஆபத்தான சமயத்தில் சங்கர்லால் பக்கத்தில் இல்லாமல் இருந்திருந்தால் மாது பயத்திலேயே செத்துப் போயிருப்பான்! சங்கர்லால் பக்கத்தில் இருந்ததால், எப்படியும் தப்பிப் பிழைத்து விடலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

சங்கர்லால் முன்னே நடந்தார். மாது வேதனை தரும் தன் இடது கையை அழுத்திப் பிடித்துக்கொண்டே சங்கர் லாலுக்குப் பின்னே நடந்தான். சங்கர்லால், பதிந்துபோய் மங்கலாகத் தெரியும் அந்தக் கால் சுவடுகளைப் பார்த்துக் கொண்டே முன்னால் நடந்தார். மாது, அதைப் பற்றிக் கொஞ்சங் கூடக் கவலைப்படாமல், எரியும் பசியைத் தணிப் பதற்கு ஏதாவது அகப்படுமா என்று சுற்றுமுற்றும் பார்த் துக்கொண்டே போனான். அவன் பசி அவனுக்கு!

அந்த மனிதனின் கால் சுவடுகளின் அடையாளங்கள் போய்க்கொண்டே இருந்தன. சங்கர்லால் சளைக்கவில்லை. அவரும் விடாமல் அந்த அடிச்சுவடுகளைக் கூர்ந்து கவ னித்துக்கொண்டே போனார். மாது எப்படியோ தள்ளாடித் தள்ளாடிச் சங்கர்லாலைத் தொடர்ந்து நடந்தான்.

அந்த அடிச்சுவடுகளின் அடையாளங்கள், அடர்ந்து வளர்ந்து, இருண்டு கிடக்கும் தென்னந் தோப்பிற்குள் நுழைந்தன. இருண்டுபோயிருந்தன அந்தத் தோப்பில், சங்கர்லால் என்ன செய்யலாமென்று யோசித்தார். யோசித் துக்கொண்டே மெல்லத் திரும்பிப் பார்த்தார். அங்கே—

மாதுவைக் காணோம். சங்கர்லால், மாதுவைத் தேடி மறுபக்கம் திரும்பிப் பார்த்தார். அங்கே—

மாது, ஒரு தென்னை மரத்தடியில் சோர்ந்து போய்க் களைப்புடன் மரத்தோடு மரமாய்ச் சாய்ந்து கிடந்தான்! அவனுக்கு அருகில் போய் உட்கார்ந்தார் சங்கர்லால்.

"என்ன மாது, அசந்துபோய் உட்கார்ந்து விட்டாயே" என்றார் கேலிச் சிரிப்புடன் சங்கர்லால்.

"எனக்கு அகோரப் பசி. இனிமேல் வாயில் எதுவும் போடாமல் என்னால் எழுந்திருக்கக் கூட முடியாது" என்றான் மாது, கண்டிப்பாய்.

"இங்கே எந்த எழவை வாயில் போடுவது? இங்கே கிடைக்கும் மணலை வேண்டுமானால் வாயில் போட்டுக் கொள். இல்லாவிட்டால் என்னைத் தூக்கி வாயில் போட் டுக்கொள்" என்றார் சங்கர்லால், கேலிச் சிரிப்புடன்!

"போ தம்பி, உனக்கு இந்தப் பயங்கரமான நிலைமையில் கூடவா கேலி? நீ என்ன செய்வாயோ எனக்குத் தெரியாது. இப்பொழுது ஏதாவது எனக்குச் சாப்பிடக் கொடு. இல்லாவிட்டால் நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது" என்றான் மாது.

"என்ன செய்வாயாம்?" என்று கேட்டார் சங்கர்லால்.

"இப்படியே குப்புறப் படுத்துத் தூங்கிவிடுவேன்" என்றான் மாது, சின்னப்பிள்ளை மாதிரி!

சங்கர்லால் சிரித்துக்கொண்டே, "அப்படியெல்லாம் தூங்கிவிடாதே. தூங்கிவிட்டால் அப்புறம் எழுப்ப எவராலும் முடியாது. கொஞ்சம் தள்ளி இரு. நான் உனக்கு ஏதாவது சாப்பிடத் தருகிறேன்" என்றார்.

சங்கர்லால் சொன்னது மாதுவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனாலும், சங்கர்லால் சொல்லுகிறாரே என்று கொஞ்சம் தள்ளி உட்கார்ந்துகொண்டான்.

சங்கர்லால், சர்ரென்று ஏறித் தென்னை மரத்தின் உச்சிக்குப் போய் அங்கேயிருந்த இளநீர்த் தேங்காய்களையெல்லாம் பறித்துப் போட்டார்.

அந்தத் தேங்காய்களைச் சங்கர்லாலும், மாதுவுமாகத் தின்று தீர்த்தார்கள். அவர்களைச் சுற்றி இளநீர் மட்டைகளும், தேங்காய் ஓடுகளும் கிடந்தன.

பசி தீர்ந்ததும் மாது, "அப்பாடா" என்று பெருமூச்சு ஒன்று விட்டுக்கொண்டே வலிமையோடு எழுந்து நின்றான்.

திடீரென்று—

மழைத் துளிகள் விழுந்தன. வானம் இருளாமல் வெளிச்சம் குறையாமல், குளிர் காற்று அடிக்காமல், திடீரென்று மழை—

அதிசய மழை!

சங்கர்லால் எழுந்து நின்று, "சரி வா, மழையிலாவது நனையாமல் இருப்போம்" என்று சொல்லிவிட்டு இருண்ட தோப்பை நோக்கி நடந்தார். பின்னாலேயே மாதுவும் அவரைத் தொடர்ந்தான்.

அவர்கள் தோப்புக்குள் நுழையும்போது—

தோப்பிற்குள்ளே டங் டங் கென்று பெரும் ஓசை கேட்டது. அந்த ஓசையைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டு அங்கேயே நின்ருர்கள்.

மாதுவும், சங்கர்லாலும் அப்படியே அசையாமல் நின்றுவிட்டார்கள். மாது மிகவும் நன்ருக உற்றுக் கவனித்தான். டங் டங் என்ற அந்த ஓசை எங்கிருந்து வருகிறது, அது என்ன ஓசையாக இருக்கும் என்று அவர் களால் எவ்வளவு முயன்றும் கொஞ்சங்கூடத் தெரிந்து கொள்ளவே முடியவில்லை. கொஞ்ச நேரம் ஆயிற்று.

சங்கர்லால், பக்கத்திலிருந்த ஓர் உயர்ந்த தென்னை மரத்துக்குப் பக்கத்திலே போனுர். மாது ஒன்றும் புரியாமல், சங்கர்லாலைப் பின் தொடர்ந்தான். மாதுவைச் சத்தம் செய்யாமல் இருக்கும்படி சைகை செய்துவிட்டு, சங்கர்லால் விடுவிடு வென்று தென்னை மரத்தின்மேல் ஏறினர். மாது, தென்னை மரத்தின் மேலே ஏறிய சங்கர் லாலையே பார்த்தான்.

மாது, சங்கர்லாலைப் பார்த்ததும், அவர் மாதுவை அதே தென்னை மரத்தின்மேலே ஏறி வரும்படி சைகை செய் தார். மாது, தன் வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு அதே தென்னை மரத்தின்மேலே ஏறினன். இருவரும் தென்னை மரத்தின் உச்சியில் உட்கார்ந்துகொண்டு சத்தம் வந்த திசையைப் பார்த்தார்கள். அங்கே—

யாரோ ஒருவன் ஓரிடத்திலே—

மூடிக்கொண்டிருந்த மணலை யெல்லாம் விலக்கி விட்டு ஏதோ ஓர் இடத்தை ஓங்கி ஓங்கிப் பெரிய சம்மட்டியால் அடித்துக்கொண்டிருந்தான். அவன் எதை அப்படி ஓங்கி அடிக்கிருன், எதற்காக அடிக்கிருன் என்பதையே அவர் களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அந்த இடத்தை அடிக்கிறவன் யாராக இருக்கும் என்று அந்த மனிதனைக் கூர்ந்து கவனித்தார்கள் அவர்கள். அந்த மனிதன்—

முகம் அடையாளம் தெரியாதபடி எதையோ போட்டு மூடி விட்டிருந்தான். அவன் முகத்தைப் பார்ப்பதற்கு

ஒரு பூனை மாதிரி இருந்தது. அவன் ஏன் இப்படி முகமூடி போட்டுக்கொண்டு தனியாக இந்தத் தனித் தீவிலே வந்து என்னவோ செய்கிறான்?

—இதை அவர்களால் ஊகிக்க முடியவில்லை. மொத்தத்தில் அவன் ஏதோ ஒரு திருட்டுத்தனமான காரியம் செய்கிறான் என்று மட்டும் சங்கர்லாலுக்குப் பட்டது.

மாது, பேசவில்லை.

டங் டங் டங்—

இந்த ஓசை, கடைசியில் ஒரு பெரிய டங்கென்ற சத்தத்தோடு நின்றே போய்விட்டது. அந்தப் பூனை மனிதன் அதற்கப்புறம் என்ன செய்கிறான் என்று அவர்கள் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அவன்—

கையிலிருந்த பெரிய இரும்புச் சம்மட்டியைத் தரையில் வைத்தான். பிறகு, நீண்ட சதுரமாக, இரும்புக் கதவு மாதிரி இருந்த ஏதோ ஒன்றைத் தூக்கினான். அந்த இடத்தில் உள்ளே இறங்கினான். உள்ளே இறங்கி, மடமடவென்று இறங்கி, மறைந்தோடிப் போனான். அது என்ன சுரங்கமாக இருக்குமோ?

மாது துடித்தான்.

"தம்பி, எனக்கு ஒரு நல்ல யோசனை தோன்றுகிறது. இப்பொழுது நாம் திடுதிடுவென்று இறங்கி அந்தச் சுரங்க வாசலை மூடி விட்டால் உள்ளே இருக்கின்ற மனிதன் அகப்பட்டுக்கொள்ளுவான். எப்படி என் யோசனை?" என்று பெருமையோடு கேட்டான்.

உடனே சங்கர்லால், "பைத்தியக்கார யோசனைதான். அவனைப் பிடிப்பதற்காகத்தான் நான் நாம் இந்தத் தீவுக்கு வந்த மாதிரி அல்லவா பேசுகிறாய்? அவனைக் கொண்டாவது நாம் வெளியேற முடியுமா, ஏதாவது வழி பிறக்குமா என்று பார்த்துக்கொண்டிருந்தால், நீ அவனையே மூடி விடலாமென்று சொல்லுகிறாயே? நமக்கு ஒன்றுமே புரியாத புதிர் போல இருக்கும் இந்தத் தீவுக்குள்ளே, அவனுக்கு ஒத்தாசையாக ஒருவருமே இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? அவனிடம் நாம் ஏதாவது சேட்டை

செய்யத் தொடங்கினுல், எங்கேயாவது மறைந்திருக்கும் அவனுடைய ஆட்கள், நமக்கு விரைவில் இந்த நல்லவையகத்திலிருந்து போவதற்கு வேறு வழி காட்டிவிட்டால் என்ன செய்வது? கொஞ்சம் பொறுத்திருந்துதான் பார்க்கலாமே" என்று சமாதானமாகப் பேசினுர்.

மாது, அடங்கிவிட்டான். அவர்கள் அந்த இடத்தையே உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

அப்போது சங்கர்லால், மாதுவைத் தட்டி எங்கோ ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினுர். மாது, திடுக்கிட்டுத் திரும்பி அந்த இடத்தைக் கவனித்தான். அங்கே—

கொஞ்ச தூரத்திலே, கடலின் மேலே—

கப்பல் ஒன்று ஆடாமல் அசையால் நின்றுகொண்டிருந்தது. அதற்கு நங்கூரம் போட்டுவிட்டிருப்பார்கள். இல்லாவிட்டால் கப்பல் எப்படி ஒரே இடத்தில் நின்றுகொண்டிருக்கமுடியும்?

பிறகு, கரையோரத்திலே ஏதாவது இருக்குமோ என்று கவனித்துப் பார்த்தார்கள். சங்கர்லால்தான் அதைக் கூடக் கண்டுபிடித்தார். அவர் சின்னப் படகு ஒன்று, கரையோரமாகத் தங்கி இருந்தது.

இவற்றை யெல்லாம் பார்த்த பிறகு, சங்கர்லால் அவர் யூகித்ததை மாதுவுக்கு விளக்கிச் சொன்னுர். அந்தப் பூனை மனிதன், அந்தக் கப்பலிலிருந்து படகு வழியாக இந்தத் தீவுக்கு வந்திருக்கவேண்டுமென்றும் அந்தக் கப்பலில் அவனுடைய ஆட்கள்தாம் இருக்கிறுர்கள் என்றும் விளக்கினுர்.

மாது, தன் மர மண்டையை ஆட்டி ஆட்டிச் சுவையோடு சங்கர்லால் சொன்னதைக் கேட்டான்.

கொஞ்ச நேரம் ஆயிற்று.

உள்ளே போன பூனை மனிதன் என்ன ஆனுன்? உள்ளே போய் அவன் என்ன செய்வான்? உள்ளே வேறு என்னென்ன பொருள்கள் இருக்கும்? வேறு எவராவது உள்ளே இருப்பார்களா? அவர்களும் அவன் கூடவே வெளியே வருவார்களா?

—அவர்கள் அந்த வாசலையே கவனித்துக்கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரம் ஆயிற்று.

பூனைமனிதன் தலை, சுரங்க வாசலில் எழத் தொடங்கியது. அவன் மெதுவாக வெளியே வந்தான். அந்த நீண்ட சதுரமான இரும்புக் கதவை இழுத்து அந்த வாசலை மூடினான். அங்கே அந்தக் கதவு இருக்கின்ற அடையாளமே தெரியாதது மாதிரிச் சுற்றிலும் இருந்த மணலையெல்லாம் குவித்து அதன் மேல் மூடினான். பிறகு, தான் அங்கு வந்த காலடியே தெரியாதபடி மணலைக் கிடுகிடுவென்று மூடிவிட்டுக்கொண்டே அவன் கடலை நோக்கி ஓடினான். அதைப் பார்ப்பதற்கே மிகவும் வேடிக்கையாகவும், விநோதமாகவும் இருந்தது.

சங்கர்லால், மாதுவுக்கு விளக்கியபடியே அவன் நேராகப் போய் அந்தப் படகிலே ஏறிக்கொண்டான். மடமடவென்று துடுப்பைத் தள்ளிவிட்டுக்கொண்டே அந்தக் கப்பலை நோக்கிப் படகை வெகு வேகமாகச் செலுத்தினான்.

கொஞ்சம் கொஞ்சமாக அவன் ஏறிச் சென்ற படகு, பார்வையிலிருந்து மறைந்தது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் தூரத்தில் நின்றுகொண்டிருந்த அந்தக் கப்பல் நகர்ந்து செல்லத் தொடங்கியது. இதிலிருந்து கப்பலில் அந்தப் பூனைமனிதன் ஏறித் தொத்திக்கொண்டான் என்பது மட்டும் யூகிக்கமுடிந்தது.

மாது, பரபரப்போடு சங்கர்லாலைப் பார்த்து, "போ தம்பி, அந்த ஆசாமியையும் போகவிட்டுவிட்டாயே? நாம் இனிமேல் எப்படித்தான் தப்பித்துக்கொண்டு போவதோ தெரியவில்லையே? இப்போதாவது அந்த இடத்துக்குப் போகலாம். வருகிறாயா, இல்லையா?" என்று கேட்டுக்கொண்டே மரத்தை விட்டுக் கீழே இறங்கினான்.

சங்கர்லால், அவனைத் தடுத்து ஒன்றும் சொல்லவில்லை. மாதுவைப் பார்த்து ஒரு மாதிரியாகச் சிரித்துக்கொண்டே அவரும் பேசாமல் இறங்கினார்.

மரத்தை விட்டு கீழே இறங்கியதும் மாது அந்த இரகசியக் கதவு இருந்த இடத்தை நோக்கி ஓடினான். பின்னாலேயே சங்கர்லாலும் ஓடினார்.

மாது, அந்த இரகசியக் கதவு இருந்த இடத்தில் உட்கார்ந்து, அந்தக் கதவை மூடியிருந்த மண்ணையெல்லாம் தள்ளத் தொடங்கினான்.

சங்கர்லால், அவனுக்கு அருகில் வந்து, "மாது, நில். இந்த சுரங்கத்திற்குள் அந்தப் பூனைமனிதனின் ஆட்கள் இருந்தாலும் இருக்கலாம். எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும்" என்றார்.

மாது; மண்ணைத் தள்ளுவதை நிறுத்திவிட்டு நகர்ந்து கொண்டான். சங்கர்லால், அந்த இடத்தில் உட்கார்ந்து மெல்லச் சத்தம் எதுவும் இல்லாமல் மண்ணைத் தள்ளினார்.

கதவு தெரிந்தது.

சங்கர்லால், மண்ணைத் தள்ளுவதை நிறுத்திவிட்டு, அவன் போட்டுவிட்டுப் போன சம்மட்டி எங்கே என்று தேடினார். அந்தச் சம்மட்டி ஒரு மரத்திற்குப் பின்னால் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது. உடனே ஓடிப் போய் அந்தச் சம்மட்டியை எடுத்து வந்து, அந்தநீண்டசதுரமான இரும்புக் கதவில் மெல்லத் தட்டினார். பிறகு தட்டுவதை நிறுத்திவிட்டுக் கதவின்மேல் காதை வைத்துக்கேட்டார்.

பதில் ஒலி எதுவும் கேட்கவில்லை.

பிறகு நிமிர்ந்து மாதுவைப் பார்த்து, "மாது, உள்ளே சுரங்கத்துக்குள் யாருமில்லை. உள்ளே போகலாம். ஆனால், அதற்கு முன் நீ ஏதாவது ஒருமரத்தில் ஏறி அந்தக் கப்பல் போய்விட்டதா? வேறு ஏதாவது கப்பல் வருகிறதா? கடற்கரையில் எவராவது மனிதர்களின் நடமாட்டம் தெரிகிறதா என்று பார்" என்றார் சங்கர்லால்.

"சரி தம்பி" என்று சொல்லிவிட்டு மாது, பக்கத்தில் இருந்த ஒரு மரத்தில் ஏறி, மர உச்சியில் உட்கார்ந்து கொண்டு சுற்றிப் பார்த்துவிட்டுக் கீழே இறங்கிச் சங்கர்லாலிடம் வந்து, "தம்பி, எந்தக் கப்பலையும் காணோம் எந்த மனித நடமாட்டத்தையும் காணோம்" என்றான், சற்றுத் தெளிவுடன்.

"சரி, நீயும் சேர்ந்து எல்லா மண்ணையும் தள்ளு" என்றார், சங்கர்லால்.

கொஞ்ச நேரத்திற்குள் இருவருமாகச் சேர்ந்து எல்லா மண்ணையும் தள்ளினார்கள். பிறகு, சங்கர்லால் அந்த இரும்புச் சமட்டியை எடுத்துக் கதவின்மேல் தெரிந்த ஆணியின்மேல் பக்கவாட்டில் டங் டங்கென்று போட்டார். கொஞ்ச நேரத்திற்குள் அந்த ஆணி கழன்று விட்டது. அடுத்த நிமிடம் சங்கர்லாலும், மாதுவுமாகச் சேர்ந்து அந்தப் பெரிய இரும்புக் கதவைத் தூக்கி நிறுத்தி விட்டு உள்ளே எட்டிப் பார்த்தார்கள். உள்ளே—

கொஞ்ச இருள் கலந்த வெளிச்சத்தில் வரிசையாகப் படிகள் இருப்பது தெரிந்தன.

"மாது, நான் முதலில் இறங்குகிறேன். நீ பின்னாலேயே வா" என்று சொல்லிவிட்டுச் சங்கர்லால் முதலில் மெல்ல இறங்கினார். பின்னாலேயே மாதுவும் மிகவும் எச்சரிக்கையாக இறங்கினான்.

சங்கர்லால், ஒவ்வொரு படியாக இறங்கிக்கொண்டே போய்க் கீழே தரையில் வந்து நின்று சுற்றிப் பார்த்தார். பின்னாலேயே வந்து மாது, சங்கர்லாலுக்குப் பக்கத்தில் வந்து பயத்துடன் நின்றான்.

சங்கர்லால், அங்கே தெரிந்த ஓர் இரும்புக் கதவோரத்தில் சுற்றிப் பார்த்தார்.

எங்கும் இருட்டு. ஒரே இருட்டு.

எப்படி உள்ளே போவதென்றே அவருக்குத் தெரியவில்லை. எந்தப் பக்கம் வழி? என்ன இருக்கிறது இங்கே? எதுவும் தெரியவில்லையே!

வெளிச்சத்தை உண்டாக்க எந்த வழியும் இல்லையே! இந்த அறைதந்தீவில் விளக்குக்கு எங்கே போவது?

அந்தப் பூனைமனிதன் இந்த இருட்டுச் சுரங்கத்திற்குள் எப்படி வந்து விட்டுப் போனான்?

சங்கர்லால், பலமாகச் சிந்தனை செய்துகொண்டே படிக்கு அருகில் உள்ள இரும்புச் சுவரை யெல்லாம் தடவிப் பார்த்தார். அந்தச் சமயத்தில்—

"தம்பி" என்று கூப்பிட்டான் மாது.

"என்ன மாது?" என்று கேட்டார் சங்கர்லால்.

"இதோ பார் தம்பி" என்று, எதையோ சங்கர்லாலிடம் கொடுத்தான் மாது.

சங்கர்லால், அவைகளை வாங்கி மேலே கதவின் வழியாக வரும் வெளிச்சத்தில் பார்த்தார். அவைகள்—

மெழுகு வர்த்திகளும் தீப்பெட்டியும்!

சங்கர்லால், சட்டென்று அந்த மெழுகு வர்த்திகளில் ஒன்றை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றதை யெல்லாம் கீழே போட்டு விட்டு அந்த ஒரு மெழுகு வர்த்தியை ஏற்றினார். அதிக வெளிச்சம் இல்லாவிட்டாலும் அந்தக் கொஞ்ச வெளிச்சத்தில் எதிரே நீண்டு கிடக்கும் சந்தும், பக்கவாட்டில் வரிசையாகஇருக்கும் அறைகளும் தெரிந்தன.

சங்கர்லால், கையில் எரியும் மெழுகு வர்த்தியுடன் முன்னே நடந்தார். மாது, பின்னாலேயே நடந்தான்.

சங்கர்லால் அந்த அறைக்கு அருகில் வந்து நின்று கொண்டு, "மாது, இந்தக் கதவைத் தள்ளு" என்றார்.

மாது. முன்னால் வந்து, கதவை ஓங்கித் தள்ளினான். கதவு திறந்துகொண்டது.

சங்கர்லால், மெழுகு வர்த்தியை முன்னால் நீட்டி அங்கே தெரிந்த அந்த இலேசான வெளிச்சத்தில் உள்ளே உற்றுக் கவனித்துப் பார்த்தார். உள்ளே—

ஒரு கதவு தெரிந்தது.

சங்கர்லால், முன்னேறி அந்தக் கதவுக்கருகில் போய் நின்றார். மாதுவும் பின்னாலேயே போய் அந்தக் கதவை ஓங்கி ஒரு தள்ளுத் தள்ளினான்.

கதவு திறந்து கொண்டது. சங்கர்லால் மெழுகு வர்த்தியை உள்ளே நீட்டிப் பார்த்தார். அது—

ஒரு சமையலறை. ஒரு மூலையில் பண்டம் பாத்திரங்களும் அதற்குப் பக்கத்தில் காய் கறிகளும், கோதுமையும் கொட்டிக் கிடந்தன. அதற்குப் பக்கத்தில் அடுப்பு இருந்தது.மாது, அவைகளைப் பார்த்தும், "தம்பி, எல்லாம் இருக்கின்றன. நான் ஏதாவது தயார் செய்து விடுகிறேன்.

இரண்டு பேரும் முதலில் சாப்பிட்டுவிட்டு மற்ற வேலைகளை யெல்லாம் அப்புறம் கவனிக்கலாம் தம்பி" என்ருன்.

சங்கர்லால், கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு, "சரி, செய். எனக்கும் காதை அடைக்கிறது. சாப்பிடாமல் எத்தனை நாட்களுக்குத்தான் இருக்க முடியும்?" என்ருர்.

பிறகு, சங்கர்லால், மெழுகு வர்த்தியை அடுப்பின் மேல் வைத்துவிட்டுப் பக்கத்தில் உட்கார்ந்தார்.

மாது, கிடுகிடுவென்று அங்கே கிடந்த விறகுகளை எடுத்து அடுப்பில் வைத்து அடுப்பை மூட்டிக் கிடுகிடு வென்று ஏதோ தயார் செய்யத் தொடங்கினன்.

சங்கர்லால், சிரித்துக்கொண்டே, "இந்தத் தனித் தீவில் தனியாக வந்து சிக்கிய பிறகும்கூட நீ தயாரிப்பதைச் சாப்பிடும்படியேதான் என் தலையில் எழுதியிருக்கிறது" என்ருர் கேலிக்காக.

"நீ சாகிற வரைக்கும் நான் தயாரிப்பதைச் சாப்பிடும் படி ஆனாலும் ஆகிவிடும்போல் இருக்கிறது! அதனாலே இந்தத் தீவில் இருப்பது நாம் இரண்டே பேர்தாம். நம் இரண்டு பேரில், நீ தயார் செய்தால், நாம் இரண்டு பேருமே சாப்பிட முடியாது! நான் தயார் செய்தால்தானே இரண்டு பேரும் சாப்பிட முடியும்?" என்ருன் மாது, சற்றுக் கர்வம்கலந்த ரோசத்தோடு!

சங்கர்லால், சிரித்துக்கொண்டே, "ஒருவகையில அது உண்மைதான்" என்று சொல்லிவிட்டுப் பக்கத்தில் கிடந்த மெழுகு வர்த்திகளில் ஒன்றை எடுத்து ஏற்றிக்கொண்டு எழுந்து நின்ருர்.

"என்ன தம்பி?" என்று கேட்டான் மாது.

"நான் இப்படியே ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு மெழுகு வர்த்தியுடன் சமையலறையை விட்டு வெளியே வந்து, அடுத்த அறை யையும் தாண்டி நீண்ட சந்துக்கு வந்து, அடுத்த அறைக் கதவுக்கருகில் வந்து, ஒருமுறை சுற்றிப் பார்த்தார்.

பிறகு, அந்தக் கதவை ஓங்கி ஒரு தள்ளுத் தள்ளினர். கதவு திறந்துகொண்டது. சங்கர்லால், மெழுகு வர்த்தியை உள்ளே நீட்டி, எட்டிப் பார்த்தார்.

அது ஒரு காலியான அறை. எதிரே பார்த்தார். எதிரே ஒரு கதவு தெரிந்தது. சங்கர்லால், மெல்ல உள்ளே போய் அந்தக் கதவை ஓங்கி ஒரு தள்ளுத் தள்ளினர். கதவு திறந்துகொண்டது. சங்கர்லால் மெழுகு வர்த்தியை உள்ளே நீட்டி, எட்டிப் பார்த்தார். உள்ளே—

பாறை பாறையாகத் தங்கக் கட்டிகள் குவிந்து கிடந்தன! ஆமாம், குவிந்து கிடந்தன!

சங்கர்லால், இன்னும் உள்ளே போய் அந்த அறைக்குள் நின்றுகொண்டு சுற்றிப் பார்த்தார். அது ஒரு சின்ன அறை. அந்த அறை முழுவதும் தங்கக் கட்டிகளைத் தவிர வேறு எதுவுமே இல்லை!

சங்கர்லால், வெளியே வந்து அந்த அறைக் கதவை முன்பு இருந்ததைப் போலவே சாத்திவிட்டு, வழியில் இருந்த அறையைத் தாண்டி வெளியே சந்துக்கு வந்து அந்த அறைக் கதவையும் இழுத்துச் சாத்தினர்.

பிறகு, வந்த சந்தின் வழியே யாராவது இருக்கிறார்களா என்று பார்த்துவிட்டு இறுதியாக இருந்த அறைக்கு முன் போய் நின்று, அந்த அறைக் கதவை ஓங்கி ஒரு தள்ளுத் தள்ளினர். கதவு திறந்துகொண்டது. சங்கர்லால், மெழுகு வர்த்தியை உள்ளே நீட்டி எட்டிப் பார்த்தார். அந்த அறையில் எதுவுமே இல்லை. வழக்கம்போல எதிரே ஒரு கதவு தெரிந்தது. சங்கர்லால், உள்ளேபோய் அந்த அறையின் கதவை ஓங்கி ஒரு தள்ளுத் தள்ளினர். உடனே கதவு திறந்துகொண்டது. சங்கர்லால் மெழுகு வர்த்தியை உள்ளே நீட்டி, எட்டிப் பார்த்தார். உள்ளே—

நிறையக் கரன்சி நோட்டுகள்! வைரக் கற்கள்!

சங்கர்லால், உள்ளே போய் நின்று சுற்றிப் பார்த்தார். இந்த அறையும் தங்கக் கட்டிகள் இருந்த அறையைப் போலவே, சின்ன அறையாக அதே அளவுள்ளதாகத்தான் இருந்தது. அந்த அறையில் கரன்சி நோட்டுகளையும், வைரக் கற்களையும் தவிர வேறு எதுவுமே இல்லை.

சங்கர்லால், அந்த அறைக் கதவை முன்பு இருந்தது போலவே சாத்திவிட்டு வழியில் இருக்கும் அறையைத்

தாண்டி வெளியே வந்து கதவைச் சாத்திவிட்டுச் சந்துவழியாக விரைந்து படிகளுக்கு அருகில் வந்து படிகளின்மேல் ஏறி வெளியே வந்து எட்டிப் பார்த்துச் சுற்றிப் பார்த்தார். யாரையுமே காணோம். வழக்கமபோல அந்தத் தீவு, மனிதர்களே இல்லாத தீவு மாதிரித்தான் தெரிந்தது!

சங்கர்லால், மீண்டும் படிகளின் வழியாகக் கீழே இறங்கி வந்து எதிரே தெரிந்த அறைக்குப் போனார். கதவை ஓங்கித் தள்ளினார். கதவு திறந்துகொண்டது. ஆனால், உள்ளே ஒரே கும்மிருட்டாக இருந்தது. சங்கர்லால் நன்றாக உற்றுப்பார்த்தார். அவரால் அங்கே என்ன இருக்கும் என்பதை எவ்வளவு முயன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. சங்கர்லால், மெழுகு வர்த்தியை வழக்கம் போல உள்ளே நீட்டி, எட்டிப் பார்த்தார். உள்ளே—

எங்கே பார்த்தாலும் ஒரே கைத்துப்பாக்கிகளாகக் கிடந்தன. ஓரத்திலே தோட்டாக்கள் நிறைய இருந்தன.

சங்கர்லால், உள்ளே நுழைந்தார். அங்கே இருக்கின்ற துப்பாக்கிகளுக்குள்ளேயே மிகவும் நல்லதாக இரண்டைத் தேடி எடுத்தார். அந்தத் துப்பாக்கிகள் இரண்டிலும் தோட்டாக்களைப் போட்டு நிரப்பினார். எவ்வளவு தோட்டாக்களை அடைக்க முடியுமோ, அவ்வளவையும் அடைத்து எடுத்துக்கொண்டார்.

தோட்டாக்கள் அடைத்த துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு வந்தவழியே திரும்பி நேராக மாது இருக்கும் இடத்தைத் தேடிப் போனார்.

அங்கே, மாது ஏறக்குறைய எல்லா அலுவல்களையும் முடித்துவிட்டுச் சங்கர்லாலை எதிர்பார்த்துக் காத்திருந்தான். சங்கர்லால் வந்ததும், "வா, தம்பி, வா. உனக்காக எவ்வளவுநேரம் காத்திருப்பது? வெறும் வறட்டுச் சப்பாத்தி தான். உம், உட்கார். சாப்பிடலாம்" என்றான்.

சங்கர்லால், ஒரு மாதிரியாகச் சிரித்துக்கொண்டே உட்கார்ந்தார். மாது, ஆளுக்குப் பாதியாக, தான் செய்த சப்பாத்திகளைப் பங்கிட்டு முன்னேவைத்தான். சங்கர்லால், பேசாமல் இயந்திரம்போல், மாது பரிமாறிய சப்பாத்திகளை மென்று விழுங்கிக்கொண்டிருந்தார்!

திடீரென்று சங்கர்லால் எழுந்து, "மாது நீ சாப்பிட்டுக் கொண்டிரு. இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டு அந்தச் சுரங்க வாசல் பக்கமாக இறங்கித் தட தடவென்று ஓடினார்.

" இதேதடா பைத்தியமாக இருக்கிறது " என்று சாப் பிட்டுக்கொண்டே முணுமுணுத்தான் மாது. ஆனால், அவன், இருந்த இடத்தை விட்டு அசையவில்லை !

வேகமாக வாசலைத் தாண்டி, மேலே தலையை நீட்டினார் சங்கர்லால். அவருடைய பார்வை முழுவதும் கடல் பரப் பின் மேல் தான் இருந்தது. சங்கர்லால், நன்றாக உற்றுக் கவனித்தார். அங்கே—

தூரத்தில் கப்பல் ஒன்று வந்துகொண்டிருந்தது. சங்கர்லால், இவ்வளவு விரைவாக அந்தக் கப்பல் திரும்பி வந்துவிடும் என்று கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை. அவர் பரபரப்போடு உள்ளே ஓடினார்.

மாது, யாராண்டால் நமக்கென்ன என்கின்ற தோரணை யில் அவன் பாட்டுக்குச் சப்பாத்தியைக் கடித்து இழுத்துக் கொண்டிருந்தான். சங்கர்லாலின் பரபரப்பைக் கண்டு மாதுவுக்குக் கூடத் திகைப்பு ஏற்பட்டது !

அவர் மாதுவின் கையில் ஒரு துப்பாக்கியைத் திணித் தார். மாது ஒன்றும் புரியாமல் விழித்தான். சங்கர்லால், " மாது, எதற்காகவும் கொஞ்சம்கூடப் பயப்படாதே. இந்தா இந்தத் துப்பாக்கியை நீ வைத்துக் கொள். இதை நான் வைத்துக் கொள்ளுகிறேன. இரண்டும் குண்டோடு இருக்கிறது. நாம் இங்கிருந்து வெகு வேகமாக வெளியே போகவேண்டும். முன்பு போன கப்பல் திரும்பிவருகிறது. நான் இவ்வளவு விரைவாகக் கப்பல் திரும்பும் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. எச்சரிக்கை துப்பாக்கி யிலே குண்டு இருக்கிறது. விரைவில் புறப்படு " என்றார்.

மாதுவுக்குக் கையும் வரவில்லை, காலும் வரவில்லை. அவன் சங்கர்லாலோடு நடுங்கிக்கொண்ட வெளியே நடந்து வந்தான். இரண்டு பேரும் வெளியே வந்ததும் மிகவும் துன்பப்பட்டு அந்தச் சுரங்கக் கதவை எடுத்து மூடினார்கள். பிறகு, மணலை மேலே கொட்டி மூடினார்கள்.

இருவரும் கிடுகிடுவென்று காலடி தெரியாமல் மணலை மூடிக் கொண்டே பக்கத்தில், அவர்கள் முன்பு மறைந்திருந்த தென்னந் தோப்பை நோக்கி ஓடினார்கள்.

பழையபடி இருவரும் அந்தத் தென்னை மரத்தின் மேல் ஏறிக்கொண்டு, அங்கே என்ன நடக்கிறது என்பதையே உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

அந்தப் பெரிய கப்பல், கரையோரம் வராமல் கொஞ்சம் தூரத்திலேயே நின்றுகொண்டது. பிறகு, கப்பலிலிருந்து பூனை மனிதன், படகிற்குள் ஏகிறிக் குதித்தான். படபடவென்று படகைத் தள்ளிக்கொண்டே அந்தக் கரைக்கு வந்து சேர்ந்தான்.

அவன் எவ்வளவு வேகமாக ஓடி வந்தான் தெரியுமா? நேரே மூடியிருந்த அந்தச் சுரங்க வாசலை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தான். அப்போது—

மாதுவுக்குச் சொரேர் என்றது. அவன் சங்கர்லாலைச் சீண்டி விட்டு, "தம்பி, ஒரு பெரிய அனர்த்தம் ஏற்பட்டு விட்டதே! நாம் வரும்போது நாம் சாப்பிட்ட இடத்தை அப்படி அப்படியே போட்டு விட்டு அவசரத்தில் ஓடி வந்து விட்டோமே" என்றான் திகிலுடன்.

சங்கர்லால், மாது இப்படிச் சொன்னதும் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தார்.

"மாது, உனக்குத் துப்பறியும் மூளை வந்துவிட்டதே; அதுவே போதும் போ. நாம் பிழைத்துக் கொள்ளலாம். அந்த பூனை மனிதன், உள்ளே நாம் அப்படி அப்படியே போட்டு விட்டு வந்த சமையல் உள்ளைப் பார்த்து விட்டால் இங்கே வேறு யாரோ இருக்கிறார்கள் என்று சந்தேகிப்பான் என்று நினைக்கிறாயா? அவ்வளவு தூரத்திற்கு அவனை யார் விடப் போகிறார்கள் ?" என்று ஒரு போடு போட்டார்.

மாது அசந்து விட்டான். அவன் முகமே ஒரு பெரிய கேள்விக் குறியாக மாறியிருந்தது. அவன் அவரை அர்த்தநிறைவோடு பார்த்தான்.

சங்கர்லால் அவனைத் தட்டிக் கொடுத்துக்கொண்டே, "மாது, ஓசைப் படாமல் மெதுவாகக் கீழே இறங்கி வா" என்று சொல்லிவிட்டு அவரே முதலில் இறங்கினார்.

மாது கொஞ்சம் பயத்தோடு புலி மனிதனை உற்றுப் பார்த்தான். அந்தப் புலிமனிதன்—

அவன், அப்போதுதான் அந்தச் சுரங்க வாசலை மூடி யிருந்த மணலை யெல்லாம் விலக்கி விட்டுக்கொண்டிருந் தான். மூடியிருந்த மணலை யெல்லாம் விலக்கி ஆனதும் அவன் கதவைச் சப்தப்படாமல் அழுத்தித் திறந்தான். அவன் மெதுவாகப் படிகளில் இறங்கி உள்ளே மறைந் தான். சங்கர்லால், மாதுவின் கையில் துப்பாக்கியைக் கொடுத்து விட்டு முதலில் விரைந்து ஓடினார்.

மாதுவும், அவருக்குப் பின்னாலேயே ஓடிக்கொண்டு, "தம்பி! இப்போது நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கக் கேட்டான்.

சங்கர்லால் ஓடிக்கொண்டே, "நான் ஓடிப் போய் அந்தப் புலிமனிதன் மேலே தாவி அவனைப் பிடித்துக் கொள்ளுகிறேன். நீ ஓடிவந்து அவன் நிமிருவதற்குள் துப்பாக்கியை அவன் நெஞ்சுக்கு நேராக நீட்டி மிரட்டு. அதற்குப் பிறகு நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றார்.

மாது, ஓடிப் போயிருந்த தைரியத்தை யெல்லாம் கூட்டிப் பிடித்துக்கொண்டு பின்னாலேயே ஓடினான்.

சங்கர்லால் சுரங்க வாசலில் மெதுவாகக் காலடி எடுத்து வைத்துக்கொண்டே உள்ளே உற்றுக் கவனித்துப் பார்த்தார். உள்ளே—

எல்லாப் படிகளையும் ஏறக்குறைய தாண்டி விட்டுக் கடைசிப் படியில் இருந்தான் புலிமனிதன். சங்கர்லால் இன்னும் இரண்டு படிகள் இறங்கி இருந்தால் புலிமனி தன் திரும்பிவிட்டிருப்பான். ஆனால், சங்கர்லால் அவனை அவ்வளவு தூரத்துக்கு விட்டு வைக்கவில்லை.

சங்கர்லால், மேல் படியிலிருந்து கீழ்ப்படிக்கு ஒரே தாவுத் தாவினார். மேலே இருந்து விழுந்த சங்கர்லாலால் ஏற்பட்ட அதிர்ச்சியை அவனால் தாங்க முடியவில்லை. எதிர்

பாராத இந்தத் தாக்குதலால், பூனைமனிதன் அதிர்ச்சி அடைந்துவிட்டான்!

அவன், தன்னைச் சமாளித்துக்கொண்டு, சங்கர்லாலைத் திருப்பித் தாக்க முயற்சிப்பதற்குள், மாது, அவனுக்கு முன் நெஞ்சுக்கு நேராகத் துப்பாக்கியை நீட்டினான். பூனை மனிதன், வெலவெலத்துப் போய்விட்டான்!

சங்கர்லால், அவனுடைய உடைகளையெல்லாம் கழற்றும்படி சொன்னார். சங்கர்லால், சொன்னதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர், அவனுடைய உடலையும், கண்களையும் ஊடுருவிப் பார்த்தார். அதிலிருந்து அந்தப் பூனைமனிதன் ஓர் ஐரோப்பிய மனிதன் என்று அவரால் யூகிக்க முடிந்தது.

உடனே சங்கர்லால், அவனோடு ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினார். அவர் ஆங்கிலத்தில் அவனிடம் கேட்ட முதல் கேள்வியே இதுதான்.

“உனக்கு எந்த மொழியில் பேசத் தெரியும்?”

—அவன் இந்தக் கேள்விக்கும் முதலில் பதில்சொல்லவில்லை. ஆனால், தலையை மட்டும் ஒரு மாதிரியாக ஆட்டினான். இதிலிருந்து அவன் வேண்டுமென்றே இந்தக் கேள்விக்கு பதில் சொல்லாமல் மறைக்கிறான் என்று அவர் தெரிந்துகொண்டார். அவர், பூனைமனிதனின் நெஞ்சில் துப்பாக்கியை அழுத்தும்படி அருகில் நின்றுகொண்டிருந்த மாதுவுக்குச் சைகை செய்தார்.

மாது, அப்படியே செய்தான். சங்கர்லால், “உனக்கு எந்த மொழி பேசத் தெரியும்?” என்று மறுபடியும் உறுமிக் கேட்டார்.

பூனை மனிதன் தூக்கிய கையை அப்படியே கொஞ்சம் மடித்துக்கொண்டு, “ஆங்கிலத்தில் மட்டும்தான்” என்று கணீரென்று பதில் சொன்னான்.

மாதுவுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. சங்கர்லால், மாதுவின் கையிலிருந்த துப்பாக்கியைத் தான் வாங்கிப் பிடித்துக்கொண்டு, “இப்போது உன் முகமூடியையும்,

சட்டையையும் கழற்று" என்று கடுமையாக, அதிகாரமாக ஆங்கிலத்தில் உத்தரவிட்டார்.

பூனை மனிதன், கொஞ்சம் முரட்டுத்தனமாகவே, "அதெல்லாம் முடியாது" என்று பதில் சொன்னான்.

சங்கர்லால், ஒரு மாதிரியாகச் சிரித்துக்கொண்டார். பிறகு மாதுவின் பக்கம் திரும்பி, "மாது, நீ போய் அவனுடைய முகமூடியையும் சட்டைகளையும் கழற்றி எடு" என்றார், கடுமையான குரலில்.

மாது, முதலில் கொஞ்சம் நடுங்கினான். ஆனால், சங்கர் லால் கொஞ்சம் கெட்டியான குரலில், "மாது, நீ போய் அவனுடைய முகமூடியையும், சட்டையையும் கழற்றி எடு" என்று மறுபடியும் சொன்னதும் அவனுக்குத் தைரியம் பிறந்துவிட்டது!

மாது, அவனுடைய முகமூடியையும், சட்டையையும் கழற்றி எடுத்தான். அவன் கண்கள் இரண்டும் அசல் பூனையினுடைய கண்களைப்போலவே இருந்தன. எப்போதும் முகமூடியைப் போட்டு மூடிக்கொண்டு இருந்ததனால்தானோ என்னவோ, அவனுடைய முகமெல்லாம் சவம் போல் ஒரே வெளுப்பாக இருந்தது!

சங்கர்லால், கொஞ்ச நேரம் வரை அவனை அசையாமல் அப்படியே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்.

அவன் யார், எந்தத் தேசத்தவன், ஏன் இப்படி வந்தான் என்ற விவரம் ஒன்றும் அவனைப் பார்த்துக் கண்டு பிடிக்க முடியவில்லை.

சங்கர்லால் அவன் நெஞ்சிலே துப்பாக்கியை இன்னும் கொஞ்சம் வேகமாக அழுத்திக்கொண்டே, "இங்கே பார், மரியாதையாகச் சொல். உன்னுடைய உண்மையான பெயர் என்ன?" என்று உறுமினார்.

அவன், தன்னுடைய பெயர் 'கேட்மேன்' (Cat Man) (பூனை மனிதன்) என்றான். அவன் உடை உடுத்திக்கொண்டிருந்த வகையையும், அவனுடைய பெயரையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மிகவும் பொருத்தமாகத்தான் இருந்தது!

பூனை மனிதன், தன்னுடைய நீலம் பாய்ந்த பூனைக் கண்களால் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருந்தான்.

இவர்களிடமிருந்து எப்படித் தப்பித்துக் கொள்ளலாம் என்று சுற்றிச் சுழலும் பூனை மனிதனின் கண்களைச் சங்கர் லாலின் கழுகுக்கண்கள், நிரம்பக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தன.

சங்கர்லால், பூனைமனிதனைப் பார்த்து, "பூனை மனிதரே, நீங்கள் எப்படித் தப்பித்துக் கொள்ளலாம் என்று யோசனை செய்து கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை. நேரந்தான் வீணாகும். அது இருக்கட்டும். இப்பொழுது நான் கேட்கின்ற கேள்விகளுக்கெல்லாம் உடனுக்குடன் பதில் சொல்ல வேண்டும். தாமதம் செய்தால் குண்டு உம் நெஞ்சிற்குள் சென்றுவிடும். நீர் நேரத்தைக் கடத்து கிறீர் என்பது எனக்குத் தெரியும். இப்படியே எப்படி யாவது நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தால், கப்பலில் இருப்பவர்கள் இன்னும் காணாமே என்று நம்மை வந்து தேடுவார்கள். அப்பொழுது இந்த இரண்டு மனிதர்களும் அகப்பட்டுக் கொள்ளுவார்கள் என்று நினைக்கிறீர். அவர் கள் இங்கே வரும் அளவுக்கு நாங்கள் தாமதிப்போமா? சட்டென்று நான் கேட்கின்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லும். உண்மையைச் சொன்னால் உயிர் தப்பலாம்" என்று ஆங்கிலத்தில் கிடுகிடு வென்று சொன்னார்.

இதைக் கேட்ட பூனை மனிதன், பதில் எதுவும் சொல் லாமல் பெருமூச்சு ஒன்று விட்டான்.

"சீக்கிரம் சொல்லு. நீ எந்த ஊரைச் சேர்ந்தவன்?' என்று அடித்தொண்டையில் மிகவும் அழுத்தமாய்க் கேட்டார் சங்கர்லால்.

பூனை மனிதன், கண்களைத் திறக்காமலேயே, "நான் பிறந்தது அயர்லாந்தில்" என்றான்.

"இப்போது இருப்பது?"

"இங்கிலாந்தில்"

சங்கர்லால், சட சடவென்று கேள்விகள் கேட்டார். பூனை மனிதன், அவருடைய எல்லாக் கேள்விகளுக்கும் பட பட வென்று பதில் சொன்னான்.

" இந்தக் கப்பல் இப்பொழுது எங்கே போகும் ?"

" ஒரு தீவுக்கு "

" அது என்ன தீவு ?"

" பெயர் இல்லாத் தீவு "

" அதுதான் உங்களுடைய ரகசியமான, அந்தரங்கமான, தங்கும் இடமா ?"

" ஆமாம்."

" அந்தத் தீவில் வேறு யாராவது இருக்கிறார்களா ?

" இருக்கிறார்கள் "

" அவர்களெல்லாம் யார் ?"

" பலர், என்னுடைய கையாட்கள். பலர், என்னுடைய கைதிகள், பலர் எனக்கு வேண்டியவர்கள் "

" இப்பொழுது நீ சொன்னதெல்லாம் உண்மையாய் இருந்து, இனிமேல் சொல்லப் போவதும் உண்மையாய் இருந்தால், நீ இந்தஉலகத்தில் உயிருடன் வாழ, நான் வழி செய்து தருகிறேன். இல்லாவிட்டால், எந்த நிமிடத்தில் நீ சொன்னது பொய் என்று தெரிகிறதோ, அந்த நிமிடமே புறப்பட்டு இங்கே வந்து உன்னைச் சுட்டு விடுவேன் " என்றார், சங்கர்லால் !

இதைக் கேட்டதும் பூனைமனிதன் தன் தலையைச் சரி என்று ஆட்டிவிட்டு, துப்பாக்கியைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுமாறு சைகை செய்தான்.

சங்கர்லால் சிரித்துக்கொண்டே துப்பாக்கியைக் கொஞ்சம் தளர்த்திக் கொண்டு மேலும் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார் :

" இந்தக் கப்பலில் சுமார் எத்தனை பேர் இருப்பார்கள் ?"

" பதின்மூன்று பேர் இருக்கிறார்கள் "

" அவர்களெல்லாம் யார் ?"

" எனக்கு முக்கியமாக வேண்டிய கையாட்கள், எனக்கு அந்தரங்கமானவர்கள் "

"அவர்களோடு நீ எப்படிப் பேசுவாய் ?"

"நான் யாரோடும் பேசுவது இல்லை"

"ஏன் ?"

"என் குரலை வைத்து அடையாளம் கண்டுவிடுவார்களே என்பதற்காக."

"அப்படியானால், நீ அவர்களுக்குச் செய்தியை எப்படித் தெரிவிப்பாய் ?"

"சைகைகளின் மூலம்"

"ஓஹோ, இதுவரை நீ இந்த உருவத்தில் இருக்கும்போது எவருடனும் பேசியதில்லையா ?"

"இல்லை"

"அப்படியானால், உன்னை அவர்களெல்லாம் எப்படி நினைக்கிறார்கள் ? நீ வேண்டுமென்றே பேசாமல் இருப்பதாக நினைக்கிறார்களா ? அல்லது ஊமை என்று நினைக்கிறார்களா ?"

"ஊமை என்றுதான் நினைக்கிறார்கள்"

"நீ எப்படிச் சைகைகளெல்லாம் காட்டுகிறாய் ?"

"ஊமையைப் போலவேதான்"

"இப்படி எவ்வளவு நாட்களாகச் செய்துகொண்டு வருகிறாய் ?"

"நான் இந்தத் தொழிலில், இந்த வேடத்தைப் போட்டுக்கொண்டதிலிருந்து"

"போதும், உனக்கு நிறையத் தொந்தரவு கொடுத்துவிட்டேன். சரி, இந்த அறையில் கைதிகளை அடைத்து வைக்கத் தனி அறை ஏதாவது இருக்கிறதா ?"

"இருக்கிறது. இதோ இப்படியே போனால் கடைசியில் இருக்கும் அறை."

"அப்படியானால் நீங்கள் இந்த அறையில் கைதியாக இருக்கிறீர்களா ?"

"இருக்கிறேன்" என்றான் பூனை மனிதன்.

"அந்த அறையில் தப்பிச் செல்லும் வழி எதுவும் இல்லையே?" என்று வஞ்சகச் சிரிப்புடன் கேட்டார் சங்கர்லால்.

"இல்லை"

"உண்மையாகவா?"

"உண்மையாக"

"வேறு சமயமாக இருந்தால் உன் வார்த்தையை நம்பிவிடுவேன். ஆனால், இந்தச் சமயத்தில் என்னால் நம்புவதற்கில்லை. அதனால், அந்த அறையை நான் சோதித்துப் பார்த்த பிறகுதான் உன்னை அதில் சிறை வைப்பேன்" என்றார், சங்கர்லால்.

பூனை மனிதன், சிரித்துக்கொண்டே "பெரிய மனிதர் தான் நீங்கள்" என்றான்.

சங்கர்லால், துப்பாக்கியை எடுத்துச் சட்டென்று அவனுக்குப் பின்னால் போய், அவன் முதுகில் வைத்து அழுத்திக்கொண்டார்.

பூனை மனிதன், முன்னால் போனான். பின்னாலேயே அவன் முதுகில் அழுத்திய துப்பாக்கியோடு சங்கர்லால் போனார். அவருக்குப் பின்னால், மாது போனான்.

பூனை மனிதன், முன்பு அவன் சுட்டிக் காட்டிய அறைக்கு முன்னால் வந்ததும் நின்றான்.

சங்கர்லால், மாதுவிடம் ஏதோ சைகைகள் காட்டினார். மாது, ஓடிப்போய்ச் சில மெழுகுவர்த்திகளையும் தீப்பெட்டியையும் எடுத்துக்கொண்டு வந்து நின்றான்.

பூனை மனிதன், அந்த மெழுகுவர்த்திகளையும் தீப்பெட்டியையும் பார்த்துச் சிரித்துவிட்டு, "அவசியம் இல்லை. இதோ" என்று சொல்லிவிட்டுத் தன் பக்கவாட்டுப் பைக்குள் கைவிடப் போனான்!

"கையைத் தூக்கு" என்று கத்திக்கொண்டே துப்பாக்கியை அழுத்தினார் சங்கர்லால். சட்டென்று வேறு வழியின்றித் தன் கைகள் இரண்டையும் மேலே தூக்கிக் கொண்டான் அந்தப் பூனை மனிதன்.

அவன், கைகளை மேலே தூக்கிக்கொண்டு "பையி லிருந்து கைத் துப்பாக்கியை எடுத்துச் சுட்டுவிடுவேன் என்று நினைத்தீர்களா?" என்று கேட்டுச் சிரித்தான்!

"அதில் ஐயம் என்ன? நாங்கள் தாம் இன்னும் உன்னை நம்பவில்லையே" என்று சொல்லிக்கொண்டே "மாது, இங்கே வந்து, இந்தத் துப்பாக்கியைப் பிடித்துக் கொள். நான் அவன் பைகளையெல்லாம் சோதனை போடு கிறேன்" என்றார்.

மாது, அருகில் வந்து, தன் கையிலிருந்த துப்பாக்கி யைக் கீழே வைத்துவிட்டு, சங்கர்லால் துப்பாக்கியை வந்து பிடித்துக்கொண்டான்.

சங்கர்லால், அடுத்த விநாடி பூனைமனிதன் பைகளை எல்லாம் சோதனை போட்டு, ஒரு பெரிய மின்பொறி விளக்கு, ஒருகைத்துப்பாக்கி, ஒருகைக்குட்டை, ஒரு விலங்கு, ஒரு பூட்டுச் சாவி, ஒரு மருந்துப் புட்டி ஆகியவைகளை எடுத்தார். அவைகளையெல்லாம் அப்படியே கீழே வைத்து விட்டு, விளக்கை மட்டும் எடுத்துக்கொண்டு, அந்த அறைக்குள் போய், அதனுள் எங்கும் அடித்துப் பார்த்து, அந்த அறையை அலசு அலசு என்று அலசிப் பார்த்து விட்டு வெளியே வந்தார்.

"இந்த அறையிலிருந்து நீங்கள் தப்பிச் செல்லவே முடியாது. நீங்கள் சொன்னது உண்மைதான்" என்று சொல்லிக்கொண்டே வந்து, பூனைமனிதனை மறுபடியும் நன்றாகச் சோதனை போட்டுவிட்டு, "சரி, நீங்கள் உள்ளே போகலாம்" என்றார் சங்கர்லால்.

பூனைமனிதன் அந்த அறைக்குள் போனான்.

பூனைமனிதன் அந்த அறைக்குள் போனதும் சங்கர்லால், கீழே கிடந்த கைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, "மாது அந்தத் துப்பாக்கியை வைத்துவிட்டு, இந்தக் கைத் துப்பாக்கியை ஒரு கையிலும், ஒரு கையில் விளக்கையும் பிடித்துக்கொண்டு வந்து அறைக்குள் நில். நான், என் உடையை மாற்றிக்கொள்ளுகிறேன்" என்றார்.

" சரி தம்பி " என்று சொல்லிவிட்டு மாது, சங்கர்லால் கையில் இருந்த துப்பாக்கியையும், விளக்கையும் வாங்கிக் கொண்டு அந்த அறைக்குள் நுழைந்து, எரியும் மின்பொறி விளக்குடனும் நீட்டிய துப்பாக்கியுடனும் பூனைமனிதனுக்கு முன்னே வந்து நின்றான்.

சங்கர்லால், பூனைமனிதனைப் பார்த்து, " உன்னுடைய உடையைத் தந்துவிட்டு, என் உடையை மாற்றிக்கொள்கிறீர்களா ?" என்று கேட்டார்.

" ஓ..." என்றான் பூனைமனிதன் !

உடனே சில நிமிடங்களில் இரண்டு பேரும் உடைகளை மாற்றிக்கொண்டார்கள். அடுத்த நிமிடம்—

சங்கர்லால் வெளியே வந்தார். மாதுவும் வெளியே வந்தான். கதவு பூட்டப்பட்டது. சாவி, சங்கர்லாலின் பைக்குள் பத்திரமாய்ப் போய் விழுந்தது !

சங்கர்லால், விரைந்து அந்த முகமூடி கிடந்த இடத்திற்கு வந்தார். அந்த முகமூடியை எடுத்தார். முகத்தில் மாட்டிக்கொண்டார்.

மாட்டிக்கொண்டு, " எப்படி இருக்கிறது மாது ?" என்று மாதுவைப் பார்த்துக் கேட்டார்.

மாது ஒருமுறை நன்றாகப் பார்த்துவிட்டு, " பிரமாதம் தம்பி, பூனைமனிதனை விடப் பிரமாதமாய் இருக்கிறது " என்றான் வியப்போடு.

" சரி, நான் சொல்லுவதைக் கவனமாய் கேள். இப்போது இருவரும் வெளியே போவோம். போனதும் நான் உன் முதுகில் கைத்துப்பாக்கியை வைத்துஅழுத்தித் தள்ளிக்கொண்டு போவேன். நீ கடைசி வரைக்கும் கைதி போல் நடந்துகொள் " என்றார் சங்கர்லால்.

" சரி தம்பி " என்றான் மாது.

அடுத்த நிமிடம், இருவரும் வெளியே வந்தார்கள். கதவைச் சாத்தினார்கள். மண்ணைத் தள்ளி மூடினார்கள்.

மாது, தன்னைத் தயார் படுத்திக்கொண்டதும் பூனை மனிதன் உருவத்தில் இருந்த சங்கர்லால், அவன் முதுகில்

கைத் துப்பாக்கியை வைத்து அழுத்தித்தள்ளிக்கொண்டே கடற்கரை ஓரத்திற்கு வந்தார்.

அங்கே காத்துக் கிடந்த படகிலே, மாதுவை முதலில் ஏறி உட்கார்ந்து கொள்ளச் சொன்னார் சங்கர்லால். மாது படகில் உட்கார்ந்து கொண்டதும் சங்கர்லாலும் அவனுக்குப் பின்னாலேயே ஏறி உட்கார்ந்தார். ஒரு கையால் துடுப்பைத் தள்ளினார்.

படகு, தூரத்தில் நின்றிருந்த கப்பலை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. கப்பலைப் படகு நெருங்க நெருங்கப் பூனைமனிதன் பார்வை, கூர்மையாக அந்தக் கப்பலில் பதிந்துபோயிருந்தது. கப்பலிலிருந்து நாலைந்து பேர் இந்த விசித்திரமான காட்சியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதைப் பூனைமனிதன் வேடத்தில் இருந்த சங்கர்லால், ('இனிமேல் சங்கர்லாலைப் பூனைமனிதன் என்றே சொல்லலாமே') கவனிக்கத் தவறவில்லை.

படகு, கப்பலுக்கு அருகில் போனதும் கப்பலிலிருந்து நூலேணி ஒன்று இறங்கியது. அதற்குள் பூனை மனிதன் அந்தக் கப்பலுக்குப் பக்கத்திலேயே நெருங்கிப் போய் விட்டான்.

சங்கர்லால், மெய்யான பூனை மனிதனைப் போல் எவ்வளவு அருமையாக நடித்தாரோ, அதைவிடப் பிரமாதமாக, மாது, உண்மைக் கைதியைப் போலவே பயந்து நடுங்கி நடித்தான்!

பூனைமனிதன், மறுபடியும் அந்தக் கப்பலை அண்ணாந்து பார்த்து ஒரு விரலைக் காட்டிச் சைகை காட்டினான். அதற்கு, 'கப்பலிலிருந்து யாராவது ஒருவர் கீழே வாருங்கள்' என்று பொருள்! அதைப் புரிந்து கொண்டதற்கு அடையாளமாகக் கப்பலிலிருந்து ஒரு முரட்டு மனிதன், அந்த நூலேணி வழியாகக் கீழே இறங்கி வந்தான்.

அவனைப் படகுக்குத் தாவி வரும்படி சைகை செய்ததும், பூனைமனிதன், அவன் இறங்கி வந்த நூலேணிக்குத் தாவினான். அதன் வழியாகக் கப்பலின் மேல் ஏறிக் கொண்டதும், மேலே அந்தக் கைதியை அழைத்து

வரும்படி கீழே இருந்த அந்த முரட்டு மனிதனுக்குச் சைகை செய்தான் பூனைமனிதன்.

அவன், மாதுவைப் பார்த்து ஓர் உருட்டு விழி விழித்து அந்த நூலேணி வழியாக மேலே போகச் சொல்லிச் சைகை காட்டி மிரட்டினான். மாது, மிகவும் சங்கடப்பட்டு தன்னுடைய, விரல்களுள்ள ஒற்றைக் கையினாலேயே தாவித் தாவிப் பிடித்துக்கொண்டு மேலே ஏறிப் போனான். மாது, எப்போதாவது மேலே ஏறும்போது கொஞ்சம் தடுமாறினால், பின்னாலேயே வந்த அந்த முரட்டு மனிதன் அவனைத் தாங்கிப் பிடித்துக்கொண்டான்!

இரண்டு பேரும் மேலே போனதும் கொக்கி மாட்டியது போல் இருந்த ஒரு நீண்ட கயிறு, அந்தப் படகின் மேல் விழுந்தது. அது, அந்தப் படகை அப்படியே பற்றிக் கொண்டது. கயிறை மேலே இழுத்தார்கள். அதனோடேயே தொத்திக்கொண்டு அந்தப் படகும் கப்பலுக்கு மேலே போய்விட்டது. அதற்கடுத்தபடியாக நூலேணியும் உள்ளே இழுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வளவு நேரம் வரையும் பூனைமனிதன் அங்கே நின்று காத்துக்கொண்டிருக்கவில்லை. அவன் கப்பலுக்குள்ளே அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தான். சங்கர்லாலின் உயரம், நிறம், சைகை யெல்லாம் அசல் பூனைமனிதனுக்கு இருப்பதைப் போலவே இருந்ததால் இந்தப் புதிய பூனைமனிதனைப் பற்றி அவர்கள் கொஞ்சம் கூட ஐயப்படவே இடம் இல்லாமல் போய்விட்டது!

கைதியைப் போல் நடித்து நடுங்கிக்கொண்டிருந்த மாதுவை என்ன செய்வது என்று தெரிந்து கொள்வதற்காக மாதுவைப் பூனைமனிதன் முன் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அவன், அலட்சியமாகப் பூட்டி வைக்கும்படி சைகை காட்டிவிட்டு மேலே போய்விட்டான்.

கப்பல் நகர்ந்தது.

அது, எந்தத் திசையில் போகிறது, எங்கே கொண்டு போய்ச் சேர்க்கும் என்ற விவரம் ஒன்றும் இந்தப் புதிய பூனைமனிதனுக்குத் தெரியாது!

பூனைமனிதன் ஓர் இடத்தில் நிற்கவில்லை, அந்தக் கப்பல் முழுவதிலும் வளைய வளைய வந்து வட்டமடித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அங்கே உள்ள பல செய்திகளைத் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது.

கப்பல் எவ்வளவு தூரம் போயிருக்கும் என்று அவனுக்குத் தெரியாது. அப்போது அவன் Cat Man என்று ஆங்கிலத்தில் போர்டு தொங்கிக்கொண்டிருந்த தனி அறையிலே தனியாக இருந்தான். எவரோ கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைவதைப்போல் இருந்தது. பூனைமனிதன் கொஞ்சம் திடுக்கிட்டுப் பிறகு எச்சரிக்கையாகி விட்டான். அவனுக்குச் சாப்பாட்டுக்கு வேண்டியதை, யெல்லாம் ஒரு பெரிய தட்டிலே ஏந்திக்கொண்டு உள்ளே நுழைந்தான் ஒருவன்.

அவன், பூனைமனிதனுக்கு முன்னால் இருந்த கட்டில் அவ்வளவையும் வைத்துவிட்டுக் கட்டளைக் காகச் சல்யூட் அடித்துவிட்டுக் காத்துக் கிடந்தான். பூனைமனிதன் அவனை வெளியே போய் இருக்கும்படி சைகை காட்டினான்.

பிறகுதான், அந்தப் பெரிய தட்டில் இருந்ததை யெல்லாம் கவனித்துப் பார்த்தான். அந்தத் தட்டிலே ஏதோ பெயர் தெரியாத, முன் பின் பார்த்திராத பொருள்க ளெல்லாம் இருந்தன! இவற்றை யெல்லாம் தின்று வைப்பதா? எப்படி?

பூனைமனிதன் சுற்றுமுற்றும் பார்த்தான். தட்டில் இருந்த கோதுமைப் பண்டத்தை எதிலேயுமே தொட்டுக் கொள்ளாமல் எடுத்து விழுங்கி வைத்தான். அங்கே உள்ள மற்ற எதையும் உபயோகிக்க அவனுக்குத் துணிச்சலே இல்லை! ஆனால், தன் மேல் ஐயம் வரக் கூடாது என்று கடலை நோக்கித் திறந்திருந்த அந்த அறை சன்னல் வழியாக எல்லாவற்றையும் கொட்டி விட்டுச் சாப்பிட்டு விட்ட மாதிரிக் கிண்டிக்கிளறிக் கோத்தி வைத்துவிட்டான்!

பசி வேகத்திலே ஏதோ கிடைத்ததை வயிற்றில் அடைத்துக்கொண்டான் பூனைமனிதன். ஆனால், மாது வைப்பற்றி நினைக்கும்போது அவனுக்குச் சற்று வருத்த

மாக இருந்தது. அருமை மாதுவை விட்டுவிட்டு, தான் மட்டும் சாப்பிட்டுவிட்டோமே என்று எண்ணும்போது, தன் மேலேயே அவனுக்குக் கோபம் வந்தது.

அவன், மேசையின் இருந்த மணியை வேகமாகத் தட்டினுன். வெளியே காத்திருந்த பணியாள் உள்ளே ஓடி வந்தான். அவனிடம், அவன், அந்த கைதிக்குச் சாப்பாடு வைக்கச் சொல்லிச் சைகை செய்தான். அவனும் பதிலுக்கு அப்படியே செய்வதாகச் சைகையின் மூலம் காட்டிவிட்டுப் போய்விட்டான்.

கொஞ்ச நேரம் ஆயிற்று. பூனைமனிதன், ஐயத்தோடு மாதுவை அடைத்து வைத்திருந்த அடித் தளத்துக்குப் போனுன். மாது, சப்பாத்தியை எதிலேயோ தொட்டுச் சுவைத்துச் சுவையாக சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அவன் பூனைமனிதனை நன்றியோடு பார்த்தான். அவன் முகத்தில் இனம் தெரியாத உணர்ச்சி!

புதுப் பூனைமனிதன், கப்பலில் ஏறி, ஓர் இரவு எப்படியோ கழிந்துவிட்டது. அந்த இரவு அவன் எவ்வளவு ஆழ்ந்து தூங்கினுன் தெரியுமா?

திடீரென்று கடற் பறவைகளின் சத்தம் அவன் காதில் வந்து பாய்ந்தது. வெளியே தலையை நீட்டிப் பார்த்தான் பூனைமனிதன். விடிந்துவிட்டிருந்தது.

அதுமட்டுமல்ல. கொஞ்ச தூரத்திலே ஏதோ மண் திட்டுத் தெரிவதைப்போல இருந்தது. அது, பூனைமனிதன் சொன்ன பெயரில்லாத் தீவோ? அங்கேதான் இந்தக் கப்பலைக் கொண்டுபோய் நிறுத்துவார்களோ?

— இந்தப் புதிய பூனைமனிதன், முடிவை எதிர்பார்த்து ஆவலோடு வெளியிலே பார்வையை ஊன்றிவிட்டிருந்தான்.

கப்பல், அந்த மண் திட்டை நெருங்க நெருங்க அந்தத் திட்டு ஒரு பெரிய உருப்படியான தீவுதான் என்பது அந்தப் பூனைமனிதனுக்குத் தெரிந்தது.

தீவுக்குக் கொஞ்சதூரம் தள்ளியே அந்தக் கப்பலுக்கு நங்கூரம் போட்டுவிட்டார்கள். கப்பல் நின்றது.

உள்ளே இருந்து அந்தக் கொக்கி போட்ட கயிறு வழியாகப் படகைக் கடலுக்குள் இறக்கினார்கள். இதே மாதிரி, பல படகுகள் கப்பலிருந்து மெல்லக் கீழே இறக்கப்பட்டன. ஒவ்வொரு படகிலும் இரண்டிரண்டு பேராக ஏறிப் படகில் உட்கார்ந்துகொண்டு மட மட வென்று துடுப்பைத் தள்ளி விட்டுக்கொண்டு அந்தத் தீவை நோக்கிப் போனார்கள். மாதுவையும் ஒருவன் ஒரு படகில் ஏற்றி உட்கார வைத்துக்கொண்டு அந்தத் தீவை நோக்கிப் போனான். பூனைமனிதனும் ஒரு படகில் ஏறி உட்கார்ந்துகொண்டு அவர்களைப் போலவே அந்தத் தீவுக்குப் போனான்.

கப்பலைச் செலுத்தும் மாலுமிகளும், தலைவனும் மட்டும், இன்னும் இறங்காமல் கப்பலுக்குள்ளேயே இருந்தார்கள். இதிலிருந்து கப்பலை வேறு எங்கேயோ கொண்டு போய் நிறுத்துவார்கள் போலிருக்கிறது என்பதை ஊகித்துக் கொண்டான் பூனைமனிதன்.

அவன், அந்தத் தீவின் கரையில் வந்து நின்றுகொண்டதும் கப்பலை நோக்கிக் கையை ஆட்டினான். கப்பல் நகர்ந்தது, அந்தத் தீவைச் சுற்றிக்கொண்டு எங்கேயோ போனது, அது எங்கே போயிற்று, எங்கே தங்கும் என்பதைப் பற்றியெல்லாம் அவன் அப்போதைக்குக் கவலைப்படவில்லை.

மாதுவை எங்கே கொண்டு போய் அடைக்கிறார்கள் என்பதையே பூனைமனிதன் மிகவும் அக்கறையாக முதலில் கவனித்தான். மாதுவை அடைத்திருக்கும் இடத்தை அவன் திட்டமாகத் தெரிந்துகொண்டபின்தான் அந்தத் தீவைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினான் பூனைமனிதன்.

சில நாட்களுக்குப் பிறகு—

எங்கிருந்தோ ஒரு கப்பல் அந்தத் தீவையே குறி வைத்து வருவது போல் நேராக அந்தத் தீவுக்கே வந்தது. அந்தக் கப்பலிலிருந்து நிறைய ஆட்கள் குதித்து இறங்கினார்கள். இதற்குள் பூனைமனிதனின் ஆட்கள் போய் அவர்களைச் சூழ்ந்துகொண்டார்கள். அவர்களை

யார், என்ன, எங்கே வருகிறார்கள் என்பதையெல்லாம் விசாரித்தார்கள்.

அந்தக் கப்பலில் வந்தவர்களில் தலைவனைப் போல் இருந்த ஒருவன், "நாங்கள் அயர்லாந்திலிருந்து வருகிறோம். எங்கள் நாட்டுக்கு இந்தியாவிலிருந்து சங்கர்லால் என்ற துப்பறியும் நிபுணர் வந்தார். அவர் வந்த கப்பல் நடுவிலே இங்கேதான் எங்கேயோ கவிழ்ந்துவிட்டதாகத் தெரிகிறது. அவர் இங்கே எங்கேயாவது தப்பிக் கரையேறி இருந்தால் அவரை அழைத்துக் கொண்டு போகலாம் என்றுதான் வந்தோம்" என்றான்.

அதற்குப் பூனை மனிதனின் ஆட்கள், "அது சரி, ஆனால், இந்தத் தீவு முழுவதும் தனியான ஒரே நபருக்குச் சொந்தமாயிற்றே? அவருடைய உத்திரவில்லாமல் நீங்கள் இந்தத் தீவுக்குள்ளேயே நுழையக் கூடாதே" என்றார்கள்.

"அப்படியானால் சரி. அவர் இப்போது எங்கே இருக்கிறார்? நீங்கள் வழி காட்டில் நானே நேரில் பேசி அவரிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறேன்" என்றான் அந்தக் குழுத் தலைவன் செயலாற்றும் பொறுப்போடு சற்று முன்னால் நடந்துகொண்டே.

உடனே, பூனைமனிதனின் ஆட்கள் வேகமாக முன்னால் ஓடிப்போய், அவனைத் தடுத்து நிறுத்தினார்கள். "கொஞ்சம் இருங்கள். நீங்கள் அவ்வளவு எளிதாக எங்கள் தலைவரைப் பார்க்க முடியாது. நீங்கள் இங்கேயே இருங்கள். நீங்கள் சொன்ன விவரம் எல்லாம் சொல்லி, நானே அவரிடம் உத்தரவு கேட்டுக்கொண்டு வருகிறேன்" என்று முன்னால் ஓடினான் பூனைமனிதனின் ஆட்களில் பருமனமாக இருந்த ஒருவன்.

பூனை மனிதனின் வேடத்திலே கொஞ்சம் அயர்ந்திருந்த சங்கர்லால், எதிர்பாராத அந்த அறைக் கதவு திறந்ததைக்கண்டு திடுக்கிட்டு துப்பாக்கியில் கையை அழுத்திப் பிடித்துக்கொண்டு எழுந்து நின்றார்.

அந்த அறைக்குள் நுழைந்த பூனை மனிதனின் ஆளை கூட அப்போது கொஞ்சம் நடுங்கிவிட்டான்!

சங்கர்லால் அவனிடம், 'என்ன வேண்டும்' என்று அதட்டிக் கேட்கலாமென்று நினைத்தார். ஆனால், பூனை மனிதன்தான், தன்னுடைய தோழர்களோடேயே பேச மாட்டானே! அது, அவருக்குத் தெரியும். அதனால், 'என்ன வேண்டும்?' என்று கேட்கின்ற மாதிரித் தலையை மேலும் கீழும் ஆட்டினார்.

அவன், மிகவும் பணிந்த குரலில், "அயர்லாந்திலிருந்து ஒரு கப்பல் வந்திருக்கிறது. அவர்கள் யாரோ இந்தியத் துப்பறியும் நிபுணர் சங்கர்லாலைத் தேடிக்கொண்டு வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தக் குழுத் தலைவர் தங்களைப் பார்க்க வேண்டும் என்கிறார். தங்கள் உத்தரவுப்படி செய்துவிடத் தயாராயிருக்கிறோம். என்ன செய்ய?" என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் சங்கர்லால், தன் முகத்திலே எந்த வகையான பரபரப்பையும் காட்டிக் கொள்ளவில்லை. முகத்தை மாறுதலாக வைத்துக் கொள்ளவுமில்லை. சங்கர்லால், மிகவும் சாதாரணமாக அவன் சொன்னதையெல்லாம் கேட்டார். கொஞ்சநேரம் யோசித்தார். பிறகு, அந்தக் குழுத் தலைவனை அழைத்துக்கொண்டு வரும்படி அந்த ஆளுக்குச் சைகை காட்டினார்.

அயர்லாந்துக் கப்பலில் வந்தவர்களின் குழுத் தலைவர் பெர்னட், பூனை மனிதனின் அறைக்குள் நுழைந்தார். பூனை மனிதன், அவரை வரவேற்றுக் கை குலுக்கி, அங்கே கிடந்த நாற்காலி ஒன்றில் உட்காரச் சொன்னான். பெர்னட் அங்கிருந்த நாற்காலியில் மெல்ல உட்கார்ந்தார்.

பூனை மனிதன், சன்னலில் நீண்ட செம்பிலிருந்த தண்ணீரைக் கொஞ்சம் ஊற்றிக் குடித்துவிட்டு, திறந்திருந்த கதவைத் தாளிட்டுவிட்டுப் பெர்னட்டுக்கு எதிரே இருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்தான்.

பெர்னட் விழித்தார்.

பூனை மனிதன் சிரித்துக்கொண்டே, "உங்கள் பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா ?" என்று கேட்டான்.

"ஓ. தாராளமாய்த் தெரிந்து கொள்ளுங்கள். என் பெயர் பெர்னுட்" என்ருர் பெர்னுட்.

"ஐயா பெர்னுட், நான் இப்பொழுது சொல்லப் போகும் விவரம் எல்லாம் மகத்தான இரகசியங்கள். பொறுப்புள்ள செய்திகள். நான் சொல்லும் இந்த விவரங்களைக் கேட்ட பிறகு, உங்களுடைய தவிர்க்க முடியாத கடமையை நீங்கள் செய்தாக வேண்டும். அதற்கு முன், முதலில் நான் யார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுத் தன் பூனை முகமூடியைக் கழற்றிப் பக்கத்தில் வைத்தான், பூனை மனிதன்!

அந்த முகத்தைப் பார்த்ததும், "சங்கர்லால்" என்று துள்ளிக் குதித்துச் சங்கர்லாலைக் கட்டிக்கொண்டார் அவர். அவர், சங்கர்லாலை நேரில் பார்த்ததில்லை. ஆனால், அவர் புகைப்படத்தை அடிக்கடி பார்த்திருக்கிருர்.

சங்கர்லால், ஆனந்தம் நிறைந்த அழுத்தமான அவர் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, "ஐயா பெர்னுட், விவரம் முழுவதையும் கேளுங்கள், விரிவாகச் சொல்ல நேரமில்லா விட்டாலும் சுருக்கமாகச் சொல்லுகிறேன். விவரங்கள் முழுவதையும் சொன்ன பிறகு, நீங்கள் மேற்கொண்டு செய்யவேண்டியவற்றையும் நான் சொல்லுகிறேன். அதன்படி நீங்கள் செய்யுங்கள். எல்லாம் நன்கு முடியும்" சங்கர்லால்.

"ஆகட்டும், சங்கர்லால், நீங்கள் சொல்லுகிற விவரங்கள் முழுவதையும் கவனமாகக் கேட்கிறேன். அதற்குப் பிறகு நான் என்ன செய்ய வேண்டும் என்பதையும் நீங்கள் சொல்லுங்கள். அதன்படி நான் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுகிறேன். உங்களை உயிரோடு பார்த்ததே எங்களுக்கெல்லாம் ஒரு மகத்தான முதல் வெற்றி. எங்கள் நாட்டிற்கு உதவி செய்ய வந்த தாங்கள், நடுக்கடலில், கப்பல் விபத்தில் காணுமல் போனதைப்பற்றி எங்கள் அரசாங்கம் அளவுக்கு மிஞ்சிக் கவலைப்பட்டது.

“தங்களைக் காணுமல் தவிக்கும் இந்திய அரசாங்கத்தாருக்கு உங்களைப்பற்றியே ஏங்கி, நிற்கும் இந்திய உள்ளங்களுக்கு, என்ன பதில் சொல்லுவது என்று ஏங்கினேம். நீங்கள் உயிரோடிருப்பதைக் கேட்டால் எங்கள் அரசாங்கம் எவ்வளவு மகிழ்ச்சிகொள்ளும் தெரியுமா ? இந்தியர்கள் எவ்வளவு இன்பமடைவார்கள் தெரியுமா ?” என்ருர் மிக மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் பெர்னுட்.

“அதிருக்கட்டும் பெர்னுட், விவரம் முழுவதையும் கேளுங்கள்” என்று சொல்லிவிட்டு விவரம் முழுவதையும் அவரிடம் சொல்லத் தொடங்கினுர் சங்கர்லால் !

“அயர்லாந்து அரசாங்கம் இந்திய சர்க்கார் மூலம் எனக்கு அனுப்பிய அழைப்பை நான் ஏற்றுக்கொண்டேன். அந்த அழைப்பில், தனிப்பட்ட மனிதன் ஒருவனுல் அயர்லாந்திலுள்ள பெரும் பணக்காரர்களுக்கெல்லாம் அடிக்கடி தொந்தரவு ஏற்படுவதாகவும், அந்தத் தனி மனிதனைப் பிடிக்க அயர்லாந்து அரசாங்கம் எவ்வளவு பாடுபட்டும் முடியவில்லை என்றும், நான் வந்துதான் அந்தத் தனி மனிதனைப் பிடித்துத் தரவேண்டுமென்றும், அவசியம் வந்து, அந்தத் தனி மனிதனைப் பிடித்துத் தந்து, ஆளுவோருக்கு இருக்கும் தொந்தரவை விலக்க வேண்டுமென்றும் கண்டிருந்தது.

“நான் இந்திய அரசாங்கத்தின் உதவியால் கப்பலில் புறப்பட்டேன். இங்கே சமீபத்தில் ஏற்பட்ட புயலால், கப்பல் உடைந்து அனைவரும் ஆளுக்கொரு திசையில் தூக்கி எறியப்பட்டோம். அந்த விபத்திலிருந்து என்னைக் காப்பாற்றிக்கொள்ள, நான் செய்த முயற்சியில், மற்றவர்களைப்பற்றி நினைக்கக்கூட எனக்கு நேரமில்லாமல் போய் விட்டது. நான், பல நாட்கள் நீந்தி, ஒரு சாதாரணச் சிறு தீவை அடைந்தேன். என்னுடைய சமையற்காரன் மாதுவும் எப்படியோ உயிர் தப்பி அதே தீவை வந்து அடைந்தான். அவன் நீந்தி வரும் பொழுது, சுருமீன் ஒன்று, அவன் விரல்களில் நான்கைத் தின்றுவிட்டது. நான் இதுவரை அடைந்த மகிழ்ச்சிகளில், அவனை உயிரோடு பார்த்ததுதான் பெரிய மகிழ்ச்சி என்று நினைக்

சுரங்கத்திலுள்ள அத்தனை திரவியங்களையும், பொருள்களையும் அந்தக் கப்பலில் ஏற்றிச் சென்று அயர்லாந்து அரசாங்கத்திடம் ஒப்படையுங்கள்.

" நானும் மாதுவும் அயர்லாந்திலிருந்தே ஆகாய விமானத்தில் இந்தியா சேருகிறோம். இவ்வளவுதான் விவரம். இனிமேல் உங்கள் கையில்தான் எல்லாம் இருக்கிறது" என்று கூறிமுடித்தார் சங்கர்லால்.

" அப்படியே செய்கிறேன் சங்கர்லால். உங்கள் ஆதரவு மட்டும் எனக்கு எப்பொழுதும் இருக்கட்டும்" என்று சொல்லிவிட்டு, அடுத்த நிமிடமே வெளியே கிளம்பினார் பெர்னுட்.

சுபம்

இருபது நாட்களுக்குப் பிறகு—

சங்கர்லால், அயர்லாந்திலிருந்து அரசாங்க மரியாதையுடன் பொன்னையும் பொருளையும் கோடிக்கணக்கில் குவித்துக்கொண்டு, விமானத்தில் வந்து சேர்ந்தார்.

விமான நிலையத்தில் பெரும் கூட்டம். " சங்கர்லால் வாழ்க! சங்கர்லால் வாழ்க!" என்று எழுந்த வாழ்த்தொலி வானைப் பிளந்தது!

விமானத்திலிருந்து சங்கர்லால் இறங்கினார். அவருக்குப் பின்னாலேயே மாதுவும் இறங்கினான்.

சங்கர்லால் இறங்கித் தரையில் நின்றதும் ஓடிவந்து ஓர் உருவம், அவர் காலடியில் துவண்டு விழுந்தது! அந்த உருவம் யார்?

அவன்தான் நிழல் மனிதன்!

சங்கர்லால், சட்டென்று அவனைத் தூக்கிக் கட்டிக்கொண்டார். நிழல் மனிதன் கடைவிழிகளில் கண்ணீர் தேங்கியிருந்தது. அது ஆனந்தக் கண்ணீர்தான்!

முற்றும்